ததः || ௩௭ ||

அத யமலக்ஷணம் ||

த்விபுஜ: க்ருஷ்ணவர்ணஶ்ச கட்ககேடகஸம்யுத: |
கராலதம்ஷ்ட்ரவதந: ரக்தமால்யாநுலேபந: || ௩௮ ||

ரக்தவஸ்த்ரயமஶ்சோக்ர: கிரீடமகுடாந்வித: |
தீப்தாக்நிஸத்ருஶாக்ஷஶ்ச மஹாமஹிஷவாஹந: || ௩௯ ||

களும், வெண்மையான ஆடையும், நாகாபரணமும், மதிமுகமும், உடையவர்களாய், பத்திரபீடப்பலகையில், ஸுகாஸநத்தில் இருப்பவர்களாவார்கள். இடது முழங்காலில் இடது கையை வைத்துக்கொண்டு வலது கையை ஸூசீ முகமாக (சுட்டிக்காட்டுவதுபோல)வைத்துக்கொண்டிருப்பார்கள். இவ்விதமாக பிதிருக்களின் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி வைவஸ்வத (யம)னுடைய லக்ஷணத்தைக் கூறுகிறேன். (37)

யம லக்ஷணம்.

யமன், இரண்டு கைளும், கருத்த மேனியும், கைகளில் கத்தியும் கேடயமும் தரித்து, பயங்கரமான தித்திப்பற்களுடன்கூடிய முகமும், சிவப்பு மாலையும், செஞ்சந்தனப் பூச்சும், சிவப்பு வஸ்திரமும் தரித்து, பயங்கரமான உருவமுடையவனாய், கிரீடமகுடம் பூண்டு, அனல்வீசும் அக்கினி போன்ற கண்களையுடையவனாய், பெரியதோர் மஹிஷ வாஹநத்திலிருப்பவனாவான். (39)

வைவஸ்வதஸ்ய பார்ஶ்வே து ஸமீபஸ்தௌ க்ரஹோக்ரகௌ
சித்ரகுப்த: கின்னரஶ்ச அக்ரபார்ஶ்வே து ஸம்ஸ்திதௌ ||

க்ருஷ்ணஶ்யாமநிபௌ தௌ ச ரக்தவஸ்த்ரயுதாந்விதௌ |
பீடபார்ஶ்வே ஸ்திதௌ ம்ருத்யுஸஹிதாவுக்ரதேஜஸௌ ||

தீப்ரரோஹிதஸங்காஶௌ வா அங்காரகநிபௌ ஸ்த்ரியௌ |
சாமரஹஸ்தஸ்திதௌ அக்ரே ஶர்மவர்மாஹ்வயௌ || ௪௨ ||

யமஸ்ஸிம்ஹாஸநாஸீந: மஹிஷோ ரோஹித: ததா (பரிவா) ஸ்தித: |
யமலக்ஷணமாக்யாதம் ரோஹிணீலக்ஷணம் ஶ்ருணு || ௪௩ ||

யமனுடைய பக்கங்களில் அருகாமையில் க்ரஹன், உக்ரன் என்பவர்களும், முன்பக்கங்களில், சித்திரகுப்தனும், கின்னரனும் இருப்பார்கள். இவ்விருவரும் கருப்பு நிறமும் பச்சை நிறமும் உடையவர்களாய், சிவப்புவஸ்திரங்களணிந்திருப்பவர்களாவார்கள்.

பீடத்தின் பக்கத்திலிருப்பவர்கள் பயங்கரமான பராக்கிரமமுடையவர்களாய், மிருத்தியுவுடன் இருப்பார்கள். இவ்விருவரும் நெருப்பைப்போன்ற அல்லது கருப்பும் சிவப்பும் கலந்த நிறமுடையவர்களாவார்கள்.

யமனுக்கு முன்பக்கத்தில் இரண்டு ஸ்திரீகள் சாமரம் தரித்து நிற்பார்கள். அதற்கு முன்பக்கத்தில் சர்மன், ஶர்மன் என்பவர்கள் நின்றுகொண்டிருப்பார்கள். (42)

யமன் ஸிம்ஹாஸநத்தில் வீற்றியிருப்பவனாவான். யமனுடைய வாஹநமான மஹிஷம் (எருமை) செம்பட்டை நிறமுடையதாம். (அல்லது யமன் மஹிஷத்தின்மீது உட்கார்ந்துகொண்டிருப்பான்.) இவ்விதமாக யம லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி ரோஹிணியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (43)

𑌅𑌥 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌾 𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑌾 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾 𑌸𑍁𑌶𑍋𑌭𑌨𑌾 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌨𑌾𑌗𑌹𑌸𑍍𑌤𑌾 𑌸𑌿𑌤𑌾𑌂𑌬𑌰𑌾 ॥ ௪௪ ॥

𑌆𑌸𑍀𑌨𑌾 𑌵𑌾 𑌸𑍍𑌥𑌿𑌤𑌾 𑌵𑌾𑌪𑌿 𑌸𑌪𑍍𑌤𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌹𑌿 𑌰𑍋𑌹𑌿𑌣𑍀 ।
𑌰𑍋𑌹𑌿𑌣𑍍𑌯𑍇𑌵𑌂 𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾 𑌨𑍈𑌰𑍃𑌤𑍇𑌰𑍍𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌶𑍃𑌣𑍁 ॥ ௪௫ ॥

𑌅𑌥 𑌨𑍈𑌰𑍃𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌨𑍈𑌰𑍃𑌤𑌿𑌰𑍍𑌨𑍀𑌲𑌵𑌰𑍍𑌣𑌸𑍍𑌤𑍁 𑌦𑍍𑌵𑌿𑌹𑌸𑍍𑌤𑌶𑍍𑌚 𑌮𑌹𑌾𑌤𑌨𑍁𑌃 ।
𑌖𑌡𑍍𑌗𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌚 𑌖𑍇𑌟𑌕𑌮𑍍 ॥ ௪௬ ॥

𑌪𑍀𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌧𑌰𑍋 𑌰𑍌𑌦𑍍𑌰𑌃 𑌕𑌰𑌾𑌲𑍋𑌗𑍍𑌰𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌕𑌃 ।

ரோஹிணீ லக்ஷணம்.

ரோஹிணீ தேவியானவள், இரண்டு கைளும், கரண்ட மகுடமும், சிவப்பு நிறமும், மங்களகரமான உடலும் உடையவளாய், வெளுப்பு ஆடையுடுத்தி, ஸகல ஆபரணங்களையும் அணிந்து, ஸர்ப்பத்தைக் கையில் வைத்துக்கொண்டு உட்கார்ந்த வடிவமாகவோ நின்ற வடிவமாகவோ இருப்பவளாவாள். ரோஹிணீ தேவிகள் ஏழு பேர்களாவார்கள். இவ்விதமாக ரோஹிணியின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி நைர்ருதியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. (45)

நைர்ருதி லக்ஷணம்.

நைர்ருதியானவன், நீலநிறமும், இரண்டு கைகளும், பெரிய உடம்பும், வலது கையில் கத்தியும் இடது கையில் கேடயமும் உடையவனாய், பீதாம்பரம் தரித்து, கொடுமையுடன் பயங்கரமான தித்திப்பற்களுடன்கூடிய முக்முடைய

ஸர்வாலங்காரஸம்யுக்த꞉ ஶவாரூடோ ஜடத்ருதி꞉ ॥ ௪௭ ॥

நைர்ருத்யாதிபலோகாத்ய꞉ ததஸ்த்வப்ஸரஸ꞉ ஶ்ருணு ।

அத அப்ஸரோலக்ஷணம் ॥

அதிகாந்தியுதாஸ்தா꞉ கேஶஹாராலகாந்விதா꞉ ॥ ௪௮ ॥

நாநாபந்தஸம்யுக்தா꞉ நாநாபுஷ்பைரலங்க்ருதா꞉ ।

துகூலவஸநாஸ்ஸர்வா꞉ பீநோருஜகநஸ்தநா꞉ ॥ ௪௯ ॥

ஸூக்ஷ்மமத்யாஸ்ஸுரூபாஶ்ச கிஞ்சித்விஹஸிதாநநா꞉ ।

நாநாகந்தாநுலிப்தாங்கா꞉ பத்ரபீடோபவிஷ்டிதா꞉ ॥

ஸமபங்கயுதாஸ்ஸப்தஸங்க்யா அப்ஸரஸாம் கணா꞉ ।

ஏவமப்ஸரஸ꞉ ப்ரோக்தா꞉ வருணஸ்யாத வக்ஷ்யதே ॥ ௫௧ ॥

வனாய், ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, சவ வாஹனத்திலிருப்பவனாவான். (47)

இவன் நைர்ருத லோகதேவனாவான். இவ்விதம் நைர்ருதியின் லக்ஷணம் கூறப்பட்டது இனி அப்ஸரஸ்ஸுகளின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

அப்ஸரஸ்ஸுகளின் லக்ஷணம்.

அப்ஸரஸ்ஸுகள் அதிக ஒளியும், கூந்தலும் முன்னுச்சியும், பற்பலவிதமான கூந்தல் முடிச்சும், பலவிதமான புஷ்பாலங்காரமும், வெண்பட்டாடையுமுடையவர்களாய், பருத்த துடை, பிருஷ்ட பாகம், ஸ்தநங்களையுடையவர்களாய், சிறுத்த இடையும், அழகிய வடிவமும், சிரித்த முகமும், பற்பலவிதமான வாசனைப்பூச்சுமுடையவர்களாய், பத்திரபீடத்திலிருப்பவர்களாவார்கள். அப்ஸரஸ்ஸுகள் 7 பேர்களாவார்கள். இவர்கள் ஸமபங்கத்திலிருப்பவர்களாவார்கள். அப்ஸரோ லக்ஷணம் கூறப்பட்டது. இனி வருண லக்ஷணத்தைக் கூறுகிறேன். (51)

𑌅𑌥 𑌵𑌰𑍁𑌣𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||

𑌵𑌰𑍁𑌣𑌃 𑌶𑍍𑌵𑍇𑌤𑌵𑌰𑍍𑌣𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌃 𑌪𑌾𑌶𑌹𑌸𑍍𑌤𑌕𑌃 |
𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 || ௫௨ ||

𑌪𑍀𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍁𑌗𑍋𑌪𑍇𑌤𑌃 𑌮𑌹𑌾𑌬𑌲𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 |
𑌯𑌜𑍍𑌞𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑌮𑌾𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌮𑌕𑌰𑌾𑌸𑌨𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 || ௫௩ ||
[𑌵𑌾𑌰𑍁𑌣𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌮𑍃𑌷𑍀𑌣𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂
𑌶𑍃𑌣𑍁 |]

𑌅𑌥 𑌸𑌪𑍍𑌤𑌰𑍍𑌷𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ||

𑌋𑌷𑌯𑌃 𑌪𑍀𑌤𑌵𑌰𑍍𑌣𑌾𑌃 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌨𑌾𑌨𑌾𑌵𑌰𑍍𑌣𑌾𑌮𑍍𑌬𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 || ௫௪ ||

𑌵𑍃𑌦𑍍𑌧𑌾𑌶𑍍𑌚 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑌾𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌾𑌃 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 |
* 𑌦𑍍𑌵𑌿𑌪𑌾𑌕𑌾𑌹𑍃𑌦𑌯𑌾𑌙𑍍𑌗𑌾𑌶𑍍𑌚 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌸𑌂𑌯𑍁𑌤𑌾𑌃 || ௫௫ ||

வருண லக்ஷணம்.

வருணன், வெளுப்பு நிறமுடையவர். அவர் இரண்டு கைகளும், கையில் பாசமுமுடையவராவார். ஸகல ஆபரணங்களையுமணிந்து, கரண்டமகுடம் தரித்து, பீதாம்பரமுடுத்தியிருப்பவராவார். வருணன் மஹாபலம் பொருந்தியவராவ்ர். அவர் பூணூலணிந்து, மகராஸநத்தின்மேல் வீற்றியிருப்பவராவார். இவ்விதமாக வருணனுடைய லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி இருடிகளின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. (53)

ஸப்தர்ஷி லக்ஷணம்.

ஸப்தர்ஷிகள், மஞ்சள் நிற வடிவமும், பல நிறமுள்ள ஆடை தரித்தும், முதிர்ந்த வயதும், இரண்டு கைகளும்,

---

* 𑌅𑌪𑌾𑌕𑌾𑌹𑍃𑌦𑌯𑌾𑌙𑍍𑌗𑌾𑌶𑍍𑌚 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌮𑍍 | 𑌹𑍃𑌦𑌯𑌙𑍍𑌗𑌮𑍍𑌪𑌕𑌾𑌶𑌰𑍍𑌸𑍍𑌤𑍁 𑌇𑌤𑌿 𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌾𑌠𑌃 𑌇𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿.

𑌸𑌶𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌭𑍂𑌷𑌿𑌤𑌾𑌃 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂 𑌵𑌾𑌸𑌨𑌂 𑌤𑍁 𑌵𑌾 ।
𑌦𑌣𑍍𑌡𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌛𑌤𑍍𑌰𑌂 𑌵𑌾𑌮𑌕𑌰𑍋𑌦𑍍𑌧𑍃𑌤𑌮𑍍 ॥
𑌛𑌤𑍍𑌰𑌦𑌣𑍍𑌡 𑌵𑌿𑌨𑌾 𑌵𑌾𑌪𑌿 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌜𑍍𑌞𑌾𑌨𑌮𑍁𑌦𑍍𑌰𑌿𑌕𑌾 ।
𑌵𑌾𑌮𑌜𑌾𑌨𑍂𑌪𑌰𑌿𑌨𑍍𑌯𑌸𑍍𑌤 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥ ௫௭ ॥

𑌭𑍃𑌗𑍍𑌵𑌙𑍍𑌗𑌿𑌰𑌸𑍋𑌽𑌗𑌸𑍍𑌤𑍍𑌯𑌃 𑌵𑌸𑌿𑌷𑍍𑌠𑍋 𑌗𑍌𑌤𑌮𑌸𑍍𑌤𑌥𑌾 ।
𑌵𑌿𑌶𑍍𑌵𑌾𑌮𑌿𑌤𑍍𑌰𑍋 𑌭𑌰𑌦𑍍𑌵𑌾𑌜𑌃 𑌋𑌷𑌯𑌸𑍍𑌸𑌪𑍍𑌤 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾𑌃 ॥ ௫௮ ॥
[𑌋𑌷𑍀𑌣𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌵𑌾𑌯𑍁𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।]

சாந்தமான தோற்றமும், சடைமுடியணியும், மார்புடன் அமைந்த முகவாய்க்கட்டையும் (மார்பு வரையில் நீண்ட தாடியும்) பூணூலும், மூன்று பட்டையாக அணிந்த விபூதியும், (விபூதி—திருநீறு) வலது கையில் தண்டமும், (தண்டம்—தடி) இடது கையில் குடையும், உடையவர்களாய், நின்ற வடிவமாகவோ, உட்கார்ந்த வடிவமாகவோ இருப்பவர்களாவார்கள். (56)

அல்லது தடி குடை இல்லாமல் வலது கையில் சின்முத்திரை தரித்து, இடது கையை இடது முழங்காலின் மேலே வைத்துக்கொண்டிருக்கும் வடிவமாகவும் இருக்கலாம்.

[நின்ற வடிவமானல், தடியும் குடையுங்கொண்டிருக்க வேண்டுமென்றும், உட்கார்ந்த வடிவமானல் சின்முத்திரையும், முழங்காலின்மேலே வைத்த கையுமாக இருக்கவேண்டுமென்று கொள்ளவேண்டும்.] (57)

பிருகு, அங்கிரஸ்ஸு, அகத்தியர், வஸிஷ்டர், கௌதமர், விசுவாமித்திரர், பரத்வாஜர், இவர்கள் ஸப்தர்ஷிகள் ஆவார்கள்.

ஸப்தர்ஷி லக்ஷணம் கூறப்பட்டது. வாயுவின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (58)

அத வாயுலக்ஷணம் ॥

த்விபாஹுஸ்து மஹாவீர்ய: தூம்ராக்ஷோ தூம்ரவர்ணக: ।
த்வஜம் சைவ தக்ஷிணே ஹஸ்தே வாமஹஸ்தே து தண்டப்ருத் ॥

ஸாகுஞ்சிதபுஜாயுக்த: ஶபலாம்பரபூஷித: ।
நாநாலங்காரஸம்யுக்த: விசலத்கேஶபந்தந: ॥ ௬௧ ॥

ஸிம்ஹாஸநோபவிஷ்டஸ்து ஶீக்ரயாத்ரோத்ஸுக: ஸ்ம்ருத: ।
வாயுரேவம் ஸமாக்யாத: ருத்ரலக்ஷணமுச்யதே ॥

அத ருத்ரலக்ஷணம் ॥

சதுர்புஜாஸ்த்ரிநேத்ராஶ்ச ஜடாமகுடமண்டிதா: ।
ஶ்யாமவஸ்த்ரதராஶ்சைவ ஶுக்லவர்ணா: ப்ரகீர்த்திதா: ॥

வாயு லக்ஷணம்.

வாயுபகவான், மஹாபலம் பொருந்தியவராவார். வாயு இரண்டு கைகளும், புகை நிறமும், புகைநிறக் கண்களும், சபள நிறமான உடையும் (சபளம் – பலநிறங்களும் கலந்து நிச்சயிக்கமுடியாத நிறம்.) வளைத்து வைத்துக் கொள்ளப்பட்ட கைகளும், அசையும் கூந்தல் முடிச்சும், பலவித ஆபரணங்களுமுடையவராவார். வலது கையில் துவஜமும், இடது கையில் தண்டமுமுடையவராவார். ஸிம்ஹாஸநத்திலிருப்பவராவார். வேகமாகச் செல்ல விருப்பமுடையவர். வாயு லக்ஷணம் கூறப்பட்டது. இனி ருத்திரனின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (61)

ஏகாதச ருத்திர லக்ஷணம்.

உருத்திரர்கள், 4 கைகளும், 3 கண்களும், சடைமுடியணியும், பச்சை உடையும், வெளுத்தமேனியும், பற்பல

𑌹𑌾𑌰𑌾𑌦𑌿𑌕𑍇𑌯𑍂𑌰𑌾𑌦𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌰𑌿𑌷𑍍𑌠𑌿𑌤𑌾𑌃 ।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣 𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑌰𑍍𑌵𑍇(𑌨𑌾𑌨𑌾)𑌪𑍁𑌷𑍍𑌪𑌮𑌾𑌲𑍍𑌯-
𑌾𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌾𑌃 ॥ ௬௫ ॥

𑌅𑌭𑌯𑌂 𑌪𑌰𑌶𑍁𑌃 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌵𑌾𑌮𑍇 𑌹𑍍𑌯𑌾𑌕𑌸𑍍 𑌹𑌰𑌿𑌣𑍋 𑌵𑌰𑌮𑍍 ।
𑌮𑌹𑌾𑌦𑍇𑌵𑌶𑍍𑌶𑌿𑌵𑍋 𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌶𑌙𑍍𑌕𑌰𑍋 𑌨𑍀𑌲𑌲𑍋𑌹𑌿𑌤𑌃 ॥

𑌈𑌶𑌾𑌨𑍋 𑌵𑌿𑌜𑌯𑌶𑍍𑌚𑍇𑌶𑌃 𑌦𑍇𑌵𑌦𑍇𑌵𑍋 𑌭𑌵𑍋𑌦𑍍𑌭𑌵𑌃 ।
𑌕𑌪𑌾𑌲𑍀 𑌚𑍇𑌤𑌿 𑌜𑍍𑌞𑍇𑌯𑌾𑌃 𑌰𑍁𑌦𑍍𑌰𑌾 𑌏𑌕𑌾𑌦𑌶 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ॥
[𑌰𑍁𑌦𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌸𑍋𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।]

𑌅𑌥 𑌸𑍋𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌸𑍋𑌮𑌸𑍍𑌸𑌿𑌂𑌹𑌾𑌸𑌨𑌾𑌸𑍀𑌨𑌃 𑌕𑍁𑌨𑍍𑌦𑌶𑌙𑍍𑌖𑌨𑌿𑌭𑌦𑍍𑌯𑍁𑌤𑌿𑌃 ।
𑌪𑍍𑌰𑌭𑌾𑌮𑌣𑍍𑌡𑌲𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌦𑍍𑌵𑌿𑌬𑌾𑌹𑍁𑌶𑍍𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌕𑌃 ॥ ௬௬ ॥

அணிகளும், பற்பல புஷ்பமாலைகளும், உடையவர்களாவார்கள். வலது கைகளில், அபயமும்-மழுவும், இடது கைகளில்; வரதமும்-மானுமுடையவர்களாவார்கள்.

இவர்கள், நின்றவடிவமானால், ஸமபாதமாகவும், உட்கார்ந்த வடிவமானால், பத்மபீடத்தின்மீதும் இருக்க வேண்டும்.

இவர்கள், மஹாதேவன், சிவன், உருத்திரன், சங்கரன், நீலலோஹிதன், ஈசானன், விஜயன், ஈசன், தேவதேவன், பவோத்பவன், கபாலி, என்று பெயருடைய 11 பேர்களாகும். உருத்திர லக்ஷணம் கூறப்பட்டது. இனி ஸோம லக்ஷணத்தைக் கூறுகிறேன். (65)

சந்திர லக்ஷணம்.

சந்திரன் ஸிம்ஹாஸநத்திலிருப்பவராவார். அவர், முல்லை, சங்குபோன்ற நிறமும், மண்டலாகாரமாக வீசும்

𑌶𑍁𑌕𑍍𑌲𑌾𑌭𑍋 𑌵𑌾 𑌹𑌰𑌿𑌤𑍋 𑌵𑌾𑌽𑌪𑌿 𑌕𑍁𑌮𑍁𑌦𑍋𑌤𑍍𑌪𑌲𑌹𑌸𑍍𑌤𑌕𑌃 ।
𑌸𑍌𑌮𑍍𑌯𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌾𑌙𑍍𑌗𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ॥ ௧௭ ॥

𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌸𑍍𑌰𑌗𑌾𑌢𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵(𑌶𑍁𑌕𑍍𑌲)𑌪𑍁𑌷𑍍𑌪𑍈𑌰𑌲𑌙𑍍𑌕𑍃𑌤𑌃 ।
[𑌸𑍋𑌮𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌪𑌾𑌲𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌶𑍃𑌣𑍁 ।]

𑌅𑌥 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌪𑌾𑌲𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌃 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑌪𑌾𑌲𑌸𑍍𑌤𑍁 𑌸𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑌯𑍋𑌗𑌤𑌃 ॥

𑌶𑍍𑌵𑍇𑌤𑍋 𑌰𑌕𑍍𑌤𑌸𑍍𑌤𑌥𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑌃 𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌾𑌦𑌿𑌗𑍁𑌣𑍈𑌰𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌦𑍍𑌵𑌿𑌚𑌤𑍁𑌰𑍍𑌹𑌸𑍍𑌤𑌷𑌡𑍍𑌬𑌾𑌹𑍁𑌃 𑌰𑌾𑌜𑌸𑍋𑌽𑌷𑍍𑌟𑌭𑍁𑌜𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௧௧ ॥

தேஹகாந்தியும், 2 கைகளும், ஸௌமியமான முகமும், ஸுவர்ணயஜ்ஞோபவீதமும் (தங்கப் பூணூலும்) ஸகல ஆபரணங்களாலும் அலங்காரமும், வெண்மையான உடையும், பற்பல (வெண்மையான) புஷ்பங்களாலாகிய அலங்காரமும் உடையவராய், கைகளில் ஆம்பலும் நீலோத்பலமும் ஏந்தி, சாந்தமான ஆகாரத்துடன், நின்ற வடிவமாகவோ, உட்கார்ந்த வடிவமாகவோ, இருப்பதாம். சந்திர லக்ஷணம் கூறப்பட்டது. இனி க்ஷேத்திரபால(பைரவ) லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

க்ஷேத்ரபாலக(பைரவ)லக்ஷணம்.

க்ஷேத்திரபாலக மூர்த்தியானது, ஸத்துவகுண பிரதானமானது, ரஜோகுண பிரதானமானது, தமோகுண பிரதானமானது என மூன்று விதமாகும். ஸத்துவ மூர்த்தியானது, வெளுப்பு நிறமாகவும், ரஜோகுண மூர்த்தியானது சிவப்பு நிறமாகவும், தமோகுண மூர்த்தியானது கருப்பு நிறமாகவும் இருப்பவைகளாம். ஸத்துவ மூர்த்திக்கு 2 அல்லது 4 கைகளும், ரஜோமூர்த்திக்கு 6 கைகளும், தமோ

தாமஸஸ்யாஷ்டதோர்தண்டஃ த்ரிநேத்ரோ பைரவாதிகஃ |
ஸ்தாநகே ஸமபாதம் ஸ்யாத் பத்ரபீடமதாபி வா || ௭0 ||

ஶூலம் து தக்ஷிணே ஹஸ்தே கபாலம் சைவ வாமகே |
த்விஹஸ்தே ஸாத்விகாக்யாதஃ சதுர்ஹஸ்தே ச கத்யதே ||

பரஹஸ்தே து ஸவ்யே ஸ்யாத் கட்வாங்கம் கட்கமந்யகே |
பூர்வஹஸ்தத்வயே சாபி அபயம் வரதம் ததா || ௭௨ ||

பூர்வவத் பரஹஸ்தௌ ச கண்டா ஸ்யாத் வாமஹஸ்தகே |
ஸாத்விகம் ஹ்யேவமாக்யாதம் ராஜஸம் ஶ்ருணு ஸுவ்ரத ||

ஶூலம் பாஶம் ச டங்கம் ச தக்ஷிணே து கரத்ரயே |
கேடகம் ச கபாலம் ச நாகபாஶம் ச வாமகே || ௭௪ ||

மூர்த்திக்கு 8 கைகளுமாம். ஸ்தாநக மூர்த்தியானால் ஸம பாதமாம். (ஆஸநமானால்) பத்மபீடம் அல்லது பத்திர பீடத்திலிருப்பதாகும். பைரவ மூர்த்தியானது 3 கண் களுடையதாகும். (70)

பைரவரின் ஸத்துவ மூர்த்தியானது 2 கைகளுடனிருந் தால், வலது கையில் சூலமும் இடது கையில் கபாலமும் இருப்பதாகும்.

4 கைகளிருந்தால், வலது பரபுஜத்தில் கட்வாங்கமும் இடது கையில் கத்தியும், பூர்வ ஹஸ்தங்களில் அப்பயவரத மும் இருப்பதாகும். (கட்வாங்கம்–பரமேசுவரனுக்குரிய ஆயுதவிசேஷம்.) (72)

அல்லது பரஹஸ்தங்கள் முன்போலவும் பூர்வஹஸ்தம் இடது கையில் மணியுமிருப்பதுமாகும்.

இவ்விதம், ஸாத்விக மூர்த்தியின் லக்ஷணம் கூறப் பட்டிருக்கிறது. ஏ ஸுவ்ரத! இனி ராஜஸ மூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. (73)

தாமஸே து தநுர்பாணம் தக்ஷிணே தக்ஷிணேதரே |

ஶேஷம் ராஜஸவத் ப்ரோக்தம் ரக்தகேஶோர்த்வகேஶக꞉ ॥ ௭௫ ||

உக்ரத்ருஷ்டிஸமாயுக்த꞉ நாநாநாகவிபூஷித꞉ |

த்ரிநேத்ரஶ்சாக்நிஸங்காஶ꞉ கர்தவ்ய꞉ க்ஷேத்ரபாலக꞉ ||

[க்ஷேத்ரபாலலக்ஷணம் ப்ரோக்தம் ஈஶாநஸ்ய து லக்ஷணம் ஶ்ருணு |]

அத ஈஶாநலக்ஷணம் ||

ஈஶாநோ த்விபுஜ꞉ ப்ரோக்த꞉ ஸிதவஸ்த்ரவிபூஷித꞉ |

ஜடாமகுடஸம்யுக்த꞉ ஸர்வாலங்காரஸம்யுத꞉ || ௭௭ ||

ராஜஸ மூர்த்தியானது, வலது கைகள் மூன்றிலும், சூலம்–கத்தி–மணி இவைகளையும், இடது கைகள் மூன்றிலும் கேடயம்–கபாலம்–நாகபாசம் இவைகளையுமுடையதாகும். (74)

தாமஸ மூர்த்தியானது, இடது கையில் வில்லும், வலது கையில் அம்புமுடையதாம். மற்ற கைகளில் ராஜஸ மூர்த்திக்குக் கூறிய ஆயுதங்களேயாம்.

(தாமஸ மூர்த்தியானது) சிவப்பு நிறமாகவும் ஊர்துவ முகமாகவும் இருக்கும் சிகாமண்டலமும், உக்கிரமான திருஷ்டியும், பல நாகங்களை அணிந்தும், 3 கண்களுடையதாகவும், நெருப்புப்போன்ற வடிவமுடையதாகவும் செய்யத்தக்கதாகும். (76)

இவ்விதம் பைரவ லக்ஷணம் கூறப்பட்டுள்ளது இனி ஈசான லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

ஈசாந லக்ஷணம்.

ஈசான மூர்த்தியானது, 2 கைகளுடையதாம். வெளுப்பு நிறமும், வெளுப்பு வஸ்திரமுமுடையதாம். ஸகலவித

ஶுக்லயஜ்ஞோபவீதஸ்து ஶுக்லபத்மோபரி ஸ்தித꞉ ।
ஶூலம் தக்ஷிணஹஸ்தே து கபாலம் வாமஹஸ்தகே ॥ ௭௮ ॥

ஏவமீஶானரூபம் ஸ்யாத꞉ ஶ்ருணு ஸூர்யலக்ஷணம் ।

அத ஆதித்யலக்ஷணம் ॥

த்விபுஜா꞉ பத்மஹஸ்தாஸ்து ரக்தபத்மாஸனே ஸ்திதா꞉ ॥ ௭௯ ॥

ரக்த(ரத்ன)மண்டலஸம்யுக்த கரண்டமகுடான்விதா꞉ ।
ரக்தாம்பரதரா꞉ ஸர்வே ஸர்வாபரணபூஷிதா꞉ ॥ ௮௦ ॥

சன்னவீரஸமாயுக்தா꞉ ஸூர்யா த்வாதஶ ஸம்ஸ்ம்ருதா꞉ ।
விகர்த்தனோ விவஸ்வாம்ஶ்ச மார்த்தாண்டோ பாஸ்கரோ ரவி꞉ ॥

ஆபரணங்களையுமணிந்து, ஜடாமகுடமும் பூநூலும் அணிந்து, வலது கையில் சூலாயுதமும் இடது கையில் கபாலமும் ஏந்தி, வெண்தாமரைமலரில் வீற்றியிருப்பதாம். இவ்விதம் ஈசான லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி ஆதித்தியர்களின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

ஆதித்திய லக்ஷணம்.

ஆதித்தியர்கள், 2 கைகளும், 2 கைகளிலும் செந்தாமரை மலர்களை ஏந்தியும், செந்தாமரை மலரில் உட்கார்ந்து கொண்டுமிருப்பவர்களாவார்கள். (79)

சிவப்பு நிறமாய் வட்டமாக இருக்கும் (வட்டமாகப் பதிப்பிக்கப்பட்ட ரத்தினங்களுடன்கூடிய) கரண்டமகுடத்தை அணிந்திருப்பவர்களாவார்கள். சிவப்பு ஆடையுடுத்தி, ஸகலவிதமான அணிகலங்களையுமணிந்து, சன்னவீரம் தரித்து இருப்பவர்களாவார்கள். இவ்விதமான ஆதித்தியர்கள் 12 பேர்களாவார்கள்.

1. விகர்த்தநன் 2. விவஸ்வான் 3. மார்த்தாண்டன்

லோகபால: ப்ரகாஶஶ்ச லோகஸாக்ஷீ த்ரிவிக்ரம: |
ஆதித்யஶ்ச ததா ஸூர்ய: அம்ஶுமாலீ திவாகர: || ௮௨ ||

ஏதே வை த்வாதஶாதித்யா: உத்தராதிக்ரமாத் ஸ்திதா: |
ஏவம் ஷோடஶஸங்க்யாதா: த்வாத்ரிம்ஶதத வக்ஷ்யதே ||

அத அனந்தலக்ஷணம் ||

ஸௌம்யஞ்சதுர்புஜோபேத: ஸர்வாபரணபூஷித: |
ஜபாபுஷ்பநிபாகார: கரண்டமகுடாந்வித: || ௮௪ ||

ஸிதவஸ்த்ரதர: ஶாந்த: த்ரிநேத்ர: பத்மஸம்ஸ்தித: |
அபயம் வரதம் டங்கம் ஶூலஞ்ச தாரயன் கரை: || ௮௫ ||

---

4. பாஸ்கரன் 5. ரவி 6. லோகபாலன் 7. பிரகாசன் 8. லோகஸாக்ஷீ 9. த்ரிவிக்ரமன் 10. ஆதித்தியன் 11. ஸூரியன் 12. அம்சுமாலீ எனப்படும் திவாகரன் ஆகிய 12 பேர்களும் துவாதசாதித்தியர்களாவார்கள். (82)

இவர்கள் வடக்கிலிருந்து முறையே இருப்பவர்களாவார்கள்.

இவ்விதமாக 16 பரிவார மூர்த்திகளின் லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி 32 பரிவார மூர்த்திகளின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (83)

அனந்த லக்ஷணம்.

அநந்த மூர்த்தியானது, ஸௌமியமான வடிவமுடையதாகும். 4 கைகளுடையதாம். ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதாம். சம்பரத்தம்பூவைப்போன்ற நிறமுடையதாம். கரண்டமகுடத்தை அணிந்திருப்பதாம். வெளுப்பு வஸ்திரம் தரித்ததாம். சாந்தமான முகமுடையதாம். 3 கண்களுடையதாம். கைகளில், அபயம்—வரதம்—உடுக்கை—சூலம் இவைகளை ஏந்தி, பத்மாஸநத்திலிருப்பதாம். (85)

𑌅𑌥 𑌅𑌰𑍍𑌕𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌅𑌰𑍍𑌕𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ।
𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌸𑌦𑍃𑌶𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌃 𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௮௭ ॥

𑌅𑌭𑌯𑌂 𑌵𑌰𑌦𑌂 𑌚𑌾𑌪𑌿 𑌖𑌡𑍍𑌗𑌂 𑌖𑍇𑌟𑌂 𑌕𑌰𑍈𑌰𑍍𑌵𑌹𑌨𑍍 ।
𑌆𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍇 𑌤𑍁 𑌆(𑌸𑍂)𑌰𑍍𑌯𑌮𑍇𑌵𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥

𑌅𑌥 𑌭𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌭𑌵𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌃 𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌃 ।
𑌅𑌤𑌿𑌰𑌕𑍍𑌤𑌸(𑌤𑌨𑍁)𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ॥ ௮௮ ॥

𑌹𑌿𑌰𑌣𑍍𑌯𑌸𑌦𑍃𑌶𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌃 𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।
𑌅𑌭𑌯𑌵𑌰𑌦𑍌 𑌚 𑌶𑍂𑌲𑌪𑌾𑌶𑌧𑌰𑍋 𑌭𑌵𑌃 ॥ ௮௯ ॥

அர்க்கன் லக்ஷணம்.

அர்க்கன் சாந்தமான வடிவமும் 4 கைகளும் உடையவராவார். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பார். ஸுவர்ணம்போன்ற மேனியும் வெண்பட்டாடையும் உடையவராவார். கைகளில் அபயம்--வரதம்—கத்தி—கேடயம் இவைகளை ஏந்தியிருப்பவராவார். பத்ம பீடத்தில் உட்கார்ந்திருப்பவராவார். இவ்விதம் ஆரியனை (ஸூரியனை) கல்பிக்கவேண்டும். (87)

பவ லக்ஷணம்.

பவன், சாந்தமான வடிவமுடையவராவார். மிகச் சிவந்த மேனியும் 4 கைகளுமுடையவராவார். ஜடா மகுடம் தரித்து, ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பார். அவருடைய மேனி ஸுவர்ணம்போன்றதாகும். வெண் பட்டாடையுடுத்தியிருப்பார்.. கைகளில் அபயம்–வரதம்– சூலம்–பாசம் இவைகளை ஏந்தியிருப்பவராவார். (89)

அய ஊஜ-ஹ்ஷணம் ||

ஸொ,மிஹஸ்ஹ வயொவெதஃ ஸௌஹ்யாஜ்ஜொ வ விநெகுகஃ |
[ஸொ,மிஹஸ்ஹ வயொவெதாஃ ஸௌஹ்யாஜ்ஜாநொ (வாதாஃ)
விநெகுகாஃ |]

வதுதஸைஸ-டிஸீ(ரா:) ஶாஹ்ரா(:) ஸவ-ாஹரண-
ஹஷிதா(:) || கூ0 ||

நாநா,மஹாநா-ஹிவ்ாவா(ஂமாஃ) வா(நாநா)வ-ஷொவ-
ஶொஹிதா(:) |

கரண்டகை-டொவெதா(:) வஜ்மபீடொவரிஷ்டிதா(ஃ) || கூக ||

அய அவ்ஸரோஜகஷண்டு ||

கிஞ்சிவிலக்ஷ(ஹ)க-க்ஷ்யஶ்ச பீநொர-ஜவநஹூதா: |
டி-கமுகுவட்டிவா(ஹெஶ)ஂமெ: நாநாவஹ்ரயநா வரா: ||

மருத்துக்களின் லக்ஷணம்.

மருத்துக்கள், (மருத்து-வாயு) சாந்தமான உருவம் படைத்தவர்களாவார்கள். இரு கைகளிலும் ஸர்ப்பங்களை தரித்துக்கொண்டிருப்பார்கள். இரண்டு கண்களுடைய வர்கள். மிக்க அழகும் சாந்தமுமுடையவர்கள். ஸகல ஆபரணங்களையும் அணிந்து, பற்பல வாஸனை திரவியங் களையும் பலவித புஷ்பங்களையும் அணிந்திருப்பார்கள். கரண்ட மகுடம் தரித்து பத்மபீடத்தில் இருப்பவர்களா வார்கள். (91)

அப்ஸரஸ்ஸுகளின் லக்ஷணம்.

அப்ஸரஸ்ஸுகள், பயிர்போன்று பசுமையான நிற முடையவர்களாவார்கள். சிறிது விலக்ஷணமான (சிறிது ஒட்டிய) வயிறு உடையவர்கள். பருத்த துடை-பிருஷ்ட பாகம்-ஸ்தநங்களையுடையவர்களாவார்கள். தங்க ஜரிகை

ஸஸ்யஶ்யாமநிபாகாரா ரக்தோத்பலயுதா: கரே |
ஜாநுலம்பஹஸ்தாஶ்ச ஸர்வே (ஸர்வாஸ்து) ஸமபங்கிகா: ||

அத கௌரீலக்ஷணம் ||

ஸூக்ஷ்மாங்கி நீலாபா (ஸஸ்யஶ்யாமதநு:) ஶாந்தா ஹேம-
வஸ்த்ரயுதா வரா |
சதுர்புஜா த்ரிநேத்ரா ச ஸர்வாபரணபூஷிதா ||
அபயம் வரதம் டங்கம் ஶூலம் ச ததீ கரை: |
கௌரீலக்ஷணமாக்யாதம் யதா ஸகலலக்ஷணே || ௯௩ ||
தஸ்யைவ காரயேத்தீமாந் ஸத்வப்ரதாநகாம் |

களுடன் கூடிய பல்நிற பட்டாடைகளை அணிந்திருப்பார்கள். ஒரு கையில் செந்தாமரை மலரேந்தி மற்றொரு கையை முழங்கால்வரையில் தொங்கவிட்டுக்கொண்டு இருப்பவர்களாவார்கள். இவர்கள் யாவரும் ஸமபங்க லக்ஷணமுடையவர்களாவார்கள். (93)

கௌரீ லக்ஷணம்.

கௌரீ தேவியானவள், மெல்லிய உடலும் நீலநிறமுமுடையவளாவாள். (பயிர்போன்ற பசுமை நிறமுடையவளாவாள்). சாந்தமான தோற்றமுடையவள். ஸுவர்ண வர்ணமுடைய ஆடையை அணிந்திருப்பவளாவாள். 4 கைகளும் 3 கண்களுமுடையவளாவாள். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவளாவாள். கைகளில், அபயம்-வரதம்-டங்கம் (உளி)-சூலம்-இவைகளை தரித்திருப்பாள். இவ்விதமாக ஸகல லக்ஷணத்தில் கௌரீ லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

சுத்த ஸத்வ பிரதானமான இந்த மூர்த்தியை புத்திமானயிருப்பவன், கூறியுள்ளபடியே செய்து ஸ்தாபிக்க வேண்டும்,

𑌅𑌥 𑌶𑌰𑍍𑌵𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌶𑌰𑍍𑌵𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍁𑌜𑌶𑍍𑌶𑌾𑌨𑍍𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ॥ ௧௬ ॥

𑌜𑌟𑌾𑌮𑌕𑍁𑌟𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌶𑌙𑍍𑌖𑌕𑍁𑌨𑍍𑌦𑍇𑌨𑍍𑌦𑍁𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌃 ।

𑌅𑌭𑌯𑌂 𑌵𑌰𑌦𑌂 𑌖𑌡𑍍𑌗𑌂 𑌖𑍇𑌟𑌕𑌂 𑌚 𑌵𑌹𑌨𑍍 𑌕𑌰𑍈𑌃 ॥ ௧௭ ॥

𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌰𑌿𑌷𑍍𑌠𑌸𑍍𑌤𑍁 𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌃 𑌶𑌰𑍍𑌵 𑌏𑌵𑌹𑌿 (𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃) ।

𑌅𑌥 𑌵𑌿𑌰𑌿𑌞𑍍𑌚𑌿𑌧𑍍𑌯𑌾𑌨𑌮𑍍 ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌕𑍍𑌤𑍍𑌰𑌶𑍍𑌚𑌤𑍁𑌰𑍍𑌬𑌾𑌹𑍁𑌃 𑌹𑍇𑌮𑌾𑌕𑍍𑌷𑌃 𑌸𑌰𑍍𑌵(𑌰𑍍𑌵)
𑌭𑍂𑌷𑌣𑌃 ॥ ௧௮ ॥

𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌜𑌿𑌨𑍋𑌤𑍍𑌤𑌰𑍀𑌯𑌸𑍍𑌤𑍁 𑌯𑌜𑍍𑌞𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ।

𑌶𑍁𑌕𑍍𑌲𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌪𑌰𑍀𑌧𑌾𑌨𑌃 𑌸𑌕𑌟𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌮𑍇𑌖𑌲𑌃 ॥ ௧௯ ॥

சர்வ லக்ஷணம்.

சர்வ மூர்த்தியானது, சங்கு-முல்லை-சந்திரன்-இவைகளைப்போல வெண்மையான நிறமுடையது. 4 கைகள் உடையதாம். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பதாம். ஜடாமகுடத்தை தரித்திருப்பதாம். கைகளில், அபயம்-வரதம்-கத்தி-கேடயம்-இவைகளை ஏந்தியிருப்பதாம். பத்மாஸநத்தில் ஸ்தாநகமாக இருப்பதாம். இவ்விதம் சர்வ லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

பிரம்ஹதேவ லக்ஷணம்,

பிரம்ஹதேவர், 4 முகங்களும், 4 கைகளும். பொன்னிறக் கண்களுமுடையவராவார். ஸர்பங்களை ஆபரணங்களாக அணிந்திருப்பவராவார்? [ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவராவார்.] வெண்பட்டாடையுடுத்தி, மான் தோலை உத்தரீயமாகக் கொண்டிருப்பவராவார். பூநூலணிந்திருப்பார். அரை ஞாணுடன் மேகலை என்னும் கட்டுவாரு

ஶுக்லமால்யாங்கராகஸ்து கர்ணே குண்டலபூஷித: |
தக்ஷிணே சாக்ஷமாலாம் ச கூர்சம் சைவ து
தாரயேத் || ௧௧ ||

கமண்டலும் குஶம் வாமே தக்ஷிணே ஸ்ருக்ஸ்ருவௌ
ததா |

ஆஜ்யஸ்தாலீம் குஶாம்ஶ்சைவ வாமஹஸ்தே து தாரயேத் ||

அபயவரதௌ பூர்வஹஸ்தௌ வாம விஶேஷத: |
ஶூலந்தே தத்ஹயாங்க்ரீ ச ஸோமயேத்து வரஸ்ப்ருஶம் ||

* தேவத்ஸோமோபவீதாத்து வாமஹஸ்தாத்யுபவேஶகம் |

மணிந்திருப்பார். வெண்சந்தணம் பூசி வெண்மையான மாலையுமணிந்திருப்பார். காதுகளில் குண்டலங்களையணிந் திருப்பார்.

வலது கைகளில், ஜபமாலையும் கூர்ச்சமும் (கூர்ச்சம்-தர்பத்தால் முறைபுடன் செய்யப்பட்ட ஒருவித முடிச்சு) இடது கைகளில் கமண்டலமும் (கிண்டிபோன்ற அமைப் புடைய பாத்திரம்.) குசமும் (தர்ப்பப்புல்) தரித்திருப் பவராவார்.

அல்லது, வலதுகைகளில் ஸ்ருக்-ஸ்ருவம்-இவைகளையும் இடது கைகளில் ஆஜ்யஸ்தாலீ-தர்ப(முஷ்டி)ம் - இவை களையும் தரித்திருப்பவராவார். [ஸ்ருக்-ஸ்ருவம் இவைகள் யாகங்களில் ஹோமம் செய்ய ஸாதனமாக, மரத்தால் செய்யப்பட்ட கருவிகள். இவைகள், சிறிய முட்டைக் கரண்டியைப்போல் இருக்கும்]

---

* தேவத்ஸோமோபவீ ந்யஸ்ய வாமஸ்தோப்யுபவேஶம் கரம் |
ஸவ்யஹஸ்தம் ச தஸ்யோபரி. ததா ந்யஸ்ய ஸமாஸ்தித: ||
இதி பாடாந்தரம்.

ஸவ்யஹஸ்தம் ச தயோர்மத்யே தத்ர ந்யஸ்ய ஸமாஸ்திதம் ||
தக்ஷிணே அக்ஷமாலாம் ச வாமஹஸ்தே கமண்டலும் |
ஸரஸ்வதீ தக்ஷவாமே ஸாவித்ரீ வாமபார்ச்வகே || ௪௮ ||
ஸ்தானகே வா ஸ்திதே வாபி பத்மபீடோபரி ஸ்தித: |

அத சிவோத்தமலக்ஷணம் ||

சிவோத்தம: ச்வேதவர்ண: சதுர்புஜஸமன்வித: || ௪௯ ||
ஸர்வாபரணஸம்யுக்த: சுக்லவஸ்த்ரோபவீதக: |
நேத்ரத்வயஸமாயுக்த: கரண்டமகுடான்வித: || ௫௦ ||

அல்லது, ஆஸநத்தில் உட்கார்ந்துகொண்டு முன். கைகளை வரதமாகவும் அபயமாகவும் வைத்துக்கொண்டு, இரு கால்களையும் ஒன்ருேடொன்று பின்னிப் பிணைத்து வைத்துக்கொண்டு, மேட்ர மூலத்திற்குமேலே (அதாவது நடு மடியில்) இரு கைகளில் இடதுகையை மேலே நோக்கி வைத்து அதன்மேலே வலதுகையையும் முன்போலவே மே நோக்காகவே வைத்துக்கொண்டு, இருப்பவராவார்.

அல்லது, முன் கைகள் அபயம் வரதமாகவும், புறக் கைகளில் வலக்கையில் ஜபமாலையும் இடக்கையில் கமண்டலமும் கொண்டிருப்பதுமாம்.

வலது பக்கத்தில் ஸரஸ்வதியும் இடது பக்கத்தில் ஸாவித்திரியுமிருப்பார்கள்.

நின்ற வடிவமானுலும் உட்கார்ந்த வடிவமானுலும் பிரம்மதேவர் பத்மபீடத்திலிருப்பதாகும்.

சிவோத்தம லக்ஷணம்.

சிவோத்தம மூர்த்தியானது, வெளுப்பு நிறமும் 4 கைகளும் 2 கண்களும் ஸகல ஆபரணங்களாலும் அலங்காரமும் வெளுப்பு வஸ்திரமும் பூநூலும் கரண்ட மகுடமு

அபயம் வரதம் ஶூலம் பாஶம் சாபி ததத் கரை: |
பத்மபீடோபவிஷ்டஸ்து ஸ்தாநக: ஸமபாதக: || ௱எ ||

அத ப்ருகுலக்ஷணம் ||

ப்ருகுஶ்ஶாந்தவிக்ரஹ: ஶுக்லவஸ்த்ரதரஸ்ததா |
கரண்டமகுடோபேதோ ஹஸ்தத்வயஸமந்வித: || ௱அ ||

அபயவரதோபேத: ஸர்வாபரணபூஷித: |
ஸ்தாநகோ வாஸநோ வாபி பத்மபீடே ப்ருகுஶ்ஶுப: ||

அத ஈஶாகஸ்த்யகௌஶிகைகநேத்ரலக்ஷணம் ||

பூர்வவத்தேவதீஶாநம் ததாகஸ்த்யம் ச கல்பயேத் |
அகஸ்த்யவத் கௌஶிகம் ச ஸ்தாபயேத் ஸ்தாபகோத்தம: ||

முடையதாகும். கைகளில், அபயம்—வரதம்—சூலம்—பாசம் இவைகளை ஏந்தியிருப்பதாகும். பத்ம பீடத்தில் ஸம பாதமாகவும் ஸ்தாநகமாகவுமிருப்பதாகும். (107)

பிருகுமுனிவரின் லக்ஷணம்.

பிருகுமுனிவர், சாந்தமான வடிவமுடையவராவார். வெண்மையான வஸ்திரமும், 2 கைகளும் உடையவராவார். கரண்ட மகுடம் தரித்தவராவார். 2 கைகளிலும் அபயமும் வரதமும் தரித்திருப்பவராவார். ஸகல ஆப்ரணங்களையும் அணிந்திருப்பவராவார். ஸ்தாநகவடிவமானாலும், ஆஸந வடிவமானாலும், பத்மபீடத்தில் இருப்பதாகும். இந்த மூர்த்தியானது சுபகரமானதாகும். (109)

ஈசு- அகஸ்திய-கௌசிக-ஏகநேத்ர லக்ஷணம்.

ஈச லக்ஷணம் முன்னமே (பவ லக்ஷணத்தில்) கூறப் பட்டுவிட்டது. அகஸ்திய லக்ஷணத்தையும் (ஸப்தர்ஷி லக்ஷணத்தில்) முன்பு கூறியதுபோலவே கொள்ளவும். கௌசிக லக்ஷணமும் அவ்விதமேயாம்.

[illegible] |
[illegible] ॥ ௱௧௧ ॥

[illegible] |
[illegible] ॥ ௱௧௨ ॥

[illegible] ॥

[illegible] |
[illegible] ॥ ௱௧௩ ॥

[illegible] |
[illegible] ।

[illegible] |

ஏக நேத்திரமூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களும், சம்பரத்தம் பூவின் நிறமும், வெண்பட்டாடையும், சாந்தமான உருவமும் உடையதாய் ஜடாமகுடம் தரித்து ஸகல அலங்காரங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, கைகளில், அபயம்-வரதம்-டங்கம்-சூலம் இவைகளை தரித்து இருப்பதாகும்.

விக்கினேசுவர–ஸரஸ்வதீ லக்ஷணம்.

தேசிகோத்தமன், முன்பு கூறியுள்ள லக்ஷணத்துடன் விக்கினேசுவரரை செய்து ஸ்தாபிக்கவேண்டும்.

ஸரஸ்வதி தேவியானவள், 4 கைகளும், வெளுப்பு நிறமும், வெளுப்பு ஆடையும் உடையவளாவாள். வெண்தாமரை மலரில் உட்கார்ந்திருப்பவளாவாள். அழகிய கண்களையுடையவளாவாள். யஜ்ஞோபவீதமணிந்து, முக்தாஹாரமும் அணிந்திருப்பவளாவாள். ஜடாமகுடம் (சடையாலாகிய மகுடம்) தரித்திருப்பவளாவாள்? வலது கைகளில் வியாக்கியான முத்திரையும் (சின்முத்திரையும்)

[illegible]

[illegible]
[illegible]

[illegible]

[illegible]
[illegible]

[illegible]
[illegible]

[illegible]

ஜபமாலையும், இடது கைகளில் புஸ்தகமும் குண்டிகையும் (கிண்டி) தரித்திருப்பவளாவாள். மூன்று கண்களும் அழகிய உருவமுமுடையவளாவாள். ருக்கு—யஜுஸ்—ஸாம—என்ற மறைகளாலும் முனிவர்களாலும் ஸேவிக்கப் பட்டிருப்பவளாவாள். வாக்குக்கு அதிதேவதையான ஸரஸ்வதிதேவீ, இத்தகைய லக்ஷணங்களுடையவளென்று கூறப்பட்டிருக்கிறது.

லக்ஷ்மீ லக்ஷணம்.

லக்ஷ்மீ தேவியானவள், பத்மாஸநத்தில் உட்கார்ந்திருப்பவளாவாள். இரண்டு கைகளும் பொன்னிற மேனியுமுடையவளாவாள். காதில் கற்கள் பதித்த பொன்னோலையணிந்திருப்பவளாவாள். நல்ல யௌவனப்பருவமும், அழகிய அங்க அமைப்பும், வளைந்த புருவமும், அழகு நிறைந்த விலாஸமும் உடையவளாவாள். சிவந்த கண்களும் புருந்த (சதைப்பத்துள்ள) கன்னங்களும், ரவிக்கை அணிந்த ஸ்தநங்களுமுடையவளாவாள். தலை அணியும்

𑌸𑌂𑌬𑍁𑌜𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌵𑌾𑌮𑍇 𑌶𑍍𑌰𑍀𑌫𑌲𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ॥

𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌾 𑌪𑍃𑌥𑍁𑌶𑍍𑌰𑍋𑌣𑍀 𑌶𑍋𑌭𑌨𑌾𑌮𑍍𑌬𑌰𑌵𑍇𑌷𑍍𑌟𑌿𑌤𑌾 ।
𑌮𑍇𑌖𑌲𑌾𑌕𑌟𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌾 𑌚 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌾 ॥ ௱௨௰ ॥

𑌅𑌥 𑌏𑌕𑌰𑍁𑌦𑍍𑌰-𑌪𑌶𑍁𑌪𑌤𑌿-𑌵𑌸𑍁𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌏𑌕𑌾𑌕𑍍𑌷𑌸𑌦𑍃𑌶𑌶𑍍𑌚𑍈𑌕𑌰𑍁𑌦𑍍𑌰𑌃 𑌕𑌾𑌯𑍇𑌨𑍋 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
𑌪𑌶𑍁𑌪𑌤𑌿𑌂 𑌚 𑌤𑌦𑍍𑌵𑌤𑍍𑌤𑍁 𑌜𑍍𑌞𑌾𑌤𑌵𑍍𑌯𑌂 𑌦𑍇𑌶𑌿𑌕𑍋𑌤𑍍𑌤𑌮𑍈𑌃 ॥

𑌧𑌰𑍋 𑌧𑍍𑌰𑍁𑌵𑌶𑍍𑌚 𑌸𑍋𑌮𑌃 𑌶𑍍𑌚 𑌆𑌪𑌶𑍍𑌚𑌾𑌨𑌲 𑌏𑌵 𑌚 ।
𑌅𑌨𑌿𑌲𑌶𑍍𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍂𑌷𑌃 𑌪𑍍𑌰𑌭𑌾𑌵(𑌸)𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 ॥

𑌵𑌸𑌵𑍋𑌷𑍍𑌟𑍌 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 𑌵𑍈 𑌰𑌕𑍍𑌤𑌵𑌰𑍍𑌣𑌾 𑌦𑍍𑌵𑌿𑌦𑍋𑌰𑍍𑌯𑍁𑌤𑌾𑌃 ।
𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌾𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇 𑌶𑍂𑌲𑌿𑌨𑍋 𑌵𑌾 𑌽𑌸𑌿𑌤𑌾𑌶𑍍𑌚 𑌵𑌾 ॥

முன் தலையின் இரு பக்கங்களிலும் அணியும் சங்கசக்ர வடிவமான நெத்திச் சுட்டியும் உடையவளாவாள். வலது கையில் தாமரை மலரும், இடது கையில் பில்வப்பழமும் வைத்திருப்பவளாவாள். அழகிய இடுப்பும் பருத்த பிருஷ்ட பாகமும், அழகிய வஸ்திராலங்காரமும், ஒட்டியாணமும் அரைநூல் மாலையும் அணிந்து, ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டும் இருப்பவளாவாள்.

ஏகருத்திர–பசுபதி–வஸு–லக்ஷணம்.

ஏகருத்திரன் – பசுபதி – இவர்களை, ஏகாக்ஷருத்திர னுக்குக் கூறிய லக்ஷணப்படியே செய்யவேண்டும்.

தரன், துருவன், ஸோமன், ஆபதேவன், அநலன், அநிலன், பிரத்யூஷன், பிரபாவ(ஸ)ன் என்ற பெயருடைய 8 பேர்களும் வஸுக்கள் எனப்படுவார்கள்.

இவர்கள் சிகப்புநிறம் உடையவர்களாவார்கள். இரண்டு கைகளுடையவர்களாவார்கள். இவர்கள் எல்

வஸ்த்ரவேதிகஹஸ்தாஶ்ச ஸர்வாபரணபூஷிதா: |
கரண்டமகுடோபேதா: ஸாத்விகாஶ்ச ப்ரகீர்த்திதா: ||

அத மஹாதேவ-த்ரிமூர்த்தி-தநதேந்த்ர லக்ஷணம் ||

கர்தவ்ய: பஶுபதிவத் மஹாதேவோ விஶேஷத: |
ஏகருத்ரவத் கர்தவ்யஸ்த்ரிமூர்த்திர்விசக்ஷண: || ௱௨௫ ||

தநதஸ்ஸர்வயக்ஷேஶஸ்ஸர்வாபரணபூஷித: |
தப்தகாஞ்சநஸங்காஶ: ஹஸ்தத்வயஸமந்வித: || ௱௨௬ ||

வராபயஹஸ்தஸ்து கதா வா வாமஹஸ்தகே |
வஜ்ரவீரோபவிஷ்டஸ்து த்விநேத்ரோ நரவாஹந: || ௱௨௭ ||

லோருமே பீதாம்பரம் உடுத்தியிருப்பவர்களாவார்கள். இவர்கள் உட்கார்ந்த வடிவமாகவோ அல்லது நின்ற வடிவமாகவோ இருப்பதாகும். கைகளில் கத்தியும் கேடயமுமேந்தி இருப்பவர்களாவார்கள். ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு, கரண்டமகுடமணிந்து இருப்பவர்களாவார்கள். இவர்கள், பயங்கரமான ரூபமுடையவர்கள். அல்லது ருத்திரனின் அம்சம் படைத்தவர்கள் என்று கூறப்பட்டிருக்கிறது.

மஹாதேவ-த்ரிமூர்த்தி-தநத-இந்திர லக்ஷணம்.

மஹாதேவ மூர்த்தியை பசுபதி மூர்த்தியைப்போல செய்யவேண்டும். த்ரிமூர்த்தியை ஏகருத்திரனைப் போல் செய்யவேண்டும்.

ஸகல யக்ஷர்களுக்கும் அதிபனான குபேரன், உலையில் இட்ட தங்கம்போன்ற நிறமுடையவராவார். 2 கைகளும் 2 கண்களுமுடையவராவார். ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பவராவார். இருகைகளிலும் அபயமும் வரதமுமுடையவராவார். அல்லது இடதுகையில் கதை வைத்

ரக்தாம்பரதரஶ்சைவ ஶங்கபத்மநிதீயுத: |
ஶங்கபத்மநிதீ தௌ ச பூதாகாரௌ மஹாபலௌ ||

ஆஸீநௌ பத்மபீடே து பத்மஹஸ்தௌ விஶேஷத: |
கரண்டமகுடோபேதௌ ஸிதவாஸோத்தரீயகௌ ||

தக்ஷிணேऽதக்ஷிணே ஶங்கநிதி: பத்மநிதி: க்ரமாத் |
குபேரஸ்ய து வாமே ச தேவீம் குர்யாத் ஸலக்ஷணாம் ||

குபேரோ ஹ்யேவமாக்யாத: ப்ராகுக்தேந்த்ரம் ப்ரகல்பயேத் |

அத காலாக்நிருத்ரலக்ஷணம் ||

காலாக்நிருத்ரமூர்த்தேஸ்து லக்ஷணம் வக்ஷ்யதேऽதுநா ||
சதுர்புஜஸ்த்ரிணேத்ரஶ்ச ஜ்வாலாமாலாவிபூஷித: |

திருப்பதுமாம். பத்மபீடத்தில் இருப்பவராவார். இவருக்கு நரவாகனமாம். (நரவாகனம்-மனிதர்களால் சுமக்கப்படும் பல்லக்கு) இவர் சிகப்பு வஸ்திரமணிந்திருப்பார். சங்கநிதி-பத்மநிதிகளுடன் இருப்பவராவார்.

சங்கநிதி-பத்மநிதி இரண்டுபேரும் பூதம் போன்ற பெரிய உடலும் அதிக பலமுமுடையவர்களாம். கைகளில் தாமரை மலர்களுடன் பத்மபீடத்தில் உட்கார்ந்திருப்பவர்களாகும், வெளுப்புவஸ்திரமுடுத்தி, கரண்ட மகுடம் பூண்டு இருப்பவர்களாம். வலது பக்கத்தில் சங்கநிதியும் இடது பக்கத்தில் பத்மநிதியும் இருப்பதாகும்.

குபேரனின் இடது பக்கத்தில் லக்ஷணத்துடன் தேவிரூபத்தை அமைக்கவேண்டும். இவ்விதம் குபேரலக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது.

இந்திரனை முன்பு கூறியுள்ளபடியே அமைக்கவேண்டும்.

காலாக்கிநி ருத்திர லக்ஷணம்.

காலாக்கினி ருத்திர மூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறு

வஹ்நிவேதிகஸம்யுக்த: பயபாங்காயதேஹ: வர: || ௱௩௨ ||

ரக்தவஸ்த்ரயுதோ பாலசந்த்ர ஸர்வாபரணபூஷித: |

ரக்தோர்த்வகேஶஸம்யுக்த: ஸிம்ஹாஸநோபரிஸ்தித: ||

சதுர்புஜஸ்த்ரிநேத்ரஶ்ச நீலோத்பலஸமப்ரப: |

கரண்டமகுடோபேத: ஸர்வாபரணபூஷித: || ௱௩௪ ||

அபயவரதோபேத: டங்கஶூலயுத: பர: |

ரக்தவஸ்த்ரஸமாயுக்த: பத்மபீடோபரி ஸ்தித: || ௱௩௫ ||

அத நாகதேவலக்ஷணம் ||

ஶ்ரீகண்டோ ஹ்யேவமாக்யாத: நாகதேவஸ்யோச்யதே |

த்ரிநேத்ரஶ்சதுர்புஜஸ்ஸௌம்யோ ரக்தாபஸ்த்வஸிதாம்பர: ||

கிறேன். அந்த மூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களுமுடையதாகும். தீச்சுடர்போல ஒளியுடன் விளங்குவதாகும். இளம்பிறை சந்திரனும், சிவப்பு ஆடையும் அணிந்து, ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருப்பதாகும். சிவப்பு நிறமாய் செங்குத்தாக உயர்ந்த மயிர்களுடன் பயங்கரமான உருவமுடையதாய் ஸிம்ம வாஹனத்தில் வீற்றிருப்பதாகும்.

ஸ்ரீகண்ட மூர்த்தியானது, 4 கைகளும், 3 கண்களும், நீலோத்பலம்போன்ற நிறமும், உடையதாகும். கரண்ட மகுடமும், ஸகலவித ஆபரணங்களுமணிந்து அபயம்-வரதம்-டங்கம்-சூலம் இவைகளைக் கையிலேந்தி, சிகப்பு வஸ்திரமுடுத்தி, பத்ம பீடத்தில் உட்கார்ந்திருப்பதாகும்.

நாகதேவ லக்ஷணம்.

ஸ்ரீகண்ட லக்ஷணம் இவ்விதம் கூறப்பட்டது. நாகதேவலக்ஷணத்தைக் கூறுகிறேன். நாகதேவர் 3 கண்களும், 4 கைகளும், ஸௌமியமான உருவமும், சிவந்த நிறமும்,

𑌅𑌭𑌯𑌵𑌰𑌦𑍋𑌪𑍇𑌤𑌃 𑌪𑌰𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌨𑌾𑌗𑌧𑍃𑌕𑍍 ।

𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑍋𑌪𑍇𑌤𑌃 𑌨𑌾𑌗𑌃 𑌪𑌞𑍍𑌚𑌫𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 ॥ ௱௰௭ ॥

𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌃 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍋𑌪𑌰𑌿 𑌸𑍍𑌥𑌿𑌤𑌃 ।

𑌅𑌥 𑌭𑍀𑌮-𑌭𑍂𑌮𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌭𑍀𑌮𑌸𑍍𑌤𑍁 𑌭𑍀𑌷𑌣𑍋 𑌹𑍍𑌯𑍁𑌗𑍍𑌰𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ॥

𑌅𑌭𑌯𑌂 𑌵𑌰𑌦𑌂 𑌚𑍈𑌵 𑌶𑍂𑌲𑌂 𑌪𑌾𑌶𑌂 𑌚 𑌧𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।

𑌸𑌿𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌯𑍁𑌤𑌶𑍍𑌚𑍈𑌵 𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌦𑍃𑌷𑍍𑌟𑌿𑌃 𑌦𑌂𑌷𑍍𑌟𑍍𑌰𑌕𑌃 ॥ ௱௰௯ ॥

𑌸𑌸𑍍𑌯𑌾𑌙𑍍𑌕𑍁𑌰𑌨𑌿𑌭𑌾 𑌭𑍂𑌮𑌿𑌃 𑌨𑍀𑌲𑌾𑌲𑌕𑌸𑌮𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 ।

𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑍋𑌪𑍇𑌤𑌾 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌾 ॥ ௱௨௰ ॥

𑌪𑍀𑌤𑌾𑌮𑍍𑌬𑌰𑌧𑌰𑌾 𑌚𑍈𑌵 𑌪𑍍𑌰𑌸𑌨𑍍𑌨𑌵𑌦𑌨𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾 ।

வெண்மையான உடையும், உடையவராவார். முன் கைகள் அபயவரதமாகவும், பர ஹஸ்தத்தில் ஸர்ப்பத்தை வைத்திருப்பவருமாவார். கையிலிருக்கும் நாகமானது 5 தலைகளுடையதாகும். கரண்ட மகுடமும், ஸகல ஆபரணங்களும் அணிந்து பத்மபீடத்தில் உட்காந்திருப்பவராவார்.

பீம-பூமி-லக்ஷணம்.

பீம மூர்த்தியானது, பயங்கரமான உருவமும் 4 கைகளுமுடையதாம். கொடூரமான பார்வையும் தித்திப்பற்களுமுடையதாகும். வெளுப்பு ஆடையுடுத்தி வரதம்-அபயம்-சூலம்-பாசம்-இவைகளை ஏந்தி, ஸகல ஆபரணங்களையும் அணிந்திருப்பதாகும்.

பூமிதேவியானவள் பயிரின் முளைபோன்ற நிறமும், அழகிய முகமும், நீலமான முன்னுச்சியும், பீதாம்பர ஆடையுமுடையவளாவாள். ஸகல ஆபரணங்களையும் அணிந்து, கரண்ட மகுடம் தரித்து, இரு கைகளிலும்,

பத்³மம் வா பத்³மயுக்³மம் வாபி பி³ப்⁴ரதீ ஹஸ்தயோர்த்³வயோ: ||

பத்³மபீடோபவிஷ்டா து ஸுகா²ஸீநா வா ஸ்தி²தாத²வா |

அத² ஶிக²ண்டி³ - மருல்லக்ஷணம் ||

ஶிக²ண்டீ³ கஞ்ஜநாபா⁴ஸ்ஸ்யாத் சதுர்பா³ஹுஸமந்வித: || ௱௪௨ ||

க²ட்³க³கே²டகஸம்யுக்த: பத்³மபீடோபவிஷ்டித: |

மருதோ தூ⁴ம்ரவர்ணாஸ்ஸ்யு: த்³விபா³ஹாஸ்து ஸமுத்³க³ரா: ||

கேஶப³த்³த⁴ஸமாயுக்தா: ஸர்வாப⁴ரணபூ⁴ஷிதா: |

ரக்தாம்ப³ரத⁴ராஸ்ஸர்வே நாநாபுஷ்பைரலங்க்ருதா: ||

டங்கஶூலஸமாயுக்தா: பீநோருஜக⁴நஸ்தநா: |

பாத³பீடோபவிஷ்டாஸ்து கர்தவ்யாஸ்து மருத்³க³ணா: ||

இரண்டு தாமரை மலர்களையாவது, இரண்டு நீலோத்பலங்களையாவது வைத்திருப்பவளாவாள். பத்மபீடத்தில், உட்கார்ந்த வடிவமாகவோ, நின்ற வடிவமாகவோ இருப்பவளாவாள்.

சிகண்ட-மருத்-லக்ஷணம்.

சிகண்டர் என்ற மூர்த்தியானது, கஞ்சன (மைனு) பக்ஷியைப்போன்ற நிறமும், 4 கைகளும், கைகளில் கத்தி-கேடயம், இரண்டையும் ஏந்தி பத்ம பீடத்திலிருப்பதாகும். (மற்ற 2 கைகள் வரதாபயமாகக் கொள்ளவேண்டும்.)

மருத்துக்கள் புகை நிறமும், 2 கைகளும், முத்கரம் என்ற ஆயுதமும், சிகப்புப்பட்டாடையும், முடிந்த முடியும், உடையவர்களாவார்கள். ஸகல ஆபரணங்களையும் அணிந்து, பலவித புஷ்பங்களையும் தரித்து, டங்கம் சூலம் இவைகளை ஏந்தி, பாத பீடத்திலிருப்பவர்களாவார்கள். இவர்களுக்குத் துடை-பிருஷ்டபாகம் - ஸ்தநம்-இவைகள் பெரிதாக இருப்பதாகும்.

𑌅𑌥 𑌉𑌗𑍍𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌉𑌗𑍍𑌰𑌸𑍍𑌤𑍁 𑌭𑍀𑌷𑌣𑍋 𑌰𑍌𑌦𑍍𑌰𑌃 𑌰𑌕𑍍𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑍋𑌪𑌶𑍋𑌭𑌿𑌤𑌃 ।
𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑍋𑌪𑍇𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ॥ ௱௪௬ ॥

𑌅𑌭𑌯𑌵𑌰𑌦𑍋𑌪𑍇𑌤𑌃 𑌟𑌂𑌕𑌶𑍂𑌲𑌧𑌰𑌃 𑌪𑌰𑌃 ।
𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌃 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍇 𑌤𑍁 𑌪𑌾𑌣𑍍𑌡𑍁𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌧𑌰𑌃 𑌶𑍁𑌚𑌿𑌃 ॥ ௱௪௭ ॥

𑌅𑌥 𑌶𑌨𑍈𑌶𑍍𑌚𑌰𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌶𑌨𑍈𑌶𑍍𑌚𑌰𑌃 𑌕𑍃𑌷𑍍𑌣𑌵𑌰𑍍𑌣𑍋 𑌦𑍍𑌵𑌿𑌭𑍁𑌜𑍋𑌽𑌸𑌿𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌕𑌃 ।
𑌕𑌰𑌣𑍍𑌡𑌮𑌕𑍁𑌟𑍋𑌪𑍇𑌤𑌃 𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌭𑍂𑌷𑌿𑌤𑌃 ॥ ௱௪௮ ॥

𑌦𑌣𑍍𑌡𑌂 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌵𑌰𑌦𑍋 𑌵𑌾𑌮𑌹𑌸𑍍𑌤𑌕𑍇 ।
𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌃 𑌪𑌦𑍍𑌮𑌪𑍀𑌠𑍇 𑌤𑍁 𑌆𑌸𑍀𑌨𑍋 𑌵𑌾 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥

𑌸𑌂𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌪𑌾𑌦𑌃 𑌸𑍍𑌯𑌾𑌦𑍀𑌷𑌚𑍍𑌛𑍍𑌮𑌶𑍍𑌰𑍁𑌤𑌨𑍂𑌦𑌰𑌃 ।

உக்கிர லக்ஷணம்.

உக்கிர மூர்த்தியானது, சிகப்பு உடையணிந்து, பயங் கரமான தோற்றமுடையதாகும். 4 கைகளும், கைகளில் அபயம்-வரதம்-டங்கம்-சூலம்-இவற்றைத்தரித்து, கரண்ட மகுடம் தரித்து, ஸகல ஆபரணங்களையுமணிந்து, பத்ம பீடத்தில் ஸ்தானகமாக இருப்பதாகும்.

இந்த மூர்த்தியானது வெளுப்பு நிறமுடையதாய், வெளுப்பு உடை தரித்திருப்பதுமாகும்.

சனைச்சர லக்ஷணம்.

சனைச்சரன் கருப்பு நிறமும், 2 கைகளும், கருப்பு உடையுமுடையவராவார். கரண்ட மகுடம் தரித்து, எல்லா ஆபரணங்களையும் அணிந்திருப்பவராவார். வலது கையில் தண்டமும், இடது கையில் வரதமுமிருப்பதாகும். பத்ம பீடத்தில் நின்ற வடிவமாகவோ, விசேஷித்து உட்கார்ந்த வடிவமாகவோ இருப்பதாகும். சிறிது வளைந்த காலும்,

𑌏𑌵𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑍋𑌪𑍇𑌤𑌂 𑌪𑍀𑌠𑌸𑍍𑌯 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌶𑍃𑌣𑍁 ॥

𑌅𑌥 𑌪𑍀𑌠𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌚𑌤𑍁𑌰𑍍𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌤𑌾𑌰𑌮𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌯𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌮𑍇𑌖𑌲𑌾𑌤𑍍𑌰𑌯𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌦𑌿𑌭𑌾𑌗𑌕𑌮𑍍 ॥

𑌮𑌾𑌨𑌾(𑌵𑍇𑌦𑌾)𑌙𑍍𑌗𑍁𑌲𑌸𑌮𑍁𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌯𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑍁
𑌮𑌾𑌨𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ।

𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌪𑌦𑍍𑌮𑌤𑌾𑌰𑌂 𑌶𑍇𑌷𑌾𑌰𑍍𑌧𑌂 𑌕𑌮𑍍𑌪𑌨𑍀𑌵𑍍𑌰𑌕𑌮𑍍 ॥

𑌶𑌿𑌲𑌾𑌭𑌿𑌰𑌿𑌷𑍍𑌟𑌕𑌾𑌭𑌿𑌰𑍍𑌵𑌾 𑌦𑌾𑌰𑍁𑌣𑌾 𑌵𑌾 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌪𑌰𑌿𑌵𑌾𑌰𑌪𑍀𑌠𑌮𑍇𑌵𑌂 𑌮𑌹𑌾𑌪𑍀𑌠𑌵𑌿𑌧𑌿𑌂 𑌶𑍃𑌣𑍁 ॥ ௮௩ ॥

𑌅𑌥 𑌮𑌹𑌾𑌪𑍀𑌠𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌪𑍍𑌰𑌾𑌸𑌾𑌦𑌸𑍍𑌯 𑌤𑍁 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌯𑌤𑍍𑌤𑌦𑍍𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑍇 ।
𑌉𑌚𑍍𑌛𑍍𑌰𑌾𑌯𑌂 𑌸𑌾𑌮𑌸𑍍𑌯 𑌷𑌟𑍍𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌨𑍍𑌤𑌕𑍇 ॥ ௮௪ ॥

சிறிது குட்டையான உடலுமுடையவராவார். இவ்விதம் பரிவார லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இனி பீட லக்ஷணத்தைக் கேட்பாயாக.

பீட லக்ஷணம்.

பீடமானது, 14 அங்குலம் அகலமும், 12 அங்குலம் உயரமுமுடையதாக இருக்கவேண்டும். உயரத்தை 3 பாகங்களாகக்கொண்டு, மேகலை ஒன்று, 4 அங்குல உயரமும் 4 அங்குல அகலமுமிருக்கும்படி, 3 மேகலையுடையதாக அமைக்கவேண்டும். அதன் (மத்தியில்) பத்மத்தின் அகலம் 6 அங்குலமாகும். பாக்கி ½ பாகமானது கம்பத்தின் நீவ்ரம் (ஒதுக்கம்) ஆகும். பீடமானது, கருங்கல்—செங்கல்—அல்லது ஸுதை இவைகளால் செய்யப்படவேண்டும். இவ்விதம் பரிவாரங்களின் பீடம் கூறப்பட்டுள்ளது. இனி மஹாபீடவிதியைக் கூறுகிறேன். கேட்பாயாக.

ஷடா³த்³யஷ்டாத³ஶாந்தே வா த்³வித்³விட³ண்டா³வஸாநகே |
கோ³புராதி³பே⁴ வாபி மஹாபீட²ம் ப்ரகல்பயேத் || ௫௫ ||

அத²வாந்யப்ரகாரேண பீட²ஸ்தா²நம் விதீ⁴யதே |
த்ருதீயே வா சதுர்தே² ஹாரே ப்ராகாராயாமமத்⁴யகே || ௫௬ ||

மஹாபீட²ம் ப்ரகர்தவ்யம் தஸ்ய லக்ஷணமுச்யதே |
க³ர்ப⁴த்³வாரோத³யாயாமம் பீட²விஸ்தாரமுத்தமம் ||

த்ரிபாத³ம் மத்⁴யமம் ப்ரோக்தம் அர்த⁴மாயாமமத⁴மம் ததம் |
க³ர்ப⁴த்³வாரஸ்ய விஸ்தாரஸமம் பீட²மத⁴முச்யதே || ௫௭ ||

மஹாபீட லக்ஷணம்.

இவ்விடத்தில் கர்பகிருஹத்தின் அகலமானது தண்டம் என்று கூறப்பட்டிருக்கிறது.

மஹாபீடமானது, கர்பகிருஹத்திலிருந்து, 6–8–10–12–14–16 அல்லது 18 தண்ட அளவில் கல்பிக்கப்படவேண்டும்

அல்லது மற்றொரு முறையின்படியும் வைக்கலாம். பிராகாரத்தின் மூன்ருவது, நான்காவது அல்லது ஐந்தாவது சுவற்றின் (உட்பக்கத்தில்) அதாவது 2–3–4வது ப்ராகாரத்தில் முன்பக்கத்தில் அதன் நீளத்தின் நடுவில் வைப்பதுமாகும்.

இவ்விதம் மஹா பீடஸ்தானம் கூறப்பட்டுள்ளது. இனி அதன் லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

பீடமானது, கர்பகிருஹ துவாரத்தின் உயரம் எவ்வளவோ அவ்வளவு அகலமிருப்பது உத்தமமாகும். அதில் $\frac{3}{4}$ பங்கு அகலமிருப்பது மத்தியமமாகும். $\frac{1}{2}$ பங்கு அகலமிருப்பது அதமமாகும்.

பீடமானது, கர்பகிருஹ துவாரத்தின் அகலம் எவ்வளவோ அவ்வளவு அகலமிருப்பது அதமமாகும். அதைப்

த்விமாநம் மத்யமம் ப்ரோக்தம் த்ரிமாநம் ஶ்ரேஷ்டமுச்யதே |
அதவா ஏகஹஸ்தம் ஸ்யாதுத்ஸேதம் பீடவிஸ்தரம் || ௬௦ ||

த்விஹஸ்தம் து மத்யமம் ஸ்யாத் த்ரிஹஸ்தம் ஶ்ரேஷ்டமுச்யதே |
தத்விஸ்தாரஸமம் துங்கம் ஸப்தாஷ்டநவவிம்ஶதி: (வேதிகம்) ||

உபாநோச்சம் த்விபாகம் ஸ்யாத் ஷடம்(பஞ்சாம்)
ஶம் ஜகதீ பவேத் |
குமுதோச்சம் து பஞ்சாம்ஶம்(வேதாம்ஶம்) கம்பமேகாம்ஶ-
முச்யதே || ௬௧ ||

வேதாம்(ஸப்தம்)ஶம் கர்ணோத்ஸேதம் ஸ்யாதூர்த்வகம்பம்
ஶிவாம்ஶகம் |
மஹாபட்டம் த்ர்யம்ஶம் து த்விபாகம் வா விஶேஷத: ||
வேதாம்ஶம் பத்மதுங்கம் து த்விபாகம் கண்டிகோதயம் |

போல் 2 பங்கு அகலமிருப்பது மத்தியமமாகும். 3 பங்கு அகலமிருப்பது உத்தமமாகும்.

அல்லது 1 ஹஸ்தம் அகலமிருப்பது அதமமாகும். 2 ஹஸ்தம் அகலமிருப்பது மத்தியமமாகும். 3 ஹஸ்தமிருப்பது உத்தமமாகும்.

பீடமானது அதன் விஸ்தாரம் எவ்வளவோ அவ்வளவு உயரமுடையதாகும்.

அதன் உயரத்தைப் பங்கிட்டு, 3 வேதிகளையும் முறையே 7–8–9 பங்குகளாகக் கொள்ளவேண்டும்.

(பீடத்தின் உயரத்தில்) உபானம் 2 பங்காகும். ஜகதி 6 (5) பங்காகும். குமுதத்தின் உயரம் 5 (4) அம்சமாகும். கம்பம் 1 பங்காகும். கர்ணம் 4 (3) பங்காகும். ஊர்த்துவ கம்பம் 1 பங்காகும். மஹாபட்டி 3 பங்காகும்; அல்லது விசேஷித்து 2 பங்கு இருப்பதுமாகும். பத்மத்தின் உயரம்

𑌅𑌥𑌵𑌾 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌭𑌾𑌗𑌾𑌂𑌶𑌂 𑌵𑌿𑌭𑌜𑍇𑌤𑍍𑌤𑌤𑌃 ॥ ௱௯௪ ॥

𑌪𑌦𑍍𑌮𑍋𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌪𑌞𑍍𑌚(𑌵𑍇𑌦)𑌭𑌾𑌗𑌂 𑌤𑍁 𑌮𑌹𑌾𑌪𑌟𑍍𑌟𑍀 𑌵𑌿𑌭𑌾𑌗𑌤𑌃 ।
𑌉𑌪𑌾𑌨𑍋𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌏𑌕𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌶𑍇𑌷𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌵𑌦𑍇𑌵 𑌹𑌿 ॥

𑌅𑌥 𑌪𑍀𑌠𑌾𑌯𑌤𑌂 𑌵𑌿𑌸𑍃𑌜𑍍𑌯 𑌯𑌾(𑌯)𑌵𑌤𑍍𑌤𑍁𑌙𑍍𑌗(𑌮)𑌤𑌾𑌂𑌬𑍁𑌜𑌂 ।
𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌪𑌦𑍍𑌮𑌭𑌾𑌗𑌂 𑌤𑍁 𑌪𑍀𑌠𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂(𑌧𑍍𑌯𑌾𑌂)𑌶
𑌭𑌾𑌵𑍍𑌯𑌤𑍇 ॥ ௱௯௫ ॥

𑌅𑌧𑌿𑌷𑍍𑌠𑌾𑌨𑍋𑌕𑍍𑌤𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌵𑍇𑌶𑌨𑌿𑌷𑍍𑌕𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌪𑌦𑍍𑌮𑌤𑌾𑌰𑍇 𑌯𑍁𑌗𑌾𑌂𑌶𑌂 𑌵𑌾 𑌪𑌞𑍍𑌚𑌾𑌂𑌶𑌂 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑌾 𑌤𑌤𑌃 ॥

𑌪𑌦𑍍𑌮𑌤𑌾𑌰𑌂 𑌯𑍁𑌗𑌾𑌶𑍍𑌰𑌂 𑌵𑌾 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌵𑌾𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌮𑍇𑌵 𑌵𑌾 ।

---

4 பங்காகும். கர்ணிகையின் உயரம் 2 பங்காகும். ஆகக் கூடுதல், 2+5+4+1+3+1+3+4+2=24 அம்சமாகும்.

(பீடத்தின் உயரத்தை 24 பாகங்களாகச் செய்து கொண்டு, உபானம் முதலான 9 பிரிவுகளையும், கூறிய பங்குகளால் அமைக்கவேண்டும் என்பது பொருள்.)

அல்லது, கர்ணிகை 3 பாகம், பத்மம் 5 (4) பாகம், மஹாபட்டி 2 பாகம், உபானம் 1 பாகம், மற்றவைகள் கீழே கூறப்பட்டிருப்பதுபோலவும் கொள்வதாகும்.

அல்லது, பீடத்தின் உயரத்திற்குக் கீழே பூமட்டத் திற்குக் கீழே தாமரை மலரின் அடிப்பக்கமாகக்கொண்டு, பூமட்டத்திற்குமேலே பீடத்தின் உயரம் முழுமையும் பத்மத்தின் பாகமாகக் கொள்வதுமாகும். அதிஷ்டானத் திற்குக் கூறியபடி, வேசநிஷ்க்ராந்தம் செய்யவேண்டும். கர்ணிகையின் அகலம் பத்மத்தின் அகலத்தில் 4 அல்லது 5ல் ஒரு பாகமாகும்.

பத்மத்தின் அகலமானது, சதுரஸ்ரமாகவாவது, அஷ்டாஸ்ரமாகவாவது, வட்டவடிவமாகவாவது, ஷடஸ்ர

கமலாகாரகருதவ்யம் ... ஹம்ஸாலங்காரம் ஸ்ம்ருதம் ॥ ௬௬ ॥

[கமலாகாரம் கர்தவ்யம் ஹம்ஸ தார்க்ஷ்யகரம் ஸ்ம்ருதம் ।]

லோஹஜம் சைலஜம் வாபி இஷ்டகாமயமேவ வா ।

ஸுதயா வேஷ்டகாஸஹிதம் நாநாசித்ரை விசித்ரிதம் ॥

ஸுதேவ்யா மகரைவ்யாளை: வ்ருஷபைர் விபூஷிதம் ।

நாநாவர்ணைர் விசித்ரம் ஸா ஸுவர்ணரஜதாதிபி: ॥

பீடவ்யாஸே து ஷடம்சஸப்தவஸு நவாம்சகேவி வா ।

உபபீடோக்த வா பீடோச்சவபீடோத்தமம் க்ருதம் ॥ ௬௭ ॥

வடிவமாகவாவது, அமையப்பெற்று, அன்னம்–கருடன் இவைகளால் அலங்கரிக்கப்பட்டுமிருக்கவேண்டும். (பத்ம மானது, பீடத்தின் வடிவத்திற்கேற்ப, 4, 6 அல்லது 8 இதழ்களைக்கொண்டதாக இருக்கவேண்டுமென்பது பொருள்.)

பீடமானது, உலோகம்–கருங்கல்–செங்கல்–உட்பகுதியில் செங்கலுடன் கூடிய ஸுதை, இவைகளால் செய்யப்படவேண்டும். பலவித சித்திரங்களாலலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். பூதேவி–மகரம்–வியாளம் (ஸர்ப்பம்) விருஷபம் இவ்வுருவங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கவேண்டும். பலவித வர்ணங்கள் தீட்டப்பட்டிருக்கவேண்டும். தங்கம் வெள்ளி இவைகளால் பூஷிக்கப்பட்டிருக்கவேண்டும்.

பீடத்தின் அகலத்தில் 6–7–8–9 அம்சத்தினுலாவது, உபபீடத்திற்குக் கூறப்பட்ட அம்ச அளவினுலாவது பீடத்தைச் செய்யவேண்டும். (இந்தக் கணக்கு பீடத்தின் கீழ்பாகத்திற்குக் கூறியதாகக் கொள்ளவேண்டும்.)

𑌤𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌮𑌹𑌾𑌪𑍀𑌠𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌵𑍍𑌯𑌾𑌸𑍋𑌦𑌯𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌮𑍍 ।
𑌉𑌪𑌪𑍀𑌠𑍋𑌕𑍍𑌤𑌵𑌦𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌂 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌂 𑌵𑌾 𑌬𑍁𑌧𑍋𑌤𑍍𑌤𑌮𑍈 ॥ ௱௭௧ ॥

𑌆𑌮𑍋𑌦𑌂 𑌚 𑌪𑍂𑌰𑍍𑌵𑌦𑌲𑍇 𑌪𑍃𑌥𑍍𑌵𑍀𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌰𑍂𑌪𑌿𑌣𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌮𑍋𑌦𑌂 𑌚 𑌯𑌾𑌮𑍍𑌯𑌦𑌲𑍇 𑌅𑌗𑍍𑌨𑌿𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ॥ ௱௭௨ ॥

𑌸𑍁𑌮𑍁𑌖𑌂 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌦𑌲𑍇 𑌤𑍁 𑌜𑌲𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍍 ।
𑌦𑍁𑌰𑍍𑌮𑍁𑌖𑌂 𑌸𑍌𑌮𑍍𑌯𑌦𑌿𑌗𑍍𑌭𑌾𑌗𑍇 𑌵𑌾𑌯𑍁𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌕𑌂 𑌤𑌥𑌾 ।

𑌅𑌵𑌿𑌘𑍍𑌨𑌂 𑌕𑌰𑍍𑌣𑌿𑌕𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌤𑍁 𑌵𑍍𑌯𑍋𑌮𑌾𑌤𑍍𑌮𑌕𑌮𑍁𑌦𑍀𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌤𑌾𑌮𑌸𑌮𑌾𑌗𑍍𑌨𑍇𑌯𑌦𑌲𑍇 𑌰𑌾𑌜𑌸𑌂 𑌨𑍈𑌰𑍃𑌤𑍇 𑌦𑌲𑍇 ॥

𑌸𑌾𑌤𑍍𑌤𑍍𑌵𑌿𑌕𑌂 𑌵𑌾𑌯𑍁𑌦𑌿𑌗𑍍𑌭𑌾𑌗𑍇 𑌵𑌿𑌘𑍍𑌨𑌕𑌰𑍍𑌤𑌾𑌰𑌮𑍀𑌶𑌕𑍇 ।

அதற்குமேலே, மஹாபீடத்திற்குக் கூறப்பட்ட அளவுடன் மஹாபீடத்தைச் செய்யவேண்டும். அந்த பீடத்தின் மேல்பாகத்தையும் உபபீடத்திற்குக் கூறப்பட்ட அளவின்படியேயும் செய்யலாம்.

பூதத்துவஸ்வரூபியான ஆமோதரை கிழக்கு திக்கிலுள்ள தளத்திலும், அக்நிதத்துவ ஸ்வரூபியான பிரமோதரை தெற்கு திக்கிலுள்ள தளத்திலும், ஜலதத்துவ ஸ்வரூபியான ஸுமுகரை மேற்கு திக்கிலுள்ள தளத்திலும், வாயுதத்துவ ஸ்வரூபியான துர்முகரை வடக்கு திக்கிலுள்ள தளத்திலும், ஆகாசதத்துவ ஸ்வரூபியான அவிக்நரை கர்ணிகையின்மேலேயும், (கர்ணிகை—தாமரை மலரின் இதழ்களின் நடுவிலுள்ள பாகம். இங்கு கர்ணிகை என்பது பீடத்தின் மேல்தளமாகும்.) அக்கினி மூலையிலுள்ள தளத்தில் தமோகுணத்தையும், நைர்ருதி மூலையிலுள்ள தளத்தில் ராஜஸ குணத்தையும், வாயு மூலையிலுள்ள தளத்தில் ஸத்தவ குணத்தையும், (குணங்கள் என்பதற்கு குணங்களின் அதிதேவதைகள் என்று பொருள் கொள்ளவேண்டும்.) ஈசான மூலையிலுள்ள தளத்தில் விக்ந கர்த்தாவையும்

[illegible] ॥ ௭௫ ॥

[illegible] ।

[illegible] ॥ ௭௬ ॥

[illegible] ।

[illegible] ॥

[[illegible] ।]

[illegible] ।

[illegible] ॥

(பூஜிக்கவேண்டும்.) ஆத்தும தத்துவமானது இவ்விதம் மஹாபூத குணங்களால் ஆகியது என்று கூறப்பட்டிருக்கிறது.

ஸ்வர்கம், பூமி, அந்தரிக்ஷம் (ஸ்வர்க்கத்திற்கும் பூமிக்கும் மத்தியிலுள்ள இடம்) இவை யாவும் ஸகல பூதங்களாலும் குணங்களாலும் அமையப்பெற்றதாகும். ஹே அந்தணனே! ஆத்துமா என்று கூறப்படும் எல்லாம் மஹா பீடமேயாகும். (மஹாபீடமானது ஸர்வாத்தும ஸ்வரூபமாகும் என்பது பொருள்.) தாமஸாதி குணங்கள் நிவர்த்தியடைவதற்காக, தினந்தோறும் (பீடத்தை) பூஜித்து கடைசியில் பலிகொடுக்கவேண்டும்.

அத்தகைய ஆத்மஸ்வருபத்தை நாம் ஏற்றுக்கொள்ளும் பொருட்டு (பீடத்தை) நித்தியோத்ஸவாதிகளுடன் பிரதக்ஷிணம் செய்யவேண்டும். (ஆகையால் ஆத்துமார்ப்பணம் செய்யும் பொருட்டு தினந்தோறும் பீடத்தைப் பிரதக்ஷிணம் செய்யவேண்டும்.)

முதல் பிரதக்ஷிணத்தால் பூமியை வலம் வந்ததாகும். இரண்டாவது பிரதக்ஷிணத்தால் அந்தரிக்ஷத்தை (ஆகாசத்தை) வலம் வந்ததாகும். மூன்ருவது பிரத

ஜகதார்த்தி-விநாசார்த்தம் குர்யாத் ஸாதகோத்தம: |
பஸ்சிமாபிமுகே சைத்யே கிஞ்சித் பேதம் வதாம்யஹம் ||

வ்ருஷஸ்தானே குமாரம் து ஸ்கந்தஸ்தானே வ்ருஷம் ந்யஸேத் |
[illegible] ஸேஷம் பூர்வவதாசரேத் |
பரிவாரவிதி: ப்ரோக்த: வக்ஷ்யதே லிங்கலக்ஷணம் || [illegible] ||

இதி காச்யபீயே சில்பசாஸ்த்ரே பரிவாரவிதிர்நாம
அஷ்டசத்வாரிம்ச: படல: ||

க்ஷிணத்தால் ஸ்வர்க்கத்தை வலம்வந்ததாகும். இது அந்த தேசத்தில் வசிப்பவர்களுக்கு நன்மையையுண்டுபண்ணும். உலகத்தின் துன்பத்தை நீக்கவேண்டி, தேவாலய நிர்மாணம் செய்பவன், இவ்விதம் பீடத்தை நிர்மாணச்செய்ய வேண்டும்.

இனி, மேற்கு முகமான தேவாலயத்தில் சிறிது மாறுபாட்டைக் கூறுகிறேன்.

விருஷபத்தை ஸ்தாபிக்க வேண்டிய இடத்தில் ஸுப்ரஹ்மணிய மூர்த்தியையும், ஸுப்ரஹ்மணியரை வைக்கவேண்டியவிடத்தில் விருஷபத்தையும் மாற்றியமைக்கவேண்டும். மற்றவைகள் முன்பு கூறியுள்ள விதிப்படியேயாகும்.

இவ்விதம் பரிவாரவிதி கூறப்பட்டுள்ளது. இனி லிங்க லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

காச்யபீய சில்ப சாஸ்திரத்தில் பரிவாரவிதியெனும்
48வது படலம் முற்றும்.



அதை²கோநபஞ்சாஶத்தம: படல: ||



ஶிவலிங்க³லக்ஷணம் ||

அத² வக்ஷ்யே விஶேஷேண ஶிவலிங்க³ஸ்ய லக்ஷணம் |
ஸம்ஹார விலயே பூ⁴தா: லயம் க³ச்ச²ந்த்யஶேஷத: || 1 ||

யதா² ஸ்ருஷ்டிஸ்தி²தா தத்³வத் ஸ்ருஷ்ட்யவஸ்தா²ம் க³தா இதி |
ஸம்ஸாரே நிஷ்கலம் ஶாந்தம் மனோவாசாமகோ³சரம் || 2 ||

மோக்ஷத³ம் ஸர்வபூ⁴தாநாம் ஸ்வாத்மந: பரமம் விநா (ஹிதம்) |
ஸர்வாதி⁴வ்யாபி தன்மத்⁴யம் ஸர்வலோகைகநாயகம் ||

தஸ்மாதே³வ ஸ்ருஷ்டிகாலே து ஶாந்திதத்த்வஸமுத்³ப⁴வ: |

நாற்பத்தி ஒன்பதாவது படலம்.

சிவலிங்க லக்ஷணம்.

இனி சிவலிங்கத்தின் லக்ஷணத்தை விசேஷித்துக் கூறுகிறேன். ஆக்கமும் அழிவுமாகிய ஸம்ஸாரமானது லயத்தை அடையும்பொழுது, பூதஜாலங்கள் யாவும் ஸ்ருஷ்டி காலத்தில் எவ்வாறு தோன்றினவோ, அவ்வாறே லயத்தை அடைகின்றன. சிவலிங்கமானது அவைகளைப் படைக்கும் தன்மை வாய்ந்ததாகையால் அதற்கு லிங்கம் என்று பெயர்.

நிஷ்கலமாயும், சாந்தமாயும், மனதிற்கும் வாக்குக்கும் அப்பாற்பட்டதும்; ஆத்மாவுக்கும் அப்பாற்பட்டதுமான அதுவே, ஸம்ஸார சக்கிரத்தில் உழலும் ஸகல பூதஜாலங்களுக்கும் முக்தியைக் கொடுக்கும் தன்மைவாய்ந்ததாம்.

அதுவே, எல்லாவற்றிலும் வியாபித்து, அவைகளுள் மறைந்து, ஸகல உலகங்களுக்கும் நாயகனாக விளங்குகிறது. அதனிடமிருந்து ஸ்ருஷ்டி காலத்தில் சாந்தி தத்துவமுண்டாயிற்று.

தத்த்வாச்ச: ஶக்திஸ்ஸஞ்ஜாதா தஸ்யா நாதஸ்ய ஸம்பவ: ॥
தஸ்மாத்பிந்துஸ்ஸமுத்பன்ன: நாதம் ஸாதாக்யமுச்யதே ।
பிந்துஸ்தூன்மனீ வ்யாப்தா தஸ்மாதீஶ்வரஸம்பவ: ॥ ௫ ॥

ஈஶ்வராத்து மஹேஶஸ்ய ஸ்ருஷ்டிஸ்தஸ்மாத்து வைஷ்ணவம் ।
தஸ்மாச்ச ப்ரஹ்மஸம்பூதி: ப்ரஹ்மணஸ்து விஶேஷத: ॥
த்ரீணி சைவ த்ரிம்ஶச்ச த்ரிஶதம் த்ரிஸஹஸ்ரகம் ।
தேவதா ருஷயஶ்சைவ தானவா ரஸ(ஸுர)யோனய: ॥.

ஸம்பவோ ஹ்யுத்திதோ விப்ர தேஷ்வாதௌ த்ரீணி நிஷ்கலம் ।
ஶிவம் தத் ஸகலம் வ்யாப்தம் மிஶ்ரம் நாதம் ச பிந்துகம் ॥
நாதம் லிங்காக்ருதி ஜ்ஞேயம் பிந்து: பீடாக்ருதிஸ்ததா ।

அந்த சாந்தி தத்தவத்திலிருந்து சக்தி தத்துவம் தோன்றிற்று. அதிலிருந்து நாதம் தோன்றிற்று. நாதத்திலிருந்து பிந்து தோன்றிற்று. அந்த நாதமே ஸத் என்று கூறப்படுகிறது. பிந்துவானது, மநோந்மநீ என்று கூறப்படுகிறது. அதிலிருந்து ஈசுவரன் தோன்றினன். ஈசுவரனிடத்திலிருந்து மஹேசுவரன் தோன்றினன். மஹேசுவரனிடத்திலிருந்து விஷ்ணு தத்துவம் உண்டாயிற்று. (விஷ்ணு தோன்றினர்.) விஷ்ணுவிடமிருந்து பிரம்ஹா உண்டானர். அந்த பிரம்ஹாவிடமிருந்து, 3–30-300-3000, என்று முறையே விசேஷித்து, தேவர்களும் இருடிகளும் தாநவர்களும் ரஸத்தின் வழியே யுண்டாகும் பற்பல ஜீவராசிகளும் (அஸுரர்களும்) உண்டானர்கள். ஹே அந்தணனே! உலகத்தின் உத்பத்தியானது இவ்வாறு கூறப்பட்டுள்ளது. இவைகளில் முதலில் கூறப்பட்ட லிங்கம், சாந்தி, சக்தி, என்ற மூன்றும் நிஷ்களமாகும். (உருவற்றதும் விவரித்துக்கூற முடியாததுமாகும்.)

சிவமானது ஸகலம் எனப்படும். நாதம், பிந்து

லிங்கம் சிவமயம் ப்ரோக்தம் பீடம் சக்த்யாத்மகம் ததா || ௩ ||

தஸ்மாத் சிவாத்மிகா சைவ ஸாஹிஷ்ணா பாபநாசநீ |
ஜகதாதி விநாசாய ஸர்வப்ராணிஹிதாய வை || ௪ ||

தேவாதீநாம் ஹிதார்த்தாய யாகபூஜாதிஸித்தயே |
லிங்கயோநிப்ரபேதேந ஸாதாக்யம் தத்ர சோச்யதே ||

ஸர்வேஷாம் ஸம்ஸித்த்யர்த்தம் ச ப்ராப்த்யை லிங்கலக்ஷணம் |
தல்லிங்கம் த்ரிவிதம் ப்ரோக்தம் சலம் சைவாசலம் ததா ||

சலாசலம் ச விப்ரோக்தம் த்ரேதைவ விசேஷத: |
ரத்நஜம் லோஹஜம் வாபி லிங்கம் சலசலா (சலாசலம்)
ஸயோநிகம் || ௫ ||

இரண்டும் மிச்ரம் எனப்படும். நாதமே லிங்கவடிவம் என்றும், பிந்துவே அதன் பீடமென்றும் கூறப்பட்டிருக்கிறது. லிங்கமானது சிவஸ்வரூபமாகும். பீடமானது சக்திஸ்வரூபமாகும். லிங்கமும் பீடமும் சேர்ந்து ஒன்ருகவே இருப்பதால், நெருப்பும் உஷ்ணமும் சேர்ந்து ஒன்ருக இருப்பதுபோல, ஶிவமும் சக்தியும் சேர்ந்து ஒன்ருகவே விளங்குகின்றது.

ஸத்பாவமானது, உலகத்தின் தீமைகளைப் போக்கி ஸகல பிராணிகளுக்கும் நன்மையைக் கொடுப்பதற்காகவும், தேவாதிகளான ஸகலஜீவராசிகளும் நன்மையையடைவதற்காகவும், (அவர்கள்) தியாகம் பூஜை முதலியவைகளைச் செய்யவேண்டியதற்காகவும், லிங்கம் யோனி என்ற பிர்குபாடுடன் விளங்கலாயிற்று.

(தேவாதிகளான ஸகல ஜீவராசிகளும், தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம், என்ற புருஷார்த்தங்கள்) எல்லாவற்றையும் அடையும்பொருட்டு, லிங்கலக்ஷணத்தைக் கூறுகிறேன்.

அந்த லிங்கமானது, சலம், அசலம், சலாசலம், என்று

஥ிஂம ரூவெஹதஂ வாம யொநிஂ கூஜா (கூ-ய-ீஂக)
ஹக்ஷணாழ |
மிஂஹொ வத-ீநொவெதம் ஶக்ஷணொஸாஂவஜி-தஂ ||

஥ிஂமாகாஂஂஶெஷம் த¬ கூஜா ஥ிஂமொடியாய-ீகழ |
* உடிபெ நொகஹாமம்(மெ) வா வெஷாஂஂஂஂஜொவி வா ||

வீமெ திவெஂயெக ஶெஷம் ஓஂஂஜாநஸஂஜிதழ |

மூன்று வகையாகும். அந்த லிங்கத்தை முறையே விசே ஷித்து யோநியுடன் (யொநி – பீடம்) ரத்நத்தினுலாவது, (ஸுவர்ணம் முதலிய) லோஹத்தினுலாவது அமைக்க வேண்டும். லிங்கமானது எந்த திரவியத்தால் செய்யப் படுகிறதோ, அந்த திரவியமல்லாத வேறு திரவியத்தினுலும் யோநியைச் செய்யலாம். ஆனுல் அது லக்ஷணத்துடன் இருக்கவேண்டும்.

லிங்கமானது, லக்ஷணம் பொருந்தியதாக இல்லாவிட் டாலும் சிரோவர்தனமுடையதாக இருக்கவேண்டும். (சிரோவர்த்தனம் — லிங்கத்தின் முகமட்டத்திற்குமேலே குடை போன்று உயர்ந்து வட்டமாக இருக்கும் சிரோ பாகம்)

லிங்கத்தின் உருவத்தை முழுமையும் செய்து, லிங்கத் தின் உயரத்தில் ஸரிபாதி அளவாவது, லிங்கத்தின் உயரத் தில் 7-ல் 4 பாகமாவது, அல்லது 7-ல் 5 பாகமாவது, பீடத்திற்குள் பதிந்திருக்கும்படி வைக்கவேண்டும். அது நீங்கிய பாகமானது பீடத்திற்கு மேலே காணப்படுவதாக இருக்கவேண்டும்

---

* உடிபெஉநெொகஹாமம் வா வெஷாஂஶெஉஂஂஜொவி வா |
உதி வாாஜஂ |

உயரத்தில் 3ல் 1 பாகமாவது, 4ல் 1 பாகமாவது, என்பது மற்ருெரு பாடம்.

[illegible] ||

யல்லிங்கம் அசலம் [illegible] |
ஸ்தா²பிதம் சைவ யத் பீட²ம் [illegible] ||

ஸ்வயம்ஜம் ஸூத்ரஸம்யுக்தம் பா³ணலிங்க³ம் து தத்³விது³: |
தேஷாமாதா³வசலம் லிங்க³லக்ஷணம் வக்ஷ்யதே(அ)து⁴னா || ௧௮ ||

ஸுமாஸதிதி²நக்ஷத்ரவாரே லக்³னே ஶுபா⁴வஹே |
ஆசார்ய: ஶில்பிஸம்யுக்த: ஶிலாஸங்க்³ரஹணமாசரேத் || ௧௯ ||

இஷ்டமான எந்த இடத்திற்கும் எடுத்துச் செல்லக் கூடியதாகவும் இஷ்டமான இடத்தில் வைக்கவும் எடுக்கவும் தகுதிவாய்ந்ததுமான லிங்கமானது, சல லிங்கம் எனப் படும்.

அதற்கு உரிய தேவாலயத்தில் காணப்படுவதும், இருக்குமிடத்திலிருந்து அசைக்கமுடியாதபடி ஸ்திரமாக பிரதிஷ்டை செய்யப்பட்டதுமான லிங்கமானது, அசல லிங்கம் எனப்படும்.

உரிய இடத்தில் ஸ்திரமாக இருப்பதுபோல் காணப் படுவதும், பீடத்தில் வைக்கவும், அதனின்றும் தனித்து எடுக்கவும் கூடியதுமான லிங்கமானது, சலாசல லிங்கம் எனப்படும். (17)

தானாகவே லிங்காகாரத்தை அடைந்து ஸூத்திரத் துடன் கூடியதாய் காணப்படும் லிங்கத்தை, பாணலிங்கம் என்று கூறுகிறார்கள்.

இத்தகைய லிங்கங்களில் அசலலிங்க லக்ஷணத்தை முதலில் கூறுகிறேன். (18)

நல்ல மாதத்தில் நல்ல திதியில், நல்ல நக்ஷத்திரத்தில், நல்ல லக்கினத்தில், நல்ல வாரத்தில், சிலாஸங்கிரஹணம் செய்யவேண்டும். ஆசார்யனானவன் சில்பியுடன் கூடச்

[illegible] ।
[illegible] ॥ ௨௦ ॥

[illegible] ।
[illegible] ॥ ௨௧ ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥ ௨௩ ॥

[illegible] ।
[illegible] ॥ ௨௪ ॥

சென்று, சிலாஸங்கிரஹணம் செய்யவேண்டும். அவன், சிலாஸங்கிரஹணத்திற்குப் புறப்படும் பொழுதும், மார்கத்திலும், சிலாஸங்கிரஹணம் செய்யும்பொழுதும், தெய்வச்செயலாக ஏற்படும் நிமித்தங்களையும், ஆகாசவெளியில் காணப்படும் நிமித்தங்களையும், பூமியில் காணப்படும் நிமித்தங்களையும் கவனித்துப்பார்க்கவேண்டும்.

காக்கையானது இடது பக்கத்திலிருந்து வலமாக வருவது, பருந்து வலது பக்கத்திலிருந்து இடது பக்கம் வருவது, மாம்ஸத்துடன்கூடிய கழுகு, கந்நிகை, பசு இவைகளைக் காண்பது, பசுக்கள் எதிரில் வருவது, தயிர் நிறைந்த குடம், பால் நிறைந்த குடம், மலர்ந்த மலர்கள், புஷ்பமாலை, குழந்தைகளுடன் கூடிய ஸ்திரீகள், சோறு, மாம்ஸம், உணவுப்பொருள், சிவபக்தி நிறைந்தவன், ஜ்வாலையுடன் கூடிய நெருப்பு, ஜலம் நிறைந்த குடம், அலங்காரம் செய்யப்பட்ட யானை, மிகவும் அழகுடன்கூடிய வேஸ்யை (தாஸீ)

𑌉𑌲𑍍𑌕𑌾𑌪𑌾𑌤𑍋 𑌦𑌿𑌶𑌾𑌂 𑌦𑌾𑌹𑌃 𑌮𑌹𑌾𑌵𑌾𑌤𑌪𑍍𑌰𑌵𑌰𑍍𑌤𑌨𑌮𑍍 ।
𑌅𑌶𑍁𑌭𑌾𑌨𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌿𑌕𑍍𑌷𑌾𑌣𑌿 𑌭𑍌𑌮𑌾𑌨𑍍𑌯𑌥 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ॥ ௨௫ ॥

𑌮𑍁𑌕𑍍𑌤𑌕𑍇𑌶𑌾 𑌨𑌰𑌾 𑌨𑌾𑌰𑍍𑌯𑌃 𑌕𑍀𑌰𑍍𑌣𑌕𑍇𑌶𑌾𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌤𑍈𑌲𑌾𑌭𑍍𑌯𑌕𑍍𑌤𑌾𑌶𑍍𑌚 𑌨𑌗𑍍𑌨𑌾𑌶𑍍𑌚 𑌕𑌾𑌷𑌾𑌯𑌵𑌸𑌨𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥ ௨௬ ॥

𑌶𑍂𑌨𑍍𑌯𑌂 𑌚𑍈𑌵𑌾𑌯 𑌮𑍃𑌦𑍍𑌭𑌾𑌣𑍍𑌡𑌂 𑌤𑍈𑌲𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌛𑌿𑌨𑍍𑌨𑌨𑌾𑌸𑌿𑌕𑌕𑌰𑍍𑌣𑌾𑌶𑍍𑌚 𑌹𑍀𑌨𑌾𑌙𑍍𑌗𑌾𑌶𑍍𑌚𑌾𑌧𑌿𑌕𑌾𑌙𑍍𑌗𑌕𑌾𑌃 ॥ ௨௭ ॥

𑌪𑍁𑌤𑍍𑌰𑌹𑍀𑌨𑌾𑌶𑍍𑌚 𑌯𑌾 𑌨𑌾𑌰𑍍𑌯𑌃 𑌵𑌿𑌧𑌵𑌾 𑌚 𑌤𑌥𑍈𑌵 𑌚 ।
𑌬𑌹𑍍𑌵𑌾𑌹𑌾𑌰𑍍𑌯𑌾𑌶𑍍𑌚 𑌭𑍌𑌮𑌾𑌨𑌿 𑌤𑌾𑌨𑌿 𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌚𑍍𑌛𑍁𑌭𑍇 ॥

இவைகளைக் காண்பதும், இவைகள் எதிரில் வருவதும் பூமியில் நிகழும் சுப சகுனங்களாகும்.

இவைகளுக்கு மாறாகக் காணப்படுகின்றவைகள் அசுப சகுனங்களாகும். (24)

கொள்ளிக்கட்டை விழுவது, திக்குகள் எரிவது, பெருங் காற்றடிப்பது, இவைகள் அந்தரிக்ஷத்தில் உண்டாகும் அசுபங்களாகும். (அந்தரிக்ஷம் — ஆகாசம்) இனி பூமியில் காணப்படும் அசுப சகுனங்களைக் கூறுகிறேன்.

அவிழ்ந்த கூந்தலையுடைய ஸ்திரீகள் ஆண்கள், விரிந்த கூந்தலையுடைய ஸ்திரீகள் புருஷர்கள், எண்ணெ தேய்த்துக் கொண்ட ஸ்திரீ புருஷர்கள், துணி அணிந்துகொள்ளாமல் நக்நமாக இருப்பவர்கள், காஷாயவஸ்திரம் உடுத்தியவர்கள், ஒன்றுமில்லாமல் சூன்யமாக இருக்கும் மண்பாண்டம், எண்ணெயுடன் கூடிய பாத்திரம், மூக்கு, காது முதலிய அங்கங்கள் அறுபட்டவர்கள், அங்கம் குறைந்தவர்கள், அதிக அங்கமுடையவர்கள், பிள்ளை பெறாத ஸ்திரீகள், கணவனை இழந்த விதவைகள், அளவு கடந்து அதிகமாக ஆஹாரம் செய்பவன், இவைகள் பூமியில் காணப்படும் அசுப சகுனங்களாகும். இத்தகைய அசுப சகுனங்களைச் சுபகாரியங்களில் விலக்கிவிடவேண்டும். (28)

[illegible] ।
[illegible] ॥ ௨௯ ॥

ஸமிதாஜ்யான்னை: [illegible] (ஹோ)மம் [illegible]
[illegible] ।
[illegible] ॥

பர்வதே வா ஸமுத்ரே வா தீர்த்தே க்ஷேத்ரே ததைவ வனே
வா தத: ।
க்ஷீரவ்ருக்ஷஸமீபே ச தேவாலயஸமீபகே ॥ ௩௧ ॥

நதீ தடாகதீரே வா [illegible] ।
அந்யஸ்தானே ந க்ருஹ்ணீயாத் க்ருஹீதே வ்யாதி[illegible] ॥

சுபசகுனங்கள் காணப்பட்டால் புறப்பட்டுச்செல்ல வேண்டும். அசுபசகுனங்கள் காணப்பட்டால் பிரயாணத்தை நிறுத்திவிடவேண்டும்.

அசுபசகுனங்கள் காணப்பட்டால், அக்கினியை வளர்த்து, அதில் ஸமித்து, அன்னம், ஆஜ்யம் (நெய்) இவைகளால், சிவ (பஞ்சாக்ஷர) மந்திரத்தினால் 100 தடவை ஹோமம் செய்து பயத்தம்பருப்பிட்ட பொங்கலை நிவேதனம் செய்து, நாகபூஷணனான பரமேசுவரனை வணங்கிவிட்டு, பிறகு, ஆசாரியனானவன் சில்பியுடன் சிலாகிரஹணத்திற்கு புறப்பட்டுச் செல்லவேண்டும். (30)

சில்பியானவன், மலை, ஸமுத்திரம், புண்யதீர்த்தம், புண்யக்ஷேத்திரம், காடு இவ்விடங்களில், பாலுள்ள மரத்தின் பக்கத்திலும் தேவாலயத்தின் பக்கத்திலும் நதிக்கரையிலும் குளக்கரையிலும் இருக்கும் சிலையை எடுக்க வேண்டும். மற்றவிடங்களில் சிலாஸங்கிரஹணம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால், அதனால் அழிவு உண்டாகும். (32)

𑌶𑍍𑌵𑍇𑌤𑌾 𑌰𑌕𑍍𑌤𑌾 𑌚 𑌪𑍀𑌤𑌾 𑌚 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌚𑍈𑌵 𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌾 ।
𑌗𑍋𑌕𑍍𑌷𑍀𑌰𑌶𑌙𑍍𑌖𑌕𑍁𑌨𑍍𑌦𑍇𑌨𑍍𑌦𑍁𑌮𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌫𑌟𑌿𑌕𑌮𑌲𑍍𑌲𑌿𑌕𑌾 । ௩௩ ॥

𑌇𑌤𑍍𑌯𑌾𑌦𑌿𑌕𑌸𑌮𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾 𑌶𑍍𑌵𑍇𑌤𑌾 𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌧𑌾 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 ।
𑌜𑌪𑌾𑌕𑌿𑌂𑌶𑍁𑌕𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌭𑌾 𑌇𑌨𑍍𑌦𑍍𑌰𑌗𑍋𑌪𑌸𑌮𑌪𑍍𑌰𑌭𑌾 ॥ ௩௪ ॥

𑌜𑌾𑌤𑌿𑌲𑌿𑌙𑍍𑌗𑌶𑌿𑌰𑌾𑌕𑌾𑌰𑌾 𑌶𑌶𑌰𑌕𑍍𑌤𑌸𑌮𑌪𑍍𑌰𑌭𑌾 ।
𑌦𑌾𑌡𑌿𑌮𑍀𑌪𑍁𑌷𑍍𑌪𑌸𑌂𑌕𑌾𑌶𑌾 𑌬𑌨𑍍𑌧𑍂𑌕𑌕𑍁𑌸𑍁𑌮𑌪𑍍𑌰𑌭𑌾 ॥ ௩௫ ॥

𑌰𑌕𑍍𑌤𑌾 𑌸𑌪𑍍𑌤𑌵𑌿𑌧𑌾 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾 𑌏𑌵𑌮𑍇𑌵 𑌵𑌿𑌧𑍀𑌯𑌤𑍇 ।
*[𑌸𑍁𑌵𑌰𑍍𑌣𑌸𑌦𑍃𑌶𑌾𑌕𑌾𑌰𑌾 𑌚𑌮𑍍𑌪𑌕𑌪𑍍𑌰𑌸𑌵𑌪𑍍𑌰𑌭𑌾 ॥ ௩௬ ॥

𑌕𑍁𑌰𑌣𑍍𑌟𑌸𑌮𑌪𑍍𑌰𑌖𑍍𑌯𑌾 𑌹𑌰𑌿𑌦𑍍𑌰𑌾𑌸𑌦𑍃𑌶𑌾 𑌤𑌥𑌾 ।
𑌕𑍋(𑌕𑌾)𑌰𑍍𑌣𑌪𑍁𑌷𑍍𑌪𑌸𑌂𑌕𑌾𑌶𑌾 𑌜𑌮𑍍𑌬𑍀𑌰𑌫𑌲𑌸𑌨𑍍𑌨𑌿𑌭𑌾 ॥

𑌹𑌰𑌿𑌤𑌾𑌲𑌸𑌮𑌾𑌭𑌾𑌸𑌾] 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 𑌪𑍀𑌤𑌾 𑌚 𑌸𑌪𑍍𑌤𑌧𑌾 ।
𑌮𑌹𑌿𑌷𑌾𑌕𑍍𑌷𑌾𑌞𑍍𑌜𑌨𑌾𑌭𑌾𑌸𑌾 𑌨𑍀𑌲𑍋𑌤𑍍𑌪𑌲𑌸𑌮𑌪𑍍𑌰𑌭𑌾 ॥ ௩௮ ॥

சிலையானது, வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு. என்று நான்கு வகையாகும். வெளுப்புநிறச் சிலையானது, பசுவின் பால் 1, சங்கு 2, முல்லைப்பூ 3, சந்திரன் 4, முத்து 5, ஸ்படிகம் 6, மல்லிகைப்பூ 7, இவைகளைப் போன்ற 7 வித நிறமுடையதாகும்.

சிவப்புச் சிலையானது சம்பரத்தம்பூ 1, புரசப்பூ 2, புட்டுப்பூச்சி 3, ஜாதிலிங்கம் 4, முயல் ரத்தம் 5, மாதுளம்பூ 6, பந்தூக புஷ்பம் (சிவப்புப் பூவுடன் கூடிய பெருமருந்துப்பூ) 7, இவைகளைப்போல 7 விதமாகும்.

இவ்விதமே மஞ்சள் வர்ணச்சிலையானது, ஸுவர்ணம் 1, சரக்கொன்னைப்பூ 2, சம்பகப்பூ 3, மஞ்சள் 4, மஞ்சள்நிறக் குறிஞ்சிப்பூ 5, எலுமிச்சம்பழம் 6, அரிதாரம் 7 இவைகளைப்போல 7 விதமாகும்.

---

* 𑌶𑍍𑌲𑍋𑌕𑌪𑌞𑍍𑌚𑌕𑌂 𑌆𑌦𑍍𑌯𑌂 𑌨𑌾𑌨𑌾𑌕𑍋𑌶𑍇𑌭𑍍𑌯𑌃 𑌸𑌙𑍍𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌅𑌨𑍍𑌤𑌿𑌮𑌦𑍍𑌵𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑌰𑌣𑌾𑌨𑍁𑌰𑍋𑌧𑍇𑌨 𑌯𑍋𑌜𑌿𑌤𑌂 𑌬𑍋𑌦𑍍𑌧𑍍𑌯𑌂 ।

முதலில் கூறியுள்ள 5ம் பல பிரதிகளிலிருந்து எடுக்கப்பட்டது. கடைசியிலிருக்கும் 2ம் இடத்திற்குப் பொருத்தமாகச் சேர்க்கப்பட்டது.

𑌗𑍂𑌂 𑌮𑌯𑍂𑌰𑌕𑌣𑍍𑌠𑌾𑌭𑌾 𑌮𑌷𑍀𑌪𑌤𑍍𑌰𑌾𑌭𑌾 𑌤𑌥𑌾 ।
𑌰𑌾𑌜𑌾𑌵𑌰𑍍𑌤𑍍𑌤𑌨𑌿𑌭𑌾𑌕𑌾𑌰𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑌮𑍁𑌦𑍍𑌗𑌸𑌮𑌪𑍍𑌰𑌭𑌾 ॥ ௩௯ ॥

𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌮𑍁𑌦𑍍𑌗𑌸𑍍𑌵𑌕𑌾𑌭𑌾 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌦𑌶(𑌨𑌵)𑌵𑌿𑌧𑌾 𑌶𑌿𑌲𑌾 ।
𑌶𑍍𑌵𑍇𑌤𑌰𑌕𑍍𑌤𑌪𑍀𑌤𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌃 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌕𑍍𑌰𑌮𑌾𑌤𑍍 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃 ॥ ௪௰ ॥

𑌧𑌰𑍍𑌮𑌾𑌰𑍍𑌥𑌕𑌾𑌮𑌮𑍋𑌕𑍍𑌷𑌾𑌂𑌸𑍍𑌤𑍁 𑌦𑌦𑌤𑍍𑌯𑍁𑌸𑍍𑌤𑌤𑍍𑌤𑌦𑍈𑌵 𑌹𑌿 ।
𑌵𑌰𑍍𑌣𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑌵𑌶𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌵𑌰𑍍𑌣𑍇𑌷𑍁 𑌸𑍍𑌵𑌵𑌶𑌂 𑌵𑌿𑌨𑌾 ॥ ௪௧ ॥

𑌪𑍍𑌰𑌤𑌿𑌲𑍋𑌮𑌾𑌨𑍁𑌲𑍋𑌮𑌾𑌭𑍍𑌯𑌾𑌂 𑌹𑍀𑌨𑌯𑍋𑌨𑌂 𑌨 𑌮𑍃𑌷𑍍𑌯𑌤𑌾𑌮𑍍 ।
𑌆𑌚𑌾𑌰𑍍𑌯𑌶𑌿𑌲𑍍𑌪𑌿𑌨𑍌 𑌚𑍈𑌵 𑌸𑌿𑌤𑌵𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌨𑍁𑌲𑍇𑌪𑌨𑍌 ॥ ௪௨ ॥

கருப்புச் சிலையானது, ப்ஃஹிஷாக்ஷம் (பூனைக்கண் குங்குலியம்) 1, அஞ்சனக்கல் 2, நீலோத்பலம் 3, கருங்குளவி 4, மயிலின் கழுத்து 5, மஷீபத்ரம் 6, ராஜாவர்த்தம் (சிறிது கருமையான தேன் நிறமான ஒருவிதக் கல்)7, கருப்புப்பயறு 8, குறும்பயறு 9. இவைகளைப் போல 10 (9) விதமாகும்.

வெளுப்பு, சிவப்பு, மஞ்சள், கருப்பு, இந்நிறங்கள் முறையே பிராமணாதி ஜாதிகளுக்கு உரியவைகளாகக் கூறப்பட்டிருக்கின்றன அவைகள் (ஒவ்வொன்றும்) தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் இவைகளை எப்பொழுதும் கொடுப்பவைகளாம்.

அந்தந்த ஜாதிகளுக்குரிய சிலைகள், அந்தந்த ஜாதிக்கு ச்ரேஷ்டமாகும். ஹீநஜாதிச் சிலைகள் நிஷித்தமன்று. ஆனல் ஹீநஜாதியினருக்கு உத்தம ஜாதிச் சிலைகள் கூடாதவைகளாகும்.

இந்தப் பாகுபாட்டை, அநுலோமமாகவும் பிரதிலோமமாகவும் கொள்ளவேண்டும். ஆயினும் ஹீநஜாதிச் சிலையை ச்ரேஷ்டமாகக் கொள்ளக்கூடாது. (அநுலோமம் - கிரமமுறை. பிரதிலோமம் - எதிர்முறை.)

ஆசார்யன் சில்பீ இவ்விருவரும், வெளுப்பு ஆடை

𑌶𑍁𑌕𑍍𑌲𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌨𑍁𑌲𑌿𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑌃 𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑌭𑍂𑌷𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌃 |
𑌕𑍁𑌠𑌾𑌰𑌾𑌦𑍀𑌨𑌿 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌶𑌿𑌲𑌾𑌂 𑌗𑌤𑍍𑌵𑌾 𑌸𑌮𑌾𑌹𑌿𑌤𑌃 ||

𑌯𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌦𑍇𑌶𑍇 𑌶𑌿𑌲𑌾 𑌸𑌨𑍍𑌤𑌿 𑌤𑌾𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑍍 |
𑌦𑍋𑌷𑌵𑌰𑍍𑌜𑍍𑌯𑌾𑌂 𑌶𑌿𑌲𑌾𑌂 𑌦𑍃𑌷𑍍𑌟𑍍𑌵𑌾 𑌪𑌰𑌿𑌚𑍍𑌛𑌿𑌦𑍍𑌯 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ||

𑌵𑌰𑍍𑌷𑌾𑌤𑌪𑌾𑌗𑍍𑌨𑌿𑌮𑌗𑍍𑌨𑌾𑌂(𑌦𑌗𑍍𑌧𑌾𑌂) 𑌚 𑌸𑌙𑍍𑌕𑍍𑌷𑍀𑌣𑌾𑌂
𑌕𑍍𑌷𑌾𑌰𑌵𑌾𑌰𑌿𑌣𑌾 |
𑌦𑍁𑌷𑍍𑌟𑌦𑍇𑌶𑌸𑍍𑌥𑌿𑌤𑌾𑌂 𑌤𑌟𑌸𑍍𑌥𑌾𑌂 𑌚 𑌕𑌾𑌰𑍍𑌯𑌾𑌨𑍍𑌤𑌰𑍇 𑌤𑍁 𑌯𑍋𑌜𑌿𑌤𑌾𑌮𑍍 ||

𑌶𑌰𑍍𑌕𑌰𑌾𑌢𑍍𑌯𑌾𑌂 𑌸𑌪𑌙𑍍𑌕𑌾𑌂 𑌚 𑌭𑌗𑍍𑌨𑌾𑌂 𑌭𑍀𑌷𑌣𑌸𑌂𑌯𑍁𑌤𑌾𑌮𑍍 |
𑌰𑍇𑌖𑌾𑌬𑌿𑌨𑍍𑌦𑍁𑌕𑌲𑌙𑍍𑌕𑌾𑌦𑌿𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌂 𑌪𑌰𑌿𑌵𑌰𑍍𑌜𑌯𑍇𑌤𑍍 || ௪௫ ||

[illegible] 𑌤𑌥𑌾𑌕𑌾𑌰𑌾 𑌰𑌵𑌿𑌰𑌶𑍍𑌮𑌿𑌸𑌮𑌾𑌯𑍁𑌤𑌾 |

அணிந்து, வெண்சந்தனம் பூசி, வெளுப்பு மாலையணிந்து, பஞ்சாங்க பூஷணங்கள் பூண்டு, கோடரி முதலியவை களுடன், சிலை இருக்குமிடம் சென்று, மன அமைதியுடன் அந்தச் சிலையைப் பிரதக்ஷிணம் செய்து, தோஷமில்லாத சிலையைப் பார்த்து, விசேஷித்து அச்சிலையின் ஆகாரத்தை நிச்சயித்துக்கொள்ளவேண்டும். (44)

எப்பொழுதும் மழையில் நனைந்துகொண்டிருப்பது, வெய்யிலில் காய்ந்துகொண்டிருப்பது, தீயின் நாற்ற முள்ளது, (அல்லது தீயால் பொசுங்கியது) உப்பு ஜலம் படிந்தது, கெட்ட இடத்திலிருப்பது, தடத்தில் (ஜலக் கரையில்) இருப்பது, வேறு காரியத்திற்கு உபயோகிக்கப் பட்டது, மணல் கலந்திருப்பது, சேறு படிந்திருப்பது, சிதைவுற்றது (அழுத்தம் விசிறிப்போனது), பார்க்க பயங்கரமானது, கோடுகள் புள்ளிகள் களங்கங்கள் இவை களுடன் கூடியது, இத்தகைய சிலைகளை நீக்கிவிட வேண்டும். (46)

வர்ஷதாராபதாகாரா ரேகா சைவ த்ரிதா ஸ்ம்ருதா ॥ ௪௭ ॥

ஜம்பூபலஸமாகாரா த்ராக்ஷாயாஸ்ஸத்ருஶாதவா ।
அந்யதா(யா) வ்ருத்தஸங்காஶா த்ரிதா பிந்துஸம்ஜ்ஞிதா ॥

க்ருஷ்ணலோஹநிபாகாரா க்ருஷ்ணப்ரமரஸந்நிபா ।
ஶிகிபிஞ்சஸமாகாரா கலங்கா அத வர்ஜ்யா
(த்ரயா உதா) ॥ ௪௯ ॥

கர்ஜூரபத்ரஸங்காஶா தூர்வாஸ்தம்பநிபா ததா ।
வேணுவம்ஶாங்குரஸங்காஶா ஊர்ணநாபபதாயதா ॥ ௫௦ ॥

அந்யவர்ணே ஸிதா ரேகா ஸர்வஸம்பத்ஸம்ருத்திதா ।

கயிறு விழுந்தது (கல்லின் நடுவில் கயிறு போன்ற ரேகை யுள்ளது) அல்லது கயிறு போன்ற தோற்றமுடையது, ஸூரிய கிரணம் பாய்ந்தது, மழைக்கால் போன்ற உருவமுடையது என ரேகை மூன்று விதமாகும்.

நாவப்பழம் போன்ற உருவமுடையது, திராக்ஷைப் பழம் (அல்லது காய்) போன்ற உருவமுடையது, வேறு எந்த விதத்திலாவது வட்டவடிவமாக இருப்பது, என பிந்துவானது மூன்றுவிதமாகும்.

இரும்புபோன்ற நிறமுடையது, கருங்குளவிபோன்ற நிறமுடையது, மயில் தோகை போன்ற நிறமுடையது, என களங்கம் மூன்றுவிதமாகும். (இத்தகைய தோஷமுள்ள கற்கள் கூடாதவைகளாம்) (49)

பேரிச்சையிலைபோன்ற கோடுடையது, அருகங்கட்டை போன்ற கோடுடையது, மூங்கில் முளைபோன்ற கோடுடையது, எட்டுக்கால் பூச்சியின் கால்களைப்போல நீண்ட கோடுகளுடையது, இவைகளும், வெள்ளை நிறமல்லாத மற்ற நிறமுள்ள கல்லில் வெள்ளை ரேகையும், ஸகலவித ஸம்பத்துக்களின் நிறைவைக் கொடுக்கும். [எனவே

க்ருஷ்ணக்ருஷ்ணா விநாஶாய ஶ்வேதக்ருஷ்ணா ததைவ ஹி || ௫௧ ||

தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந வர்ஜ்யா ஹ்யாதோஷயுதா: |
க்ருஷ்ணா ச ஹரிதா க்ராஹ்யா ஸிதவர்ணா விஶேஷத: ||

பாராவதஸத்ருஶா ச தூர்வாஸ்தம்பாக்ருதிப்ரபா |
அதிக்ருஷ்ணப்ரபா யா து ஶிலா ஸா த்வஶுபப்ரதா ||

கலங்கா ரோகதா ஜ்ஞேயா ராஜராஷ்ட்ரவிநாஶநம் (கா) |
பிந்துகா புத்ரநாஶாய தாரித்ர்யஶ்ரீவிநாஶதா || ௫௩ ||

முதலில் கூறப்பட்ட 4 வித் கோடுகளும் வெள்ளைக் கல்லுக்குக் கூறப்பட்டவைகளாம்.]

கருப்புக் கல்லில் கருப்புக்கோடும், வெள்ளைக் கல்லில் கருப்புக்கோடும் அழிவை யுண்டுபண்ணும். ஆகையால், முழுமுயற்சியுடன் கீழே கூறப்பட்ட குற்றங்களில்லாத கற்களையே கிரஹிக்கவேண்டும்.

கருப்பு நிறமான கல்லும், பச்சை நிறமான கல்லும், (அல்லது கருப்பும் பச்சையும் கலந்த நிறமான கல்) கிரஹிக்கத் தக்கதாகும். வெள்ளை நிறமான கல், விசேஷித்து கிரஹிக்கத் தக்கதாகும். பேரீச்சையிலையின் நிறமுடைய கல்லும், அருகங்கட்டையின் நிறமுடைய கல்லும் சுப பலனைக் கொடுக்கும்.

மிகவும் கருப்பான நிறமுடைய கல்லானது, அசுப பலனைக் கொடுக்குமென்று கூறப்பட்டிருக்கிறது. பசுக்கள், தான்யம், தநம் இவைகளையும் அழித்துவிடும். (53)

களங்கதோஷமுள்ள கல்லானது, ரோகத்தை யுண்டு பண்ணும்; அரசன், ராஜ்யம் இவைகளையும் அழித்துவிடும்.

பிந்து (புள்ளி) தோஷமுள்ள கல்லானது, புத்திர நாசத்தையும் தாரித்திரியத்தையும் கொடுக்கும்; இருக்கும் செல்வத்தையும் அழித்துவிடும்.

𑌏𑌵𑌂 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌬𑌹𑍁𑌧𑌾 𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯𑌾𑌶𑍍 𑌶𑍁𑌭𑌲𑌕𑍍𑌷𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌬𑌾𑌲𑌾 𑌚 𑌯𑍁𑌵𑌤𑌿𑌵𑍃𑌦𑍍𑌧𑌾 𑌪𑍁𑌂 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌨𑌪𑍁𑌂𑌸𑌕𑌂 𑌤𑌥𑌾 ॥

𑌶𑌬𑍍𑌦𑌕𑌾(𑌣𑌾)𑌕𑍃𑌤𑌿𑌭𑍇𑌦𑍈𑌸𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌶𑍃𑌣𑍁 ।
𑌵𑌦𑌨𑍍𑌤𑍇 𑌸𑌧𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌹𑍍𑌰𑌸𑍍𑌵𑌾 𑌶𑌿𑌲𑌾 𑌬𑌾𑌲𑌾 𑌇𑌤𑌿 𑌸𑍍𑌮𑍃𑌤𑌾 ॥

𑌘𑌣𑍍𑌟𑌾𑌧𑍍𑌵𑌨𑌿𑌰𑍍𑌦𑍀𑌰𑍍𑌘𑌾 𑌯𑍁𑌵𑌤𑌿𑌃 𑌸𑌾 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 ।
𑌵𑍃𑌦𑍍𑌧𑌧𑍍𑌵𑌨𑌿𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌾 𑌯𑌾 𑌸𑌾 𑌵𑍃𑌦𑍍𑌧𑌾 𑌚 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌾 ॥ ௫௭ ॥

𑌘𑌣𑍍𑌟𑌾𑌧𑍍𑌵𑌨𑌿𑌸𑌮𑍋𑌪𑍇𑌤𑌾 𑌦𑍀𑌰𑍍𑌘𑌾 𑌸𑌾 𑌪𑍁𑌂𑌶𑌿𑌲𑍋𑌦𑌿𑌤𑌾 ।
𑌤𑌾𑌲𑌶𑌬𑍍𑌦𑌸𑌮𑌾𑌕𑌾𑌰𑌾 𑌦𑍀𑌰𑍍𑌘𑌾 𑌯𑌾 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀𑌶𑌿𑌲𑌾 𑌤𑍁 𑌸𑌾 ॥

இவ்விதமாகக் கற்களின் குணதோஷங்களை நன்கு ஆராய்ந்து பார்த்து, தோஷமுள்ள சிலைகளை நீக்கி, குணமும் லக்ஷணமுமுடைய சிலையையே க்ரஹித்துக்கொள்ள வேண்டும்.

சிலையானது, ஒலி, உருவம் இவைகளின் பேதங்களால் பாலை, யுவதி, விருத்தை என்றும், புருஷ சிலை, ஸ்திரீ சிலை, நபும்ஸக சிலை என்றும், பாகுபாடு செய்யப்பட்டிருக்கும் முறையைக் கூறுகிறேன். கேட்பாயாக!

கெல்லும்பொழுது, சத்தமும் குட்டையான உருவமும் உடைய சிலையானது, பால சிலையாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

மணியின் ஓசையைப்போன்ற ஓசையும் நீண்ட வடிவமுமுடையது ஸ்திரீ சிலை என்று கூறப்பட்டிருக்கிறது.

எரசலான சத்தமுடையது விருத்தசிலை என்று கூறப்பட்டிருக்கிறது. (57)

மணியோசையைப்போல் அதிக சத்தமும், நீண்ட வடிவமுமுடையது, புருஷ சிலையாகும் என்று கூறப்பட்டுள்ளது.

பனையைப்போன்ற ஓசையும் நீண்ட வடிவமுமுடையது, ஸ்திரீ சிலையாகும் என்று கூறப்பட்டுள்ளது.

அஸ்திரா கடி²னா ரூக்ஷா ஸ்பு²டிதா நபும்ஸகா |
ஸ்வரேணைவம் ஸமாக்²யாதா ரூபபே⁴தோ³(அ)த² உச்யதே ||

சதுரஶ்ரா ச வஸ்வஶ்ரா ஸ்த்ரீஶிலேதி ப்ரகீர்திதா |
ஆயதாஶ்ரா ச வ்ருத்தா ச த³ஶத்³வாத³ஶகோணகா || ௬௦ ||

பும்ஶிலா ஸா ஸமாக்²யாதா ஸுவ்ருத்தா ஸா
நபும்ஸகா |
த³ஶாஶ்ராம் த்³வாத³ஶாஶ்ராம் ச பா³லாம் வ்ருத்³தா⁴ம் ச வர்ஜயேத் ||

லிங்க³ம் குர்யாத் பும்ஶிலாபி⁴: ஸ்த்ரீஶிலாபி⁴ஸ்து பிண்டி³காம் |
நபும்ஸகஶிலாபி⁴ஸ்து பாதா³தா⁴ரம் ஸமாசரேத் || ௬௨ ||

பளபளப்பில்லாமல் உறுதியில்லாமல் கரடுமுரடாய் ஒலியில்லாமலிருக்கும் சிலையானது நபும்ஸக சிலை என்று கூறப்பட்டுள்ளது.

இவ்விதம் ஒலியினால் பேதம் கூறப்பட்டுள்ளது. இனி உருவத்தினால் பேதத்தைக் கூறுகிறேன். (59)

சச்சதுரமாகவும் எட்டுக் கோணமாகவும் இருக்கும் சிலையானது ஸ்திரீ சிலையாகும் என்று கூறப்பட்டிருக்கிறது.

நீண்டசதுரமாகவும், வட்டவடிவமாகவும், பத்துக் கோணமாகவும், பன்னிரண்டு கோணமாகவும் இருப்பது, புருஷசிலை என்று கூறப்பட்டிருக்கிறது.

நன்கு வட்டவடிவமாக இருப்பது, நபும்ஸக சிலையாகும்.

10 கோணமாக இருக்கும் சிலை, 12 கோணமாக இருக்கும் சிலை, பாலசிலை, விருத்தசிலை, இவைகளை விலக்கிவிட வேண்டும். (61)

புருஷ சிலையினால் லிங்கத்தைச் செய்யவேண்டும். ஸ்திரீ சிலையினாலே பிண்டிகையைச் செய்யவேண்டும்.

𑌕𑍃𑌤𑌂 𑌚 𑌵𑌿𑌪𑌰𑍀𑌤𑌂 𑌯𑌤𑍍 𑌤𑌤𑍍𑌸𑌦𑌾 𑌕𑌰𑍍𑌤𑍃𑌨𑌾𑌶𑌨𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌗𑌗𑍍𑌰𑌾𑌂 𑌚𑍋𑌦𑌗𑌗𑍍𑌰𑌾𑌂 𑌵𑌾 𑌶𑌿𑌲𑌾𑌂 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌦𑍇𑌶𑌿𑌕𑌃 ॥ ௬௩ ॥

𑌪𑍍𑌰𑌾𑌗𑌗𑍍𑌰𑍇 𑌪𑌶𑍍𑌚𑌿𑌮𑌂 𑌮𑍂𑌲𑌮𑍁𑌦𑌗𑌗𑍍𑌰𑍇 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇(𑌣𑌂) ।
𑌪𑍍𑌰𑌾𑌚𑍍𑌯𑌸𑍌𑌮𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌕𑌂 𑌯𑌤𑍍𑌤𑍁 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌗𑍍𑌰𑌂 𑌤𑌤𑍍𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 ॥

𑌶𑌿𑌲𑌾𑌯𑌾 𑌮𑍂𑌲𑌂 𑌮𑍁𑌖𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌪𑍃𑌷𑍍𑌠𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑌾𑌗𑍍𑌰𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌏𑌵𑌂 𑌪𑌰𑍀𑌕𑍍𑌷𑍍𑌯 𑌸𑌂𑌗𑍍𑌰𑌾𑌹𑍍𑌯 𑌗𑌵𑍍𑌯𑍈𑌃 𑌕𑍍𑌷𑌾𑌲𑍍𑌯 𑌹𑍃𑌦𑌾 𑌬𑍁𑌧𑌃 ॥ ௬௪ ॥

𑌸𑌤𑍍𑌯(𑌦𑍍𑌯) 𑌮𑌨𑍍𑌤𑍍𑌰𑍇𑌣 𑌸𑌂𑌸𑍍𑌥𑌾𑌪𑍍𑌯 𑌗𑌨𑍍𑌧𑌪𑍁𑌷𑍍𑌪𑌾𑌦𑌿𑌭𑌿𑌰𑍍𑌯𑌜𑍇𑌤𑍍 ।

(பிண்டிகை—பீடம்.) நபும்ஸக சிலையினுலே பாதாதாரத்தைச் செய்யவேண்டும். (பாதாதாரம்—லிங்கத்தின் அடித்தலத்தின் ஆதாரம்.) இப்படிக்குச் செய்யாமல் இதற்கு விபரீதமாகச் செய்தால், அது எப்பொழுதும் கர்த்தாவுக்கு (செய்தவனுக்கு) அழிவையுண்டுபண்ணும்.

தேசிகனுனவன், கிழக்கு நுனியாகவோ வடக்கு நுனியாகவோ இருக்கும் சிலையை கிரஹிக்கவேண்டும். (63)

கிழக்கு நுனியான சிலையில், மேற்குப்பக்கம் அடிப்பக்கமாகும். வடக்கு நுனியான சிலையில் தென்பக்கம் அடிப்பக்கமாகும். கிழக்குப்பக்கமும் வடக்குப்பக்கமும் லிங்கத்தின் நுனிப்பக்க(தலைப்பக்க)மாகும் என்று கூறப்பட்டிருக்கிறது. சிலையின் அடிப்பக்கம் முகமாகும் (முன்பக்கமாகும்). மேல்ப்பக்கம் பின்பக்கமாகும்.

இவ்விதமாக, சிலையை நன்கு பரீக்ஷித்துப்பார்த்து, அதை எடுத்து, அந்தச் சிலையை, ஹிருதய மந்திரத்தினுலே பசும்பாலினுல் நன்கு அலம்பி சுத்தம் செய்யவேண்டும். பிறகு, அந்தச் சிலையைத் தூக்கி நிறுத்திவைத்து, ஸத்திய மந்திரத்தினுலே சந்தனம் புஷ்பம் முதலியவைகளால்

தஸ்யாஸ்து ஶாங்கரே தேஶே ஶாந்திஹோமம் து
காரயேத் || ௬௬ ||

அக்ந்யாதாநாதிகம் ஸர்வம் தத்தத்காலோசிதம் சரேத் |
ஸமிதோ ஹ்ருதயேநைவ மூலேநாஜ்யம் து ஹோமயேத் ||

அகோரேண சரும் ஹுத்வா புருஷேணைவ தண்டுலம் |
திலாநீஶாநமந்த்ரேண ஸர்ஷபம் கவசேந து || ௬௮ ||

ஶதம் தத³ர்த்தம் பாதம் வா ப்ரத்யேகம் ஜுஹுயாத் க்ரமாத் |
ஸ்விஷ்டக்ருதம் அக்நேதி பூர்ணாஹுதிமதாசரேத் ||

ததோ வஹ்நிம் விஸ்ருஜ்யாஸ்ய பூஜாபர்யுஷிதம் த்யஜேத் |
ஶிலாச்சேதகரம் ஶஸ்த்ரமஸ்த்ரமந்த்ரேண பூஜயேத் || ௭௦ ||

பூஜிக்கவேண்டும். அதன் பிறகு, அதன் ஈசாந்ய திக்கில் சாந்தி ஹோமத்தைச் செய்யவேண்டும். (66)

அக்ஙி ஆதானம் முதலிய எல்லாவற்றையும், அதற்குக் கூறியுள்ள முறைப்படி செய்யவேண்டும். ஹிருதய மந்திரத்தினுல் ஸமித்துக்களையும், மூலமந்திரத்தினுல் நெய்யையும், அகோர மந்திரத்தினுல் சரு (அந்நம்) வையும், புருஷ மந்திரத்தினுல் தண்டுலத்தையும், (தண்டுலம் – அரிசி) ஈசான மந்திரத்தினுல் எள்ளையும், கவ்ச மந்திரத்தினுல் கடுகையும் ஹோமம் செய்யவேண்டும். மேலே கூறியுள்ள ஸமித்து, நெய், அந்நம், அரிசி, எள்ளு, கடுகு, இவைகள் ஒவ்வொன்றையும் முறையே 100, 50 அல்லது 25 தடவை ஹோமம் செய்யவேண்டும். அக்நே என்ற மந்திரத்தினுல் ஸ்விஷ்டகிருத் ஹோமத்தைச் செய்து, அதன் பிறகு, பூர்ணுஹுதி ஹோமத்தைச் செய்யவேண்டும். (69)

அதன் பிறகு, அக்ஙியை உத்வாஸநம் செய்துவிட்டு, பூஜைசெய்த நிர்மாலிய புஷ்பம் முதலியவைகளை எடுத்துக் களையவேண்டும்.

சிலையைத் துண்டாடவேண்டிய ஆயுதத்தை, அஸ்த்ர

* कवचवर्मास्त्रान्तैः शिलाच्छेदनमाचरेत् ।
तदूर्ध्वं शिल्पिकार्यं तु स्थपत्यादिः समाचरेत् ॥

गर्भगेहप्रमाणं च द्वारमानं तथैव च ।
स्तंभमानं तलमानं हस्तं तालमङ्गुलं तथा ॥ ௭௨ ॥

लिङ्गमानं पुरा प्रोक्तं सप्तधा प्रत्येकशः ।
गर्भगेहे तु पञ्चांशे गुणांशं ज्येष्ठ
उच्यते ॥ ௭௩ ॥

गर्भार्धं मध्यमं प्रोक्तं तयोर्मध्येऽष्टभाजिते ।

மந்திரத்தினுலே பூஜை செய்யவேண்டும். அபஸர்பண மந்திரத்தை ஜபித்து, சிலையைத் துண்டாடவேண்டும். அதற்குப் பிறகு சிற்பி செய்யவேண்டிய காரியத்தை ஸ்தபதி முதலியவர்கள் செய்யவேண்டும். (71)

கர்ப கிருஹத்தின் அளவு, துவாரத்தின் அளவு (துவாரம் – கர்பகிருஹத்தின் வாயிற்படி) ஸ்தம்பத்தின் அளவு (ஸ்தம்பம் – கர்பகிரஹத்தின் தூண் மட்டம்) தலமானம் (கர்பகிருஹத்தின் பூமட்டத்தின் வெளிப்பக்கத்தின் அளவாகும். வெளிப்பிராகாரத்தின் வெளிப்பக்கத்தின் நீளமும் தலமானமாகக் கூறப்பட்டிருக்கிறது. இதுவே பாதமானமென்றும் கூறப்பட்டிருக்கிறது) ஹஸ்தமானம், தாலமானம், அங்குலமானம் என்று லிங்கமானமானது 7-வித மானங்களால் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. இந்த 7-வித மானங்களிலும் பலவித அளவுகள் கூறப்பட்டிருக்கின்றன.

கர்பகிருஹத்தின் அளவில் 5-ல் 3 பங்கு (உயரம்) இருக்கும் லிங்கமானது உத்தமலிங்கமாகும். அதில் ஸரி

---

* कवचं च शिलाच्छेदनमिति पाठान्तरम् ।

கவசமந்திரத்தால் சிலாச்சேதனம் செய்யவேண்டும் என்று மற்றொரு பிரதியிலுள்ள பாடம்.

𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌮𑌧𑍍𑌯𑌾𑌧𑌮𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑍇𑌕𑌂 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௭௪ ॥

𑌅𑌥𑌵𑌾 𑌗𑌰𑍍𑌭𑌗𑍇𑌹𑌂(𑌹𑍇)𑌤𑍁 𑌨𑌵𑌭𑌾𑌗𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ।
𑌗𑌰𑍍𑌭𑌗𑍇𑌹𑌸𑌮𑌾𑌨𑍍𑌤𑌾𑌨𑍍𑌤𑌾𑌰𑍍𑌧𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌿𑌤𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ॥ ௭௫ ॥

𑌦𑍍𑌵𑌾𑌰𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌸𑌮𑌂 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌕𑌨𑍀𑌯𑌸𑌮𑍍 ।
𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌷𑍍𑌟𑌭𑌾𑌗𑍈𑌸𑍍𑌤𑍁 𑌨𑌵𑌭𑍇𑌦𑌂 𑌵𑌿𑌜𑌾𑌨𑌤 ॥ ௭௬ ॥

𑌸𑍍𑌤𑌂𑌭𑌾𑌯𑌾𑌮𑌸𑌮𑌾𑌂𑌶𑍇 𑌤𑍁 𑌨𑌵𑌭𑌾𑌗𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ।
𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑌾𑌦𑍍𑌯𑌾𑌂𑌶𑌾𑌤𑍍𑌤𑌥𑍈𑌵𑌂 𑌨𑌵𑌧𑌾 𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 𑌬𑍁𑌧𑍈𑌃 ॥ ௭௭ ॥

பாதியளவு இருப்பது, மத்தியமலிங்கமாகும். இந்த இரண்டு அளவுகளின் மத்தியிலுள்ள அளவை, அதாவது, ஸரிபாதியிலிருந்து முழு அளவுவரையிலுள்ள (½-க்குமேல் 1 வரையில் உள்ள) மத்திய அளவை 9 பாகங்களாகச் செய்யவேண்டும். அவைகளில் ஒவ்வொரு அளவும் தனித்தனியே 9-வித லிங்கமானமாகும். இந்த 9-வித லிங்கமானங்களில் அதிக அளவுள்ள 3-ம் உத்தமமாகும். மத்தியிலுள்ள 3-ம் மத்தியமமாகும். குறைந்த அளவுள்ள 3-ம் அதமமாகும். இவ்விதமாக கர்பகிருஹத்தின் அளவினால் கிடைக்கும் லிங்கத்தின் உயரமானது 9-விதமாகும். (75)

லிங்கமானது (லிங்கத்தின் உயரமானது) கர்பகிருஹ துவாரத்திற்கு (உயரத்திற்கு) ஸமமாக இருப்பது உத்தம லிங்கமாகும். அதில் 3-ல் 2 பங்கு உயரமுள்ளது கனிஷ்டமாகும் (அதமமாகும்.) இவ்விரண்டு அளவுகளின் மத்தியிலுள்ள அளவை 8 பாகங்களாகச்செய்ய, துவாரமானத்தால் கிடைக்கும் லிங்கமானமானது 9 விதமாகும். (76)

ஸ்தம்பத்தின் முழு அளவை 9 பாகங்களாகச் செய்ய, அதன் ஒவ்வொரு பாகமும் தனித்தனியே, லிங்கத்தின் மானமாகும். எனவே ஸ்தம்பமானத்தால் கிடைக்கும் லிங்கமானமானது 9 விதமாகும். இவைகளில் மூன்று மூன்று

ப்ராஸாதே³ க்ஷுத்³ரமாநே து ஹஸ்தமாநமுதா³ஹ்ருதம் ।
க்ஷயிஷ்டா²தி⁴கே விப்ர ஹஸ்தமாநம் ந கல்பயேத் ॥ ௭௮ ॥

ஏகஹஸ்தம் ஸமாரப்⁴ய ஸ்வாஷ்டாம்ஶாம்ஶ விவர்த⁴நாத் ।
நவஹஸ்தாவதி⁴ர்யாவத் ஸங்க்²யாஷஷ்டி: ஸபஞ்சகா ॥ ௭௯ ॥

பஞ்சஹஸ்தாதி⁴(ஸ்தாதி⁴)கே நாதி³(த்³ரி)ஹர்ம்யே ஹஸ்தவஶம்(ஶாத்) நயேத் ।
பஞ்சஹஸ்தாதி⁴யோஹர்ம்யே லிங்க³ம் ஹஸ்தவஶம் விநா ॥ ௮௦ ॥

ஹஸ்தாதி³ த்ரயஹஸ்தாந்தம் * விகல்பாபா⁴ஸஹர்ம்யயோ: ।

கூறுகள், முறையே உத்தம – மத்தியம – அதமங்களாகும். கர்பகிருஹத்தின் ஆதிபூமியான உள்பக்கத்தில் தூண் மட்டத்திற்கு ஸமமான பகுதிக்கே ஸ்தம்பம் என்று பெயர். அதிஷ்டாநத்தின் உயரத்தில் ஸ்தம்பமாநத்தைப் போல கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். (78)

ஒரு ஹஸ்தம் முதல் 9 ஹஸ்தம் வரையில் ஹஸ்தத்தில் 8ல் ஒரு பங்கு வீதம் கூட்டிவர, ஹஸ்தமாநத்தினுல் கிடைக்கும் லிங்கமாநமானது 65 விதமாகும். (79)

5 ஹஸ்தத்திற்கு அதிகமாகயிருக்கும் கர்பகிருஹத்தில், லிங்கமாநத்தை, ஹஸ்தமாநத்தால் கணக்கிட வேண்டும். கர்பகிருஹமானது, 5 ஹஸ்தத்திற்கு உள்பட்டதாக இருந்தால், ஹஸ்தமாநத்தினுல் லிங்கமாநத்தைக் கணக்கிடக் கூடாது. (80)

*ஆலயமானது, விகல்பஹர்மியமாகவோ, ஆபாஸஹர்மியமாகவோ இருந்தால், அப்பொழுது 1 முதல் 3 ஹஸ்தம் வரையில் லிங்கமாநத்தைக் கொள்ளவேண்டும்.

---

* விகல்பாபா⁴ஸச்ச²ந்த³ஜாதிவிமாநலக்ஷணாநி ௨௪ படலே மாநஸூத்ரலக்ஷணே த்³ரஷ்டவ்யாநி ।

* விகல்பம்—ஆபாஸம்—சந்தம்—ஜாதி—எனப்படும் விமாந லக்ஷணங்களை 24-வது படலத்தில் மாநஸூத்ரலக்ஷணத்தில் பார்த்துக்கொள்ளவேண்டும்.

𑌤𑍍𑌰𑌿𑌹𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 𑌷𑌟𑍍𑌕𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌲𑌿𑌂𑌗𑌂 𑌸𑌨𑍍𑌧𑌿𑌵𑌿𑌮𑌾𑌨𑌕𑍇 ॥

𑌷𑌟𑍍𑌕𑌰𑌾𑌦𑌿 𑌨𑌵𑌾𑌨𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌲𑌿𑌂𑌗𑌂 𑌹𑍁(𑌜𑌾)𑌤𑌿𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌮𑍍 ।
𑌏𑌵𑌂 𑌹𑌸𑍍𑌤𑌵𑌶𑌾𑌤𑍍𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌤𑌾𑌲𑌮𑌾𑌨𑌮𑌥𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௮௨ ॥

𑌏𑌕𑌾𑌦𑌿 𑌨𑌵𑌤𑌾𑌲𑌾𑌨𑍍𑌤𑌮𑍇𑌕𑍈𑌕𑌤𑌾𑌲𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ।
𑌲𑌿𑌂𑌗𑍇 𑌹𑌿 𑌨𑌵𑌸𑌂𑌖𑍍𑌯𑌾𑌃(𑌭𑍇𑌦𑌾𑌃) 𑌸𑍍𑌯𑍁𑌃 𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌂
𑌜𑌾𑌤𑍀𑌤𑌰𑌾𑌲𑌯𑍇 ॥ ௮௩ ॥

* 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌾𑌂𑌗𑍁𑌲𑌂 𑌆𑌰𑌭𑍍𑌯 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨𑌵𑌶𑌤𑌾𑌂𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌤𑌾𑌵𑌦𑍇𑌕𑍋𑌨𑌪𑌞𑍍𑌚𑌾𑌶𑌲𑍍𑌲𑌿𑌂𑌗𑌂 𑌮𑌾𑌨𑌾𑌂𑌗𑍁𑌲𑍇𑌨 𑌤𑍁 ॥ ௮௪ ॥

𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌸𑌹𑌿𑌤𑌂 𑌲𑌿𑌂𑌗𑌂 𑌹𑌸𑍍𑌤𑌕𑍍𑌷𑍀𑌣𑌂 𑌨 𑌕𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।

ஆலயமானது, சந்தவிமானமாக இருந்தால் 3 முதல் 6 ஹஸ்தம் வரையில் லிங்கமானத்தைக் கொள்ளவேண்டும். அதுவே, ஜாதிவிமானமாக இருந்தால் 6 முதல் 9 ஹஸ்தம் வரையில் லிங்கமானத்தைக் கொள்ளவேண்டும். இவ்விதமாக ஹஸ்தவசத்தாலே லிங்கமானம் கூறப்பட்டிருக்கின்றது. இனி தாலமானத்தைக் கூறுகிறேன். (82)

ஏகதாலம் முதல் ஒவ்வொரு தாலமாகக் கூட்டிவர, தாலபேதத்தினாலே லிங்கமானம் 9 விதமாகும். இது ஜாதி ஹர்மியமல்லாதவிடத்திற்குக் கூறப்பட்டதாகும். (83)

13 அங்குலம் முதல் 109 அங்குலம் வரையில் 2, 2, அங்குலமாகக் கூட்டிவர லிங்கமானம் 49 விதமாகும். இது மானாங்குலத்தால் கூறப்பட்டதாகும். (84)

சிவாம்சம், விஷ்ணுவம்சம், பிரஹ்மாம்சம், என்ற 3 பிரிவுகளுடன் கூடிய லிங்கத்தை, ஒரு முழ(உயர)த்திற்குக்

---

* 𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌾𑌤𑍍 𑌦𑍍𑌵𑍍𑌯𑌂𑌗𑍁𑌲𑌂 𑌤𑍁 𑌯𑌾𑌵𑌨𑍍𑌨𑌵𑌶𑌤𑌾𑌂𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌇𑌤𑌿 𑌵𑌾𑌚𑌨𑌪𑌾𑌠𑌃 ।

ஹஸ்தோநாக்ஷயம் லிங்கம் வ்ருத்தாகாரமசேஷத: ॥ ௮௫ ॥

வேதம் நவாம்சேஷ்வதயே விஷ்டரே யோஜயேத் புத: ।
சேஷம் து த்ருச்யபாகம் ஸ்யாத் விகல்பாபாஸஹர்ம்யயோ: ॥

விஷ்டரே வேதயேத்பஞ்சம் விகல்பாபாஸகம் விநா ।
த்ருச்யோத்யர்த்தாம்சம் லிங்கம் சைலஜம் து ந காரயேத் ॥

ஏவம் குணைருபேதைஸ்து ப்ராஸாதே லிங்கமாநகம் ।
நாகரம் த்ராவிடம் லிங்கம் வேஸரம் ச வதாம்யஹம் ॥ ௮௬ ॥

குறைவாகச் செய்யக்கூடாது. ஒரு முழத்திற்குக் குறை வில்லாத லிங்கம் யாவும், விருத்தாகாரமாக (வட்டவடிவ மாக)இருப்பதாகும். (85)

லிங்கத்தின் உயரத்தில் 9ல் 4 பாகத்தை பீடத்தினுள், பொருத்தவைக்கவேண்டும். அதன் மீதமான 5 பாக மானது மேலே (சிவாம்சமாக) தெரியவேண்டும். இவ்வித லக்ஷணமுடைய லிங்கத்தை, விகல்பகிருஹம், ஆபாஸ கிருஹம், இவைகளில் வைத்துப் பிரதிஷ்டை செய்ய வேண்டும். (86)

லிங்கத்திற்குக் கூறிய 5 பாகத்தை, பீடத்தினுள் வைத்து, பாக்கியுள்ள 4 பாகத்தை, மேலே சிவாம்சமாகத் தெரியும்படி செய்யப்பட்டிருந்தால், அந்த லிங்கத்தை விகல்பகிருஹத்திலோ, ஆபாஸகிருஹத்திலோ வைக்காமல், மற்ற ஜாதி கிருஹம், சந்தகிருஹத்தில் வைக்கவேண்டும். சிலையினாலே செய்யப்படும் லிங்கத்தை 13 அங்குலத்தில் செய்யக்கூடாது. (87)

லிங்கமாநமானது இவ்விதம் அநேகவிதமாகக் கூறப் பட்டிருக்கிறது. இனி நாகரலிங்கம், திராவிடலிங்கம், வேஸரலிங்கம் இவைகளின் லக்ஷணத்தைக் கூறுகிறேன்.

லிங்கோச்ச்ராயே து வேதாம்ஶே ஶஶாம்ஶம் கந்யஸம் ஸ்ம்ருதம் |
த்ர்யம்ஶே ஶிவாம்ஶம் து விஸ்தாரம் ஶ்ரேஷ்டமுச்யதே ||

தயோர்மத்யேஷ்டபாகே து நவதா தார உச்யதே |
ஷோடஶாம்ஶே து பஞ்சாம்ஶம் ஶாந்திகம் பவேத் ||

வேதாம்ஶம் பௌஷ்டிகம் வ்யாப்தம் ராமாம்ஶம் ஜயதம் பவேத் |
ஆபிசாரே த்விபாகம் ஸ்யாத் வ்யாஸமேவம் சதுர்விதம் ||

ஏவம் த்ரயோத(சதுர்த)ஶவ்யாஸம் நாகரே து விதீயதே |
லிங்கோச்சே விபவாம்ஶே து ரஸேஷுயுகராமாம்ஶகம் ||

லிங்கத்தின் உயரத்தில் 4-ல் 1 பங்கு அகலமுடைய லிங்கமானது அதமமாகும். உயரத்தில் 3-ல் 1 பங்கு அகலமுடையது ஶ்ரேஷ்டமாகும். (ஶ்ரேஷ்டம் – சிறந்தது அல்லது உத்தமம்) கீழே கூறப்பட்ட இரண்டுவித அளவு களின் நடுவிலுள்ள அளவை, 8 பாகங்களாகச் செய்ய, லிங்கத்தின் அகலம் 9 விதமாகும்.

உயரத்தில் 16-ல் 5 பாகம் அகலமுள்ளது, சாந்திக லிங்கமாகும். (சாந்திகம் – தீமைகளை நீக்கக்கூடியது). உயரத்தில் 16-ல் 4 பாகம் அகலமுள்ளது, பௌஷ்டிக லிங்கமாகும். (பௌஷ்டிகம் – ஆரோக்யத்தைக் கொடுக்கக் கூடியது). 16-ல் 3 பங்கு அகலமுள்ளது, ஜயத்தைக் கொடுப்பதாகும்.

ஆபிசார கர்மாவில் 2 பாகம் அகலமுள்ளதாகும். இவ்விதமாக, லிங்கத்தின் அகலம் 4-விதமாகும். நாகர லிங்கமானது இவ்விதமாக 13 (14) வித அகலமுடைய தாகும்.

லிங்கத்தின் உயரத்தில் 18 பாகங்களில் முறையே 6 பாகம், 5 பாகம், 4 பாகம், 3 பாகம், விஸ்தாரமுடைய

𑌮𑍁𑌣𑌾𑌂𑌶𑌂 𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌾𑌦𑌿𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌦𑍍𑌰𑌾𑌵𑌿𑌡𑍇 𑌚
𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌧𑌮𑍍 ।
𑌵𑍇𑌸𑌰𑍇 𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑍁𑌙𑍍𑌗𑍇 𑌤𑍁 𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑌂𑌶𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ॥ ௯௩ ॥

𑌅𑌷𑍍𑌟 𑌵𑌾 𑌸𑌪𑍍𑌤 𑌷𑌟𑍍𑌪𑌞𑍍𑌚𑌭𑌾𑌗𑍈𑌰𑍍𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌮𑍍 ।
𑌶𑌾𑌨𑍍𑌤𑌿𑌕𑌂 𑌪𑍌𑌷𑍍𑌟𑌿𑌕𑌂 𑌚𑍈𑌵 𑌜𑌯𑌦𑌂 𑌚 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌤𑍁
(𑌆𑌭𑌿𑌚𑌾𑌰𑌕𑌂) ॥ ௯௪ ॥

𑌵𑍇𑌸𑌰𑌂 𑌚 𑌚𑌤𑍁𑌰𑍍𑌭𑍇𑌦𑌂 𑌹𑌰𑍍𑌮𑍍𑌯𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌚 𑌪𑌿𑌣𑍍𑌡𑌿𑌕𑌾 ।
𑌪𑌾𑌦𑌾𑌧𑌾𑌰𑌶𑌿𑌲𑌾 𑌚𑍈𑌵 𑌏𑌕𑌜𑌾𑌤𑌿𑌶𑌿𑌲𑌾(𑌰)𑌸𑌂𑌕𑌰𑌮𑍍 ॥ ௯௫ ॥

𑌯𑌦𑍍𑌯𑍇𑌵𑌂 𑌕𑌲𑍍𑌪𑌿𑌤𑌂 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌦𑌂 𑌤𑍁 𑌸𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ।
𑌅𑌨𑍍𑌯𑌜𑌾𑌤𑍍𑌯𑌸𑌂𑌕𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌰𑌾𑌜𑍍𑌞𑍋 𑌦𑍁𑌃𑌖𑌭𑌯𑌾𑌵𑌹𑌮𑍍 ॥

𑌤𑌸𑍍𑌮𑌾𑌤𑍍 𑌸𑌰𑍍𑌵𑌪𑍍𑌰𑌯𑌤𑍍𑌨𑍇𑌨 𑌸𑌂𑌕𑌰𑌂 𑌨 𑌸𑌮𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।

---

4 வித லிங்கங்களும் திராவிட லிங்கங்களாம். இவைகள் முறையே, சாந்திகம் முதலிய லிங்கங்களாகும்.

லிங்கத்தின் உயரத்தில் 20-ல், 8 பாகம், 7 பாகம், 6 பாகம், 5 பாகம், விஸ்தாரமுள்ளதாகச் செய்யப்பட்ட லிங்கமானது, வேஸரலிங்கமாகும். இவைகள் முறையே, சாந்திகலிங்கம், பௌஷ்டிகலிங்கம், ஜயதலிங்கம், (ஆபிசாரம்) என்ற லிங்கங்களுமாம். இவ்விதமாக வேஸரலிங்கம் 4 விதமாகும். (94)

ஹர்மியம், லிங்கம், பிண்டிகை, பாதாதாரசிலை, இந்நான்கும் ஒரேஜாதிச் சிலையினால் செய்யப்படவேண்டும். இவைகளில், வேறு ஜாதிச் சிலையைக் கலக்கலாகாது. இவ்விதமாகச் செய்யப்பட்ட லிங்கமானது, ஸகலவிதமான நன்மைகளையும் விருத்திசெய்வதாகும். வேறு ஜாதிச் சிலையின் ஸம்பந்தமிருந்தால், அது அரசனுக்கு துக்கத்தையும் பயத்தையும் உண்டுபண்ணும். (96)

ஆகையால், ஸகலவிதமான முயற்சிகளாலும், சிலை

லிங்கானாம் நாமதேயம் ச வ்யாஸமாயாதிகம் ஶ்ருணு ||

லிங்கஸ்யோந்நதமானம் து மானாங்குலேன பாஜயேத் |
மாத்ரார்த்தம் ப்ரவ்ருத்த்யா வா ஹான்யா வா பரிஹாரயேத் ||

ஶ்ரேஷ்டாங்குலாயமை: பூர்ணை: மாத்ராபூர்ணம்
பரிம்ருஜேத் |
உச்சமாத்ரேஷ்டாபிர்வர்த்தித்தே ஸப்தவிம்ஶஸம்க்யயா || ௯௯ ||

ஹ்ருதே யாவச்சவஶிஷ்டம் ஸ்யாதஶ்விந்யாதி விஜானத: |
நவபிர்குணிதே ஸப்தஹ்ருதே பானுவாதி(ஶிஷ்டம் து)
வாஸர: || ௱ ||

ஷண்ணேமர்குணிதே அஷ்டஹ்ருதே யோநிர்த்வஜாஹ்ருத: |

களில் ஜாத்யந்தரஸங்கரம் (ஸங்கரம் – சேர்க்கை) ஏற்படாதபடி, லிங்க நிர்மாணம் செய்யவேண்டும். இவ்விதம் நாகராதி லிங்கங்களின் லக்ஷணம் கூறப்பட்டது. இனி ஆயாதிகளைக் கூறுகிறேன், கேட்பாயாக. (97)

லிங்கத்தின் உயரத்தை மானாங்குலத்தினுலே வகுக்க வேண்டும். அப்படி அங்குலங்களாகக் கணக்கிடும் பொழுது, அரை குறையாக மிச்சப்பட்டால், அத்துடன் அவசியமான பாகத்தைக் கூட்டியாவது குறைத்தாவது அதை முழு அங்குலமாகச் செய்துகொள்ள வேண்டும். உத்தம லிங்கமானுலும், மத்தியம லிங்கமானுலும், அதம லிங்கமானுலும், அதில் ஏற்படும் அங்குலக் குறைவை, மேலே கூறியபடி, முழு அங்குலமாகச் செய்துகொள்ளவேண்டும்.

(லிங்கத்தின்) உயர அங்குலத்தை 8ஆல் பெருக்கி 27ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணுனது, அசுவதி முதலிய நக்ஷத்திரங்களாகும்.

லிங்கத்தின் உயர அங்குலத்தை 9ஆல் பெருக்கி 7ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணுனது, ஞாயிறு முதலிய வாரங்களாகும். (100)

அஷ்டபிர்விபஜிதே பானுஹ்ருதே ஸ்வாயமாதாஹ்ருதம் ॥

நவபிர்குணிதே திக்ஹ்ருதே ஶேஷர்ணம் பவேத் ।

யுகாப்யஸ்தே நவஹ்ருதே ஸ்வாம்ஶகம் தஸ்கராதய: ॥ ௱௨ ॥

ஆயாதிகம் க்ஷயந்யூநம் ஸம்பதாமாஸ்பதம் ஸதா ।

1 த்வஜஸிம்ஹௌ வ்ருஷோ ஹஸ்தீ ஶுபயோநிஸ்ததாஹ்ருதா ॥

ந்ருபஸ்ய கர்த்துர்ஜந்மர்க்ஷாத் பிண்டர்க்ஷாவஸாநகம் ।

3ஆல் பெருக்கி, 8 ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணனது யோனியாகும்.

8ஆல் பெருக்கி, 12ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணனது ஆதாயமாகும். *(101)*

9ஆல் பெருக்கி, 10ஆல் வகுத்து மீதம்வரும் எண்ணனது, கடனாகும்.

4ஆல் பெருக்கி 9ஆல் வகுத்து மீதம் வரும் எண்ணனது திருடர் முதலியவைகளாகும். *(102)*

ஆதாயம் அதிகமாகவும், கடன் குறைவாகவுமிருக்கும் அங்குலமானம் சிறந்ததாகும். எப்பொழுதும் ஸகலவித ஸம்பத்திற்தமிநப்பிடமாகும். *(ஸகல ஸம்பத்துக்களையும் கொடுக்கும் என்பது பொருள்.)*

[2] யோனிகளில், துவஜம், ஸிம்ஹம், விருஷபம், யானை, இவைகள் சுப பலனைக்கொடுப்பவைகளாம். *(103)*

அரசன், யஜமானன், இவர்களின் ஜன்ம நக்ஷத்திரம்

---

1 த்வஜோ தூம்ரஶ்ச ஸிம்ஹஶ்ச ஶ்வா வ்ருஷஶ்ச கரோ கஜ: ।
காகஶ்சேதி க்ரமாத் யோநிநாமாநி கீர்த்திதாநி வை ॥

2 துவஜம், தூமம், ஸிம்ஹம், நாய், விருஷபம், கழுதை, யானை, காக்கை, இவைகள் முறையே யோனிகளின் பெயர்களாம்,

ததைவ வாஸ்துநக்ஷத்ராதி கணயெத்து ஸுகாவஹம் || ௱௪ ||

ஜந்மத்ரயம் ச யுக்மம் ச வேதாஷ்டஷண்நவாதிகா: |

ஸுகாவஹாஸ்து விஹிதா: ஶேஷகாஸ்த்வஸுகாவஹா: ||

ராஶ்யஷ்டகம் ச வைநாஶம் ததைவ நரராக்ஷஸம் |

வர்ஜிதாஸ்த்வஸுகா ஹ்யேதே யத்நத: பரிவர்ஜயேத் || ௱௬ ||

முதல், லிங்கத்தின் நக்ஷத்திரம்வரையில் எண்ணவேண்டும். அவ்விதமே, தேவாலய நக்ஷத்திரம் முதல், லிங்கத்தின் நக்ஷத்திரம் வரையில் எண்ணவேண்டும். இவ்விதம் எண்ணி வரும் நக்ஷத்திரமானது சுப பலனைக்கொடுக்கக்கூடிய சுப நக்ஷத்திரமாக இருக்கவேண்டும், (104)

ஜந்மத்ரயம் (1—10—19வது நக்ஷத்திரங்கள்) ஜந்ம நக்ஷத்திரத்திற்கு 2வது நக்ஷத்திரம், 4வது நக்ஷத்திரம், 8வது நக்ஷத்திரம், 6வது நக்ஷத்திரம், 9வது நக்ஷத்திரம், இவைகள், சுப பலனைக் கொடுக்கக்கூடியவைகள் என்று கூறப்பட்டிருக்கின்றன: மற்ற (3–5–7வது) நக்ஷத்திரங்கள், அசுப பலனைக் கொடுக்கக்கூடியவைகளாம். (105)

யஜமானனுடைய ஜன்ம லக்கினம், சந்திர லக்கினம் இவைகளுக்கு 8-வது ராசிக்குரிய நக்ஷத்திரங்கள், வைநாசிக நக்ஷத்திரம், (3-வது நக்ஷத்திரம்) யஜமானனுடைய நக்ஷத்திரம், லிங்கத்தின் நக்ஷத்திரம், இவ்விரண்டு நக்ஷத்திரங்களில், ஒன்று நரகண நக்ஷத்திரமாகவும், மற்றொன்று ராக்ஷஸகண நக்ஷத்திரமாகவும், இருப்பதுமான நக்ஷத்திரம், இவைகள், அசுபபலனைக் கொடுக்கக் கூடியவைகள் ஆகையால், இவைகள் விலக்கப்பட்டவைகளாம். இந்த நக்ஷத்திரங்களை முயற்சியுடன் கவனித்து நீக்கிவிடவேண்டும். (106)

(இங்கு கூறப்பட்டிருக்கும் விஷயங்கள் யாவும், யஜமானன் லிங்கம் இரண்டிற்குமே கூறப்பட்டதாகும்.)

ஸாநுவாராதிஸம்யுக்தா ஹஸ்தாதிரேவதீ தஃக்ஷ்டா: ।
[ஸாநுவாராதிஸம்யுக்தம் ஹஸ்தாதிரேவதீ தஃக்ஷயழ ।]
ரிவுக்ஷும் ஶரணம் நாஶஶ்ரேதம் அ யஶாக்ரமழ ॥ ௱௭ ॥

*தஸ்கரம் அ ஶணிம் (நிதநம்) ஷஹஶம்ஶகம் வரிவஜயெக ।
ஶெஷாம்ஶகம் வரிகு்ராஹ்யம் ஶுஹஶாநம் (ஶம்ஶம்) து ஸம்குஹ்யெக ॥ ௱௮ ॥

ஸஶலிங்கம் வயமாநம் ஶைவாதிகம் அ ஸ்வஸ்திகழ ।
ஸவதோஹ்ஷகு்லிங்கம் அ ஸாவடெஶிகஶெவ அ ॥ ௱௯ ॥
யாராலிங்கம் ஶுவலிங்கம் லிங்கமஷ்டவிஶம் ஹவெக ।

ஞாயிற்றுக்கிழமை முதலிய கிழமைகளுடன் கூடிய ஹஸ்தம் முதலான நக்ஷத்திரங்கள், முறையே, சத்துரு, மரணம் நாசம், அமிருதம் எனப்படும். *(107)*

[2] அம்சங்களில், தஸ்கராம்சம், நிதநாம்சம், க்லீபாம்சம், இவைகளை விலக்கவேண்டும். (இவைகள் கெட்ட பலனைக் கொடுக்கக்கூடியவைகள். ஆதலால் இவைகளை விலக்கவேண்டும். மற்றவைகள் நல்ல பலனைக்கொடுக்கக் கூடியவைகள். ஆகையால்,) மற்ற அம்சங்களைக்கொள்ள வேண்டும். சுபகரமான மாநத்தை (அம்சத்தை)க்கொள்ள வேண்டும். *(108)*

லிங்கமானது, ஸமலிங்கம் 1, வர்த்தமாநம் 2, சைவாதிகம் 3, ஸ்வஸ்திகம் 4, ஸர்வதோபத்ரம் 5, ஸார்வதேசிகம் 6, தாராலிங்கம் 7, முகலிங்கம் 8, என்று 8 வித

1 சோரோ ஹுக்திஶ்ச ஶக்திஶ்ச யநேர்யா ராஜாய ஷண்டக: ।
நிவீதி நியநம் ப்ரேஷ்ய: நவாம்ஶாநி யஶாக்ரமழ ॥

2 சோரன், புக்தி, சக்தி, தந்யம், ராஜா, நபும்ஸகன் (அலி), நிர்பீதி, நிர்தாநம், ப்ரேஷ்யன், இவைகள் முறையே அம்சங்களின் பெயர்களாம்.

ஸமலிங்கம் து விப்ராணாம் ந்ருபாணாம் வர்தமாநகம் ||
சைவாதிகம் து வைச்யாநாம் சூத்ராணாம் ஸ்வஸ்திகம் பவேத் |
ஸர்வேஷாமிதரல்லிங்கம் ஸர்வகாமபலப்ரதம் || ௱௧௨ ||

ஏக ஏவ மஹாதேவ: லிங்கபேதாத் ந்ருணாம் ஹித: |
பஹுதா ஸவிபாகேந அதுலஸ்ரீக்ருதம் வபுஷா || ௱௧௩ ||

வஸ்தாயாமத்ரயம் க்ருத்வா (துயதாத்) ஸுதேந விதிநா பாக: |
அதஸ்சதுரஸ்ரயோஹாம் ப்ரஹ்மாம்சயோச்யதே || ௱௧௪ ||

மத்யே து வஸுகோணம் ஸ்யாத் விஷ்ணுவம்சம் தத்ப்ரகீர்த்திதம் |

மாகும். இவைகளில், ஸமலிங்கமானது பிராம்ஹணர்களுக்கும், வர்தமாநலிங்கமானது க்ஷத்ரியர்களுக்கும், சைவாதிக லிங்கமானது வைசியர்களுக்கும், ஸ்வஸ்திக லிங்கமானது சூத்ரர்களுக்கும், சிலாக்கியமானவைகளாம். இவைகள் நீங்கிய மற்ற லிங்கங்கள் யாவும், எல்லா ஜாதியினருக்கும் விரும்பிய ஸகலவிதமான பலன்களையும் கொடுக்கக்கூடியவைகளாம். மஹாதேவன் ஒருவனேயானாலும், அவர், பலவிதமான லிங்க ஸ்வரூபத்துடன், மனிதர்களுக்கு நன்மையையளித்து வருகிறார்.

முதலில் (லிங்கம் செய்யவேண்டியதற்காக எடுக்கப்பட்ட சிலையை) தான் விரும்பும் அகல நீளத்துடன் சதுரச்ரமாகச் செய்யவேண்டும் (சதுரிக்கவேண்டும்.) பிறகு, மேதாவியான சில்பியானவன், கூறப்போகும் விதிப்படி, அதை, 3 பாகங்களாகக் கணக்கிட்டுக்கொள்ள வேண்டும். அந்த 3 பாகங்களில், கீழேயுள்ள பாகத்தை, சதுரச்ரமாக (சச்சதுரமாக)ச் செய்யவேண்டும். இந்த கீழ்ப்பாகத்திற்கு, பிரம்ஹாம்சம் என்று பெயர். (113)

𑌊𑌰𑍍𑌧𑍍𑌵𑌭𑌾𑌗𑌂 𑌤𑍁 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂𑌸𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌚𑍍𑌛𑍈𑌵𑌾𑌂𑌶𑌂 𑌨𑌿𑌗𑌦𑍍𑌯𑌤𑍇 ||

𑌅𑌂𑌶𑌂 𑌪𑍍𑌰𑌤𑍍𑌯𑌭𑌿𑌧𑌾𑌨𑌾𑌤𑍍𑌤𑍁 𑌅𑌶𑍇𑌷𑌂 𑌤𑍁 𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 |

𑌶𑌿𑌵𑌾𑌤𑍍𑌮𑌾 𑌹𑌿𑌵𑌿𑌶𑌿𑌷𑍍𑌟𑌂 𑌆𑌵𑍍𑌯𑌂𑌸𑌹𑍇𑌤𑌾𑌵𑍍𑌯𑌕𑌂 𑌕𑌥𑌮𑍍 ||

𑌵𑍃𑌕𑍍𑌷𑌸𑍍𑌯 𑌮𑍂𑌲𑌂 𑌮𑌧𑍍𑌯𑌾𑌗𑍍𑌰𑌂 𑌶𑌾𑌖𑌾𑌪𑌤𑍍𑌰𑌂 𑌫𑌲𑌂 𑌸𑍍𑌥𑌿𑌤𑌿 |

𑌶𑌬𑍍𑌦𑌃 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌶𑍍𑌚 𑌰𑍂𑌪𑌂 𑌚 𑌰𑌸𑍋 𑌗𑌨𑍍𑌧𑌸𑍍𑌤𑌥𑍈𑌵 𑌚 ||

𑌯𑌥𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌿𑌯𑌗𑍁𑌣𑍈𑌰𑍇𑌵 𑌏𑌕𑍈𑌕𑌾𑌂𑌶𑌂 𑌪𑍍𑌰𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌤𑌮𑍍 |

𑌯𑌥𑌾𑌂𑌶𑌸𑌹𑌿𑌤𑍋 𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑍈𑌵 𑌪𑍍𑌰𑌾𑌣𑌿𑌸𑌹𑌿𑌤𑍋 𑌨 𑌭𑌿𑌦𑍍𑌯𑌤𑍇 ||

(பிறகு,) அந்தச் சிலையின் நடுவிலுள்ள பாகத்தை அஷ்டாச்ரமாக (8 கோணமாக)ச் செய்யவேண்டும். இந்த மத்தியபாகத்திற்கு விஷ்ணு வம்சம் என்று பெயர்.

மேலேயுள்ள பாகத்தை, விருத்தாகாரமாக (வட்ட வடிவமாக)ச் செய்யவேண்டும். இந்த மேல்பாகத்திற்குச் சிவாம்சம் என்று பெயர். (114)

இவ்விதமாக 3 அம்சங்களைக்கூறி, அவைகளுக்கு, பிரம்ஹாம்சம், விஷ்ணுவம்சம், சிவாம்சம் என்று வெவ்வேறு பெயர்கள் கூறியிருப்பது, அந்தந்த பாகங்களைத் தனித்தனியே வியவஹரிப்பதற்காகக் கூறப்பட்டிருக்கிறது. எனவே அந்த 3 பாகமும் சிவஸ்வரூபமேயாகும்.

சிவலிங்கத்தின் பாகங்கள் எல்லாமே சிவஸ்வரூபந்தான் என்றால், அதன் பாகங்களை வெவ்வேறு வாசகங்களால் எதற்காகக் கூறவேண்டும் என்றால்,—

மரத்தின் வெவ்வேறு பாகங்கள், வேரு–உச்சி–கிளை இலை–பழம்–என்று கூறப்படுகின்றன. ஆயினும் இவைகள் எல்லாம், மரம் என்னும் ஒரே பொருள்தான் அல்லவா.

சப்தம்–ஸ்பர்சம்–ரூபம்–ரஸம்–கந்தம்–இவைகள், இந்திரியங்களின் குணங்களாம். இத்தகைய இந்திரியங்கள் பலவாயினும், அந்த இந்திரியங்களையுடைய மனிதன் ஒருவன்தான் அல்லவா? அதைப்போல சிவலிங்கத்தின்

𑌤𑌥𑍈𑌵 𑌶𑌿𑌵𑌭𑌾𑌗𑌸𑍍𑌯 𑌨𑌾𑌮 𑌵𑍍𑌯𑌵𑌹𑍃𑌤𑍍𑌯𑌾 𑌕𑍃𑌤𑌮𑍍 |
*𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑌾𑌰𑌂 𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌣𑌾𑌰𑍍𑌧𑌾𑌰𑍍𑌧𑌕𑌂
𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 || ௱௫௮ ||

𑌕𑍋𑌣𑌾𑌤𑍍𑌕𑍋𑌣𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌤𑍇𑌨 𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌦𑍇𑌶𑌿𑌕𑌃 |
(𑌬𑌹𑌿𑌰𑍍𑌭𑌾𑌗𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌛𑍇𑌦𑍍𑌯) 𑌅𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌂 𑌤𑌦𑍍𑌭𑌵𑍇𑌦𑌿𑌤𑌿 ||

𑌅𑌥𑌵𑌾 𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌸𑌪𑍍𑌤𑌭𑌾𑌗𑌂 𑌵𑌿𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 |

பாகங்களைத் தனித்து வியவஹரிப்பதற்காக அவைகளுக்கு, யுக்தியாகத் தனித்தனியே பெயர்கள் கல்பிக்கப்பட்டிருக்கின்றனவேயல்லாது, அதன் எல்லா பாகங்களுமே லிங்கஸ்வரூபந்தான்.

முதலில், லிங்கத்திற்காக கிரஹிக்கப்பட்ட சிலையின் அகலத்தைக் கணக்கிட்டு, அதை சதுரச்ரமாக (சச்சதுரமாகச்) செய்துகொள்ளவேண்டும். பிறகு அதன் கர்ணத்தின் பாதியில் பாதியைக் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். (கர்ணம் குறுக்களவு) அந்த கர்ணத்தின் ¼ பங்கு அளவைக்கொண்டு, சிலையின் மூலையைக் கோணமாகச் செய்துகொள்ளவேண்டும். (கோணம்—முக்கோணம், பிறகு, அந்தக் கோணத்தின் வெளிப்பக்கத்தைச் செதுக்கிவிடவேண்டும். (இவ்விதம் 4 மூலைகளிலும் செய்ய) சதுர்ச்ரமாக இருந்த சிலையானது அஷ்டாச்ரமாகும். (சதுரச்ரம்-4 பட்டை, அஷ்டாச்ரம்-8 பட்டை. இது சற்றேறக்குறைய ஸம அஷ்டாச்ரமாம்.) (119)

அல்லது, லிங்கத்தின் அகலத்தை (சதுரச்ரமாகச் செய்யப்பட்ட லிங்கார்தமான சிலையின் அகலத்தை)

---

*𑌲𑌿𑌙𑍍𑌗𑌤𑌾𑌰𑌂 𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌕𑌰𑍍𑌣𑌾𑌰𑍍𑌧𑌾𑌰𑍍𑌧𑌕𑌾𑌤𑍍 |
𑌸𑌂𑌗𑍃𑌹𑍍𑌯 𑌕𑍋𑌣𑍇 𑌕𑍋𑌣𑌂 𑌤𑍁 𑌤𑍇𑌨 𑌮𑌾𑌰𑍍𑌗𑍇𑌣 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ||
𑌇𑌤𑌿 𑌵𑌾𑌮𑍇𑌨 𑌭𑌾𑌵𑌯𑍇𑌤𑍍 |

பாகாம்ஶம் மத்யபட்டம் ஸ்யாத் கோணயோஸ்த்ர்யம்ஶபாகயோ: ||

அதவா ஸப்தபாகே து மத்யபட்டம் ஷடம்ஶகம் |

கோணயோஸ்த்ர்யம்ஶமாத்ரம் ஸூத்ரம் து க்ருத்வைவ ஹி ||

அஷ்டாஶ்ரே ஸப்தவிஸ்தாரம்(ரே) அர்தாஶ்ரம்(ஶ்ரே)
க்ருதே ஸதி |

தத்கோணாயாமம்(மே) து ஸூத்ரம்(த்ரே)கோணாத்கோணம்
து லாஞ்ச(ஞ்ச)யேத் || ௱௨௨ ||

பக்தாக்ரே து விஸ்தாரஸ்ய க்ருதாஶ்ரம் தத்ஸமே பவேத் |

---

7 பாகங்களாகச் செய்து, அவைகளில் 4 பாகத்தை, மத்திய பட்டத்தின் (பட்டம்—பட்டை) அளவாக வைத்துக் கொண்டு, (பாக்கியுள்ள 3 பாகத்தில் 2 பக்கங்களிலும் இருக்கும் $1\frac{1}{2}$ பாகத்திற்குச் சமமாக மறுபக்கத்திலும் கணக்கிட்டுக்கொண்டு, அந்த 2 பங்கிலுமுள்ள $1\frac{1}{2}$, $1\frac{1}{2}$, பங்கு அளவுகளையும் முக்கோணமாகச் செய்துகொண்டு) அதன் வெளியிலுள்ள பாகத்தைச் செதுக்கிவிடவேண்டும். அப்பொழுது அது அஷ்டாச்ரமாகும். (120)

அல்லது, 8 பாகங்களில் 6 பாகங்களை மத்திய பட்டமாகக் கணக்கிட்டு, அதன்மிகுதியை, மூலைகளில் முன்போல் கணக்கிட்டு, வெளியில் காணப்படும் பாகத்தைச் செதுக்க, அந்தச்சிலை அஷ்டாச்ரமாகும். இவ்விதம், அஷ்டாச்ரமாகச் செய்வது 3 விதமாகும். (121)

சதுரச்ரத்தை 8 பாகமாகக் கணக்கிட்டு, அஷ்டாச்ரமாகச் செய்துகொண்டு, அந்த அஷ்டாச்ரத்தின் கோணுச்ரங்களின் பாதியை, முன்போலவே கணக்கிட்டு, அதன் கோணங்களில் முக்கோணங்களை அடையாளம் செய்து கொள்ளவேண்டும். பிறகு அந்தக் கோணங்களின் வெளிப் பக்கங்களைச் செதுக்கிவிடவேண்டும். அப்பொழுது, அது,

𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌗𑍍𑌰𑍇𑌣(𑌗𑍍𑌰𑍇)𑌤𑍁 𑌸𑌂𑌛𑍇𑌦𑍍𑌯 𑌵𑍃𑌤𑍍𑌤𑌾𑌕𑌾𑌰𑌂 𑌤𑍁
𑌤𑌦𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 || ௱௨௩ ||

𑌅𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌿 𑌵𑌿𑌨𑍍𑌯𑌾𑌸𑌂(𑌸𑍇)𑌏𑌵𑌮𑍇𑌵𑌹𑌿 𑌤𑌦𑍍𑌯(𑌨)𑌤𑍇 |
𑌲𑌿𑌂𑌗𑌵𑌾(𑌂𑌗𑌾𑌯𑌾)𑌮𑍇 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑌾𑌂(𑌗𑍍𑌯𑌾𑌂)𑌶𑍇𑌤𑍁 𑌏𑌕𑌾𑌂𑌶𑌂
𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌕𑌮𑍍 || ௱௨௪ ||

𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑍇 𑌤𑍁 𑌵𑌸𑍍𑌵𑌶𑍍𑌰𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌵𑍇 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌶𑌿𑌵𑌾𑌂𑌶𑌕𑌮𑍍 |
𑌸𑌮𑌲𑌿𑌂𑌗𑌮𑌿𑌤𑌿 𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑌾𑌦𑍀𑌨𑌾𑌂 𑌤𑍁 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌕𑍃𑌤𑍍 || ௱௨௫ ||

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌿𑌂𑌶(𑌶𑍇)𑌤𑌥𑌾𑌯𑌾𑌮𑍇 𑌸𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑌂 𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌕𑌮𑍍 |
𑌅𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌂 𑌸𑍍𑌯𑌾𑌷𑍍𑌟𑌕𑍋𑌣𑌂 𑌚 ...𑌨𑌵𑌾𑌂𑌶𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ||
[𑌅𑌷𑍍𑌟𑌾𑌂𑌶𑌮𑌷𑍍𑌟𑌕𑍋𑌣𑌂 𑌚 𑌨𑌵𑌾𑌂𑌶𑌂 𑌵𑍃𑌤𑍍𑌤𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 |]

ஷோடசாச்ரமாகும். பிறகு, அவைகளின் கோணங்களை முன்போலவே முக்கோணமாகச் செய்து, அதன் வெளிப் பக்கங்களிலுள்ள பகுதிகளைச் செதுக்கிவிட வேண்டும். இவ்விதம் செய்ய, அந்தச்சிலையானது, விருத்தாகாரமாகும். (வட்டவடிவ முடையதாகும்) இங்கு கூறப்பட்டிருக்கும் முறையின்படியே, அஷ்டாச்ரம் முதலியவைகள் செய்யப் படுகின்றன.

லிங்கத்தின் உயரத்தை 3 பாகம்செய்து, அதில் 1 பாகம் (அடியில்) சதுரச்ரமாகவும், மத்தியிலுள்ள 1 பாகம் அஷ்டாச்ரமாகவும், மேலேயுள்ள 1பாகம் விருத்தாகாரமாகவும் இருப்பது, ஸமலிங்கமெனப்படும். இது பிராம்ஹணாதி ஜாதியினருக்கு விருத்தியைக் கொடுக்கும். (125)

லிங்கத்தின் உயரத்தை 24 பங்குகளாகச் செய்து கொண்டு, அந்தப் பங்குகளில் 7 பாகம் சதுரச்ரமாகவும், 8 பாகம் அஷ்டாச்ரமாகவும், 9 பாகம் விருத்தாகாரமாக வும் கொள்ளுவது, வர்தமான லிங்கமாகும்.

षट्सप्तवसुभागं वा पञ्चषट्सप्त नव वा ।
चतुष्पञ्चषडंशं वा वर्धमानं अभिधीयते ॥

लिंगायामे दशांशे तु गुणांशं चतुरश्रकम् ।
वस्वश्रं चैव तद्वत्तु गुणांशं चतुरश्रकम् ॥
(वस्वश्रं तु गुणांशं स्यात् चतुरंशं तु
वृत्तकम् ।)

शिवाधिकारि(कमि)दं प्रोक्तं यथावास्य(न्य)त्
प्रकारयेत्(तः) ।

वेदवेदशरांशं वा पञ्चपञ्चषडंशकम् ॥ ௱௨௬ ॥

षट्षट्सप्तांशके(कं)वाथ शैवाधिक्यं
अभिधीयते ।

இவ்விதமாகவே, லிங்கத்தின் உயரத்தில் 6 பாகம் சதுரச்ரம், 7 பாகம் அஷ்டாச்ரம், 8 பாகம் விருத்தமாகக் கொள்ளுவதும், வர்தமான லிங்கமாகும்.

லிங்கத்தின் உயரத்தில் 5 பாகம் சதுரச்ரம், 6 பாகம் அஷ்டாச்ரம், 7 பாகம் விருத்தமாகக்கொள்ளுவதும், வர்தமான லிங்கமாகும்.

லிங்கத்தின் உயரத்தில் 4 பாகம் சதுரச்ரம், 5 பாகம் அஷ்டாச்ரம், 6 பாகம் விருத்தமாகக்கொள்ளுவதும் வர்தமான லிங்கமாகும். இவ்விதமாக, வர்தமான லிங்கம் 4 விதமாகும். (127)

லிங்கத்தின் உயரத்தை 10 பாகங்களாகச் செய்துகொண்டு, அவைகளில் 3 பாகம் சதுரச்ரமாகவும், 3 பாகம் அஷ்டாச்ரமாகவும், 4 பாகம் விருத்தமாகவும்கொண்டால், அது, சிவாதிக லிங்கமாகும். இதை வேறுவிதமாகவும் கொள்ளலாம்.

சதுரச்ரம், அஷ்டாச்ரம், விருத்தம், இவைகளை முறையே, 4, 4, 5 பாகங்களாகவும், 5, 5, 6 பாகங்களாகவும், அல்லது 6, 6, 7 பாகங்களாகவும் கொள்ளலாம்.

லிங்கோச்சே நவாம்ஶே து சதுரஶ்ரம் த்விபாகயா(த꞉) ||

அஷ்டாஶ்ரம் து குணாம்ஶேந வேதாம்ஶம் வ்ருத்தமுச்யதே |
ஸ்வஸ்திகம் ஶைவமாக்யாதம் ஸர்வதோபத்ரமுச்யதே ||

மூலாத(தா)க்ரம் ஸுவ்ருத்தம் து லிங்கோத்துங்க
த்ரிபாகிகே |
பூகதைகம் ததைகாம்ஶம் பீடாம்ஶம் யோநிபந்திதம் ||

பூஜாம்ஶம் ததைகாம்ஶம் ஸர்வதோபத்ரமேவ ஹி |
ஸார்வ(ஸர்வ)தேஶிகலிங்கம் து வ்ருத்தாகாரமஶேஷத꞉ ||

பூதவேத குணாம்ஶம் வா லிங்கோச்சே து விபாஜிதே |
* பீடே து வேதபாகாம்ஶம் ஶேஷம் பூஜாம்ஶமுச்யதே ||

எனவே, சைவாதிக லிங்கமானது, கீழே கூறப்பட்ட விதிகளின்படி நான்கு விதங்களாகும்.

லிங்கத்தின் உயரத்தை 9 பாகங்களாகச் செய்து, அந்த பாகங்களில், சதுரச்ரம் 2 பாகம், அஷ்டாச்ரம் 3 பாகம், விருத்தம் 4 பாகமிருப்பது, ஸ்வஸ்திக லிங்கமென்று கூறப்பட்டிருக்கிறது. இனி, ஸர்வதோபத்ர லிங்கத்தைக் கூறுகிறேன். (131)

அடியிலிருந்து நுனி வரையில் 3 பாகங்களும் விருத்தாகாரமாகவே இருப்பதாகும். அதன் உயரத்தில் 3ல் 1 பாகம் பூமிக்குள் பதிந்தும்; 3ல் 1 பாகம் யோனி (ஆவுடை) யில் பொருத்தப்பட்டும், 3ல் 1 பாகம் பூஜாம்சமாக (வெளியில் லிங்காகாரமாகத் தெரிந்துகொண்டும்)வும் இருப்பது, ஸர்வதோபத்ர லிங்கம் எனப்படும்.

ஸார்வதேசிக லிங்கமானது, எல்லா பாகங்களும் விருத்தாகாரமாக இருப்பதாகும். இதன் உயரத்தை, முறையே, 5–4–3 பாகங்களாகச் செய்யவேண்டும். (அவைகளில்

---

* ஸயோகம் து வஸ்வாம்ஶம் வேதாம்ஶம் உதயம் து தத் |
இதி உதயே பாடாந்தரம் யோஜநீயமிதி பாதி |

𑌸𑌾𑌰𑍍𑌵𑌦𑍇𑌶𑌿𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌸𑌰𑍍𑌵𑌦𑍈𑌵 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌸𑌮𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌚𑍍𑌛𑍍𑌰(𑌜𑍇𑌨𑍍𑌦𑍍𑌰)𑌯𑌂 𑌤𑌨𑍍𑌨𑌵𑌾𑌂𑌶𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌚𑌕𑍍𑌷𑌣𑌃 ॥

𑌷𑌡𑌂𑌶𑌂 𑌚𑍈𑌵 𑌵𑍃𑌤𑍍𑌤𑌂 𑌤𑌾𑌵𑌤𑍍 𑌸𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑌂 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌂𑌶𑌕𑍇 ।
𑌵𑌸𑍍𑌵𑌂𑌶𑌂 𑌮𑌲𑌯𑍋𑌸𑍍𑌤𑌾𑌵𑌤𑍍 𑌯𑌤𑍍𑌤𑌤𑍍𑌤𑍍𑌰𑍈𑌰𑌾𑌶𑌿𑌕𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌸𑌾(𑌸)𑌰𑍍𑌵𑌜𑌾𑌤𑍍𑌯𑌰𑍍𑌹𑌂 𑌸𑍍𑌤𑍁(𑌹𑌰𑍍𑌷𑌕𑌂) 𑌶𑍍𑌰𑍇𑌷𑍍𑌠𑌂 𑌤𑍍𑌰𑍈𑌰𑌾𑌶𑌿𑌕𑌵𑌿𑌧𑌿𑌂 𑌪𑌰𑌮𑍍 ।
𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌂 𑌯𑌦𑌾𑌂𑌶𑌂 𑌤𑍁 𑌧𑌾𑌰𑌾𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌚 𑌤𑌤𑍍𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌸𑌮𑍇 𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑌂 𑌵𑍇𑌦𑌾𑌶𑍍𑌰𑌂 𑌶𑍇𑌷𑌂 𑌵𑌸𑍍𑌵𑌶𑍍𑌰𑌮𑍇𑌵 𑌹𑌿 ।
𑌅𑌧𑌸𑍍𑌤𑍁 𑌚𑌤𑍁𑌰𑌶𑍍𑌰𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌷𑍍𑌟𑌾𑌶𑍍𑌰𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ९२ ॥

---

5 பாகம் அடியிலிருப்பதாகும். மத்தியிலுள்ள 4 பாகத்தை) பீடத்தில் வைக்கவேண்டும். பாக்கியுள்ள (3) பாகமானது பூஜாம்சமாகும். (சிவாம்சமாகும்) இவ்விதமாகவே, ஸார்வதேசிக லிங்கத்தைக் கல்பிக்கவேண்டும்.

ஸமலிங்கத்தில், அதன் உயரத்தை 9 பாகமாகச்செய்து, 3 பாகங்களை ஸமபாகமாகக் கொள்ளவேண்டும். அதன் வட்டவடிவத்தின் (சிவாம்சமான மேல்பாகத்தின்) சுத்தளவானது, (உயரத்தில் 9ல்) 6 பங்கு இருக்கவேண்டும். மத்திய பாகத்தின் சுத்தளவானது, 9ல் 7 பாகம் இருக்கவேண்டும். கீழ்பாகத்தின் சுத்தளவானது, 9ல் 8 பாகம் இருக்கவேண்டும். இந்த த்ரைராசிக விதியானது எல்லா ஜாதியினருக்குமுகந்ததாகும். சிறந்ததுமாகும்.

அடிமுதல் நுனிவரையில் சதுரச்ரமாக இருப்பது தாராலிங்கமாகும்.

ஸமலிங்கத்தில், மூலபாகம் சதுரச்ரமாகவும், மற்ற இரண்டு பாகங்களும் அஷ்டாச்ரமாக இருப்பதும் தாரா லிங்கமாகும்.

கீழேயுள்ள பாகம் சதுரச்ரமாகவும், மத்திய பாகம்

பூஜாம்ஶம் ஷோடஶாஶ்ரம் து தாராலிங்கம் த்ரிதா பவேத் ।
ததக்ரம் லிங்கமூர்தாந்தம் யவார்தம் வா யவோந்நதம் ॥௩௯॥

ஸமலிங்கம் து தாராக்யம் ஸர்வப்ராணிஹிதாவஹம் ।
தாராலிங்கஸமம் ப்ரோக்தம் முகலிங்கம் விஶேஷத: ॥ ௪௦ ॥

ஶிவாதீத(ஶிவாம்ஶாதிகலிங்கே து முகலிங்கம் ப்ரகீர்திதம்) ।
பூஜாபாகத்ரயம்(பூஜாம்ஶம் து த்ரிதா)க்ருத்வா ஊர்த்வபாகம் முகம் பவேத் ॥ ௪௧ ॥

தஶாம்ஶே அஷ்டாம்ஶகம் மூர்தா வேதாம்ஶகம் முகம் ததா (காம்ஶமேகாம்ஶந்தா) ।

அஷ்டாச்ரமாகவும், பூஜாபாகம் (மேல்பாகம்) ஷோட சாச்ரமாக இருப்பதும் தாராலிங்கமாகும். இவ்விதம் தாராலிங்கம் 3 விதமாகும்.

இத்தகைய தாராலிங்கத்தின் அச்ரமானது, (அச்ரம்–பட்டை) லிங்கத்தின் சிரஸ்ஸு வரையிலிருப்பதாகும். ½ அல்லது 1 யவை உயர்ந்திருப்பதுமாகும்.

ஸமலிங்கமானது தாராலிங்கமாக இருந்தால், அது, ஸகல பிராணிகளுக்கும் நன்மையையுண்டுபண்ணும்.

முகலிங்கமானது, விசேஷித்து, தாராலிங்கத்தைப் போன்றதேயாம்.

சிவாம்சாதிக லிங்கத்தில், முகலிங்கம் கல்பிக்கப்பட வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. அந்த லிங்கத்தின் பூஜாபாகத்தை 3 பாகங்களாகச் செய்து, அதன் மேல் பாகத்தில் முகம் இருக்கவேண்டும். அந்த மேல் பாகத்தை 10 பாகங்களாகச் செய்து, அவைகளில், 5 பாகம் சிரஸ்ஸாகவும், 4 பாகம் முகமாகவும், 1 பாகம் கழுத்தாகவும்

கர்ணௌ சாத்விபாக்ஷம் (வக்த்ராக்ஷௌ) ச ஸர்வலக்ஷண
ஸம்யுதம் || ௱௪௨ ||

லிங்காகாரமதஸ்தஸ்ய தஸ்யாயாமம் விபக்தாங்கிதம் |
ஸமபாதம் து பூஜாம்ஶம் து அதோவிம்ஶதாம்ஶகே || ௱௪௩ ||

சதுர்விம்ஶாதிகம் தச்சதுர்ம்ஶமேகாதஶாம்ஶமுகாயாமம் ||
கேஶாந்தஸ்த்ரிம்ஶம் த்ர்யம்ஶம் யத்மாம்ஶமதவாதிகம் || ௱௪௪ ||

நேத்ராந்தம் ச புடாந்தம் ச ஹன்வந்தம் யதாக்ரமம் |
ப்ரத்யேகம் த்ரியவாதிக்யமதவாஸ்யாத்யுமாம்ஶகம் || ௱௪௫ ||

ஹன்வாதி கண்டாந்தம் து சதுர்பாயேகாதஶாம்ஶகம் |
யத்து கேஶாந்தகம் தத் கண்டோச்சமிதி கத்யதே || ௱௪௬ ||

இருக்கவேண்டும். அதில், 2 காதுகள், 2 கண்கள், உதடு, இவைகள் ஸகலலக்ஷணங்களுடன் அமைந்திருக்கவேண்டும். அதன் கீழ்பாகமானது, லிங்காகாரமாக இருக்கவேண்டும். அதில் ஸரிபாதியளவு பீடத்துடனிருக்கவேண்டும். (இங்கு ஸரிபாதி என்பதற்கு பூஜாம்சத்தில் ஸரிபாதி என்ருவது, பூஜாம்சம் நீங்கிய பாகத்தில் ஸரிபாதி என்ருவது பொருள் கொள்ளவேண்டும். எனவே, லிங்கத்தின் முழு அளவில், ஸரிபாதியளவு கொண்டது பூஜாம்சம் என்பது கருத்து.)

அல்லது லிங்கத்தின் உயரத்தை 124 பாகங்களாகச் செய்துகொண்டு, அவைகளில் 11 பாகங்களை முகமர்நமாகக் கொள்ளவேண்டும். அது, கழுத்திற்குமேலே 11 பாகங்களாகும். முகத்திற்கு மேலே கேசாந்தபாகமான உச்சியினுயரம் 3 அல்லது 4 பாகங்களாகும்.

முகத்தில், நேத்திராந்தம், புடாந்தம், ஹந்வந்தம், இம் மூன்று பாகங்களும், முறையே, 3 யவை அதிக அளவு உடையவைகளாம். 4 யவை அதிகமாகவும் இருக்கலாம்.

முகவாய்க்கட்டைக்குக் கீழே, கழுத்தின் உயரம், 4 பாகங்களாம். கண்டமானது, கேசாந்தத்தின் அளவே

ஶேஷம் லிங்காக்ருதி வ்ருத்தம் கல்பயேல் லக்ஷணான்விதம் |
சதுர்வக்த்ரைகவக்த்ரம் வா சதுர்பாஹு த்விபாஹு வா ||

ஸ்தநஸூத்ராவஶிஷ்டாத்து பிம்பலக்ஷணஸம்யுதம் |
ஹிக்காஸூத்ராவஶிஷ்டா வா ஶேஷம் லிங்காக்ருதிர்பவேத் ||

ஏவம் லிங்கமிதி ப்ரோக்தம் ந்ருபாணாம் வ்ருத்திகாரகம் |
விஷ்கம்பமஷ்டதா க்ருத்வா மூலே மத்யே ததாக்ரகே || ௪௯ ||

பாகஹீனம் து ஸம்க்ஷிப்ய ஸ்தூலமூலமூலாத்யக்ரதம் |

இருப்பதும் கூடும். இவைகள் நீங்கிய கீழேயுள்ள பாகங்கள் லிங்காகாரமாக இருக்கவேண்டும். இவைகள் லக்ஷணத்துடன் அமையப் பெற்றிருக்கவேண்டும்.

(முகலிங்கமானது, முன் பக்கத்தில் மட்டிலும்) ஒரே முகம் உடையதாக இருக்கலாம். அல்லது, (4 பக்கங்களிலும்) 4 முகங்கள் உடையதாகவும் இருக்கலாம். 2 கைகள், அல்லது 4 கைகள் உடையதாக இருக்கலாம். (கைகள் அமையப்பெற்றிருக்க வேண்டுமானால், அதில்) ஸ்தந மட்டத்திற்கு மேலே அமைந்திருக்கவேண்டும். அதுவும் லக்ஷணத்துடன் அமைந்திருக்கவேண்டும். முகம் மட்டிலுமுள்ளதானால், அது, கழுத்திற்குமேலே அமைந்திருக்க வேண்டும். இது நீங்கிய பாகமானது லிங்கவடிவமாக இருக்கவேண்டும். இவ்விதம் முகலிங்க லக்ஷணம் கூறப்பட்டுள்ளது. இத்தகைய முகலிங்கமானது, அரசர்களுக்கு அபிவிருத்தியை யுண்டுபண்ணும்.

லிங்கத்தின் விஷ்கம்பத்தை (சுற்றளவை) 8 பாகங்களாகக் கணக்கிட்டுக்கொள்ளவேண்டும். லிங்கத்தின் மூலம் (அடி) மத்தியம் (நடு) அக்ரம் (நுனி) இவைகள் முறையே ஒன்றுக்கொன்று 1 பாகம் குறைவாக அமையப் பெற்றிருக்கவேண்டும், அதாவது, மூலம் 8 பாகம்,

ஸ்தூலாக்ரேஷ்வபி ஹ்ராஸாதி ஶிரஸ்தூலமுதாஹ்ருதம் ||

ஏததார்ஷமிதி ப்ரோக்தம் ருஷிபி: பூஜிதம் ஸதா |

த்ர்யஶ்ரம் பஞ்சகோணம் ச ஷட்ஸப்தத்வாதஶாஶ்ரகம் ||

தஶாஶ்ரம் ச நவாஶ்ரம் சாந்யாஶ்ரைஶ்ச மநோஹரம் |

பலகாதர்ஶாகாரமேகரேகமரேககம் || ௱௫௨ ||

ஶிரோவர்த்தநஹீநம் ச மாநோந்மாநவிவர்ஜிதம் |

ஸை(தி)வ்யம் ஸ்வாயம்புவஞ்சேதி ப்ரோக்தம் தேவை:

ஸம்பூஜிதம் || ௱௫௩ ||

பாணேந பூஜிதாத்வாத் பாணலிங்கமுதாஹ்ருதம் |

மத்தியம் 7 பாகம், அக்ரம் 6 பாக சுத்தளவுள்ளதாக அடி பருத்து நுனி சிறுத்து அமைந்திருக்கவேண்டும். இதற்கு ஸ்தூலமூல லிங்கம் (அடி பருத்த லிங்கம்) என்று பெயர்.

இவ்விதம் இதேயளவில் நுனி–நடு–அடி இவைகள் முறையே 8-ல் 1 பாகம் சுத்தளவு குறைவாக இருந்தால் அது சிரஸ்தூலம் (நுனி பருத்தது) என்று கூறப்படும். இவ்விரண்டு லிங்கங்களும், ஆர்ஷலிங்கமெனப்படும். இது மஹர்ஷிகளால் பூஜிக்கப்பட்டதாகும்; சிறந்ததுமாம்.

முக்கோண வடிவமானது 5 கோணமானது, 6 கோணமானது, 7 கோணமானது, 12 கோணமானது, 10 கோணமானது, 9 கோணமானது, வேறு விதமான கோணங்களுடன் மனோஹரமாக இருப்பது, பலகைபோலும் கண்ணாடிபோலும் இருப்பது, ஒரு ரேகையுள்ளது, ரேகையே இல்லாதது, சிரோவர்த்தனம் இல்லாதது, மானம், உன்மானம் முதலியவைகள் பொருத்தமாக இல்லாமலிருப்பது, ஆகிய லக்ஷணங்களுள்ள லிங்கமானது, ஸேவிக்கத்தக்கதென்றும் (திவ்ய லிங்கமென்றும்) ஸ்வாயம்புவ லிங்கமென்றும் கூறப்படுகிறது. இது, தேவர்களால் பூஜிக்கப்பட்ட லிங்கமாகும்,

𑌸𑍍𑌥𑍂𑌲𑌂 𑌸𑍂𑌕𑍍𑌷𑍍𑌮𑌂 𑌶𑌿𑌰𑍋𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌪𑌰𑌿𑌪𑌠𑍍𑌯𑌤𑍇 ॥

𑌉𑌨𑍍𑌨𑌤𑌂 𑌤𑍁 𑌶𑌿𑌰𑌂 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 * 𑌮𑌧𑍁𑌵𑌰𑍍𑌣𑌂 𑌤𑍁 𑌨𑍇𑌷𑍍𑌟𑌦𑌮𑍍 ।
𑌵𑌿𑌷𑍍𑌟𑌰𑍇 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌵𑍇𑌶𑌾𑌂𑌶𑌂 𑌸𑌾𑌰𑍍𑌵𑌦𑍇𑌶𑌿𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌤𑍍 ॥

𑌲𑍋𑌹𑌜𑌂 𑌰𑌤𑍍𑌨𑌜𑌂 𑌚𑍈𑌵 𑌸𑌾𑌰𑍍𑌵𑌦𑍇𑌶𑌿𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌵𑌤𑍍 ।
𑌲𑌿𑌙𑍍𑌗𑌭𑍇𑌦𑌾𑌃 𑌸𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌾𑌃 𑌶𑌿𑌰𑍋𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌶𑍃𑌣𑍁 ॥

𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑍂𑌰𑍍𑌧𑌾𑌦𑌿 𑌕𑍇𑌶𑌾𑌨𑍍𑌤𑌂 𑌶𑌿𑌰𑍋𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

பாணாஸுரனாலே பூஜிக்கப்பட்ட ஸ்வரூபத்தையுடைய லிங்கத்திற்கு பாணலிங்கம் என்று பெயர். அது ஸ்தூலமென்றும், ஸூக்ஷ்மமென்றும், சிரோலிங்கமென்றும், மூலலிங்கமென்றும் முறையே கூறப்படுகிறது. பாணலிங்கத்தில் உயர்ந்திருப்பது (எடுப்பாக உயர்ந்து காணப்படும் பக்கமானது) சிரஸ்ஸாகும். மது வர்ணமாக (தேன் நிறமாக) இருப்பது ஸந்தோஷத்தைக் கொடுக்காது. (அதைத் தொட்டால் சீதலமாக இருக்கும் என்பது மற்றொரு பிரதியிலுள்ள பாடம்.) இந்த பாணலிங்கத்தை ஆஸநத்தில் வைக்கும்பொழுது, அது ஸார்வதேசிக லிங்கத்திற்குக் கூறியுள்ளபடி ஆஸநத்திலமர்ந்திருக்க வேண்டும்.

லோஹத்தினால் செய்யப்பட்ட லிங்கம், ரத்நத்தினால் செய்யப்பட்ட லிங்கம் ஆகிய இவைகளையும், ஸார்வதேசிக லிங்கத்திற்குக் கூறப்பட்ட விதியின்படியே, ஆஸநத்தில் வைக்கவேண்டும். இவ்விதமாக லிங்க பேதங்கள் கூறப்பட்டன. இனி சிரோவர்தநத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

லிங்கத்தின் தலையிலிருந்து உச்சிவரையில் சிரோவர்தநம் செய்யவேண்டும். (சிரோவர்தநம் லிங்கத்தின் உச்சியின் அமைப்பு) ஆகையால், லிங்கத்தின் உயரத்தைக் கணக்

---

* 𑌸𑍍𑌪𑌰𑍍𑌶𑌨𑍇 𑌶𑍀𑌤𑌲𑌮𑍍 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌾𑌨𑍍𑌤𑌰𑌃 ।

தல்லாஶ லிங்கமானேன கல்பயித்வா ஶிரோவர்த்தனம் புத: ॥

சத்ராகாரம் பவேதேகம் குக்குடாண்டம் த்விதீயகம் ।
த்ருதீயம் த்ரிபுரா(த்ரபுஷா)காரமர்த்தேந்தும்

சதுர்த்தகம் ॥ ௱௫௮ ॥

யஸ்ய லிங்கஸ்ய விஷ்கம்பம் அஷ்டாவிபஜேத் புத: ।
ஸார்த்தாம்ஶம் ஸ்தாப்ய சத்ரஶீர்ஷகம் ॥

த்வாத்ரிம்ஶத் விபஜேத்தார பஞ்சாம்ஶம் ।
சத்ராபம் தத் த்விதீயம் ஸ்யாத் ஸவ்யாம்ஶம் தத்

த்ருதீயகம் ॥ ௱௫௯ ॥

கிட்டு, அதற்கேற்றபடி சிரோவர்தநத்தை அமைக்க வேண்டும். அந்த சிரோவர்தநமானது, குடைபோலிருப்பது (தாழங்குடையின் மேல் பாகத்தைப்போலிருப்பது.) 1, கோழி முட்டைபோல இருப்பது 2, திரிபுரம்போல் *(மூதுக்கன் காயைப்போல்) இருப்பது 3, அரைவட்டமான சந்திரபிம்பத்தைப்போல இருப்பது 4, என்று 4 விதமாகும்.

புத்திமானுக இருப்பவன், லிங்கத்தின் சுத்தளவை 8 பாகமாகச் செய்துகொண்டு, அவைகளில், ½ பங்கை உச்சியிலிருந்து அளந்துகொண்டு, அதை, குடையின் உச்சியைப்போல, சிரோவர்தநத்தை அமைக்கவேண்டும். இது ஒருவிதமாகும்.

லிங்கத்தின் அகலத்தைக் கணக்கிட்டு, அதை 32 பாகங்களாகச்செய்து, அவைகளில், 5 பாகத்தை, உச்சியிலிருந்து, குடையின் உச்சியைப்போல, சிரோவர்த்தநத்தை

---

* த்ரபுஷம் என்பதற்கு மூதுக்கன்காய் என்றும், மெதுக்கன்காய் என்றும், சுக்காங்காய் என்றும் பெயர். சிலர் வெள்ளரிக்காய் என்றும், சிலர் கக்கரிக்காய் என்றும் கூறுகின்றனர்,

அதாயாமம் து நவாம்ஶம் ஸ்யாச் சத்ராபம் து
ததாவிதம் |
த்விஜாநாஞ்ச ந்ருபாணாஞ்ச சத்ராபம் ஸர்வகாமதம் ||

ஸர்வேஷாமபி லிங்காநாம் சத்ராபம் து ப்ரஶஸ்தகம் |
வ்யாஸே த்வாத்ரிம்ஶதம்ஶே து சதுர்வக்ஷகலாம்ஶகை: ||

ஸப்ததஶாம்ஶகைர்வா குக்குடாண்டம் ததாவிதம் |
வர்தமாநஞ்ச லிங்கம் து ப்ரஶஸ்தம் ஸுக்ரியாவஹம் ||

யமைக்கவேண்டும். இது இரண்டாவது விதமாகும்.

இவ்விதமே, லிங்கத்தின் அகலத்தில் 32-ல் 7 பாகங்களால் சிரோவர்த்தநத்தையமைப்பது மூன்ருவது விதமாகும்.

இவ்விதமே, லிங்கத்தின் அகலத்தில் 32-ல் 9 பாகங்களாலே சத்ராகாரமாக சிரோவர்தநத்தை அமைப்பது நான்காவது விதமாகும்.

இவ்விதம் சத்ராகாரமான சிரோவர்தநம் நான்கு விதமாகும்.

சத்ராகாரமான சிரோவர்தநமானது, பிராம்ஹணர்களுக்கும், க்ஷத்திரியர்களுக்கும், ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்கக்கூடியதாகும். லிங்கங்கள் எல்லாவற்றிலும் சத்ராகாரமான சிரோவர்தநமுடையது சிறந்ததாகும்.

லிங்கத்தின் அகலத்தை 32 பாகங்களாகச் செய்து, அவைகளில், முறையே, 14 – 15 – 16 – 17 பாகங்களாலே குக்குடாண்டம்போன்ற சிரோவர்த்தநமானது, 4 விதமாகும். (குக்குடம் — கோழி. அண்டம் — முட்டை.) இந்த 4 வித சிரோவர்தங்களுக்கும், குக்குடாண்டாகார சிரோவர்த்தநம் என்று பெயர். இவ்வித சிரோவர்த்தநமுடைய லிங்கமானது, வர்தமாந லிங்கமாக இருக்க

𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌾𑌂𑌶𑍇 𑌶𑌿𑌰(𑌸𑍍𑌤𑍍𑌰𑌿)𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌯𑍁𑌗𑍍𑌮𑌵𑍃𑌦𑍍𑌧𑍍𑌯𑌾𑌂𑌶𑌕𑍈
𑌰𑍍𑌧𑍍𑌯𑌾 ।
𑌸𑌾𑌰𑍍𑌧𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑌾𑌂𑌶𑍇𑌷𑍁 𑌤𑍍𑌰𑌪𑍁𑌸𑌾𑌖𑍍𑌯𑌂
(𑌤𑍍𑌰𑌪𑍁𑌷𑌾𑌖𑍍𑌯𑌂) 𑌅𑌥𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௱௯௪ ॥

𑌶𑌿𑌵𑌾𑌧𑌿𑌕𑌂 𑌚 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌶𑌸𑍍𑌤𑌂 𑌵𑍈𑌶𑍍𑌯𑌾𑌰𑍍𑌥𑌕𑌂 𑌉𑌦𑌿𑌤𑌮𑍍 ।
𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑍇 𑌶𑌿𑌰𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑍇𑌕𑌵𑌿𑌂𑌶𑌤𑌿𑌃 ॥

(𑌦𑍍𑌵𑌾𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑌂𑌶𑍇𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇 𑌦𑍍𑌵𑌾𑌵𑌿𑌂𑌶𑌤𑍍𑌯𑍇𑌕 𑌵𑌿𑌂𑌶𑌕𑍈𑌃 ।)
𑌵𑌿𑌂𑌶𑍈𑌕𑍋𑌨𑌵𑌿𑌂𑌶𑌾𑌂𑌶𑍈𑌰𑍍𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌂 𑌅𑌥𑍋𑌚𑍍𑌯𑌤𑍇 ।
𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌾𑌖𑍍𑌯𑌂 𑌚 𑌲𑌿𑌙𑍍𑌗𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌶𑌸𑍍𑌤𑌂 𑌶𑍂𑌦𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌦𑌮𑍍 ॥

𑌸𑌾𑌰𑍍𑌵𑌦𑍇𑌶𑌿𑌕𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌮𑌨𑍍𑌯𑍇𑌷𑌾𑌂 𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ।
(𑌮)𑌤𑍍𑌰𑌾𑌦𑌿𑌶𑍀𑌰𑍍𑌷𑌕𑌾𑌣𑍇(𑌣𑌂) 𑌤𑍁 𑌕𑌰𑍍𑌤𑍃𑌜𑌾𑌤𑌿-
𑌵𑌶𑌾𑌨𑍍𑌨𑌯𑍇𑌤𑍍 ॥ ௱௯௭ ॥

வேண்டும். அது க்ஷத்திரியர்களுக்கு உகந்ததாகும். சிறந்ததுமாம்.

லிங்கத்தின் அகலத்தை 32 பாகங்களாகச் செய்து, அவைகளில் முறையே, 10 – 11 – 12 – 13 பாகங்களாலே, த்ரிபுரத்தைப்போன்ற (முதுக்கன்காய் போன்ற) சிரோவர்தநமானது 4 விதமாகும். இது சிவாதிக லிங்கத்தில் அமைக்கப்பட வேண்டும். இத்தகைய லிங்கமானது வைசியர்களுக்கு ஏற்றதாம். சிறந்ததுமாம்.

லிங்கத்தின் அகலத்தை 32 பாகங்களாகச் செய்து, அவைகளில் முறையே, 10 – 11 – 12 – 13 பாகங்களால், அரைவட்ட சந்திரனைப் போன்ற சிரோவர்த்தநத்தை யமைத்தால், அர்தசந்திராபமானது 4 விதமாகும். இவ்விதமாக சிரோவர்த்தநமுடையது, ஸ்வஸ்திக லிங்கமாகும். இது, சூத்திரர்களுக்கு அபிவிருத்தியையளிக்கும்.

ஸார்வதேசிக லிங்கங்களுக்கும், மற்ற லிங்கங்களுக்கும்,

𑌦𑍈𑌵𑌿𑌕𑌾𑌰𑍍𑌷𑍇(𑌚) 𑌲𑌿𑌙𑍍𑌗𑌾𑌨𑌾𑌂 𑌦𑍇𑌶(𑌸𑍍𑌯𑌾𑌦𑌿)𑌵𑌶𑌾𑌚𑍍(𑌚)
𑌶𑍀𑌰𑍍𑌷𑌕𑌮𑍍 ।

𑌶𑌿𑌰𑍋𑌵𑌰𑍍𑌤𑌨𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋𑌽𑌯(𑌯𑌂) 𑌮𑌾𑌨𑌹𑍀𑌨𑌮𑌵𑌿𑌧𑌿𑌹𑌿𑌤𑍇 ॥*

𑌯𑍁𑌕𑍍𑌤𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌂𑌶𑌂(𑌤𑍍𑌰𑍍𑌯𑌂𑌶𑌂) 𑌤𑌲𑍍𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌚𑍍𑌚(𑌚𑍍𑌚𑌂) 𑌶𑌿𑌰𑍋
𑌵𑌰𑍍𑌤𑌨𑌂 𑌵𑌿𑌦𑍁𑌃 ।

𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌮𑌾𑌨𑌮𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌶𑌿𑌰𑍋𑌮𑌾𑌨𑌂 𑌤𑌦𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௧௬௯ ॥

𑌚𑍂𑌡𑍍𑌯𑌨𑍍𑌤𑌂(𑌯𑌨𑍍𑌤𑌂)𑌦𑍍𑌯𑌾𑌤𑍍𑌤𑌦𑍍𑌧𑌾𑌨𑌂 𑌪𑌰𑌿𑌤𑍋 𑌵𑌰𑍍𑌤𑌯𑍇𑌤𑍍 𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌨𑍍 ।
𑌯𑌾𑌵𑌲𑍍𑌲𑌮𑍍𑌬𑌨𑌸𑍀𑌮𑌾𑌨𑌂 𑌚𑍂𑌡𑍍𑌯𑌨𑍍𑌤𑌂(𑌯𑌨𑍍𑌤𑌂)𑌦𑍍𑌯𑌾𑌤𑍍 𑌕𑍍𑌷𑍁𑌰𑌾𑌨𑍍𑌤𑌕𑌮𑍍 ॥

விசேஷித்து, கர்த்தாவின் ஜாதிக்குத் தக்கபடி, சீர்ஷாகாரத்தை, சத்திராதி ஆகாரமாகக் கல்பித்துக்கொள்ள வேண்டும். தைவிகலிங்கம், ஆர்ஷலிங்கங்களில், சீர்ஷாகாரமானது, எவ்விதமாகவும் இருக்கலாம். *(167½)*

சிரோவர்த்தநத்துடன் கூடிய லிங்கத்தின் உயரத்தை 3 பாகங்களாகப் பிரித்துக்கொண்டால், அதில் சிரோவர்த்தநத்தின் உயரத்தை யுக்தியினாலே கண்டுகொள்ளலாம். இவ்விதமாக உஷ்ணீஷமானம் கூறப்பட்டது. அதுவே சிரோமானமென்று கூறப்படுகிறது. *(169)*

உச்சியிலிருந்து அதன் முனை (சிரோவர்த்தநத்தின் எல்லை) வரையில், சுற்றிலுமிருக்கும்படி அதை அமைக்க வேண்டும். அது எதுவரையில் குறைவாக இருக்க

---

* 𑌉𑌤𑍍𑌤𑌰𑌵𑌰𑍍𑌣𑌂 𑌸𑍂𑌪𑌟𑌲𑌂 𑌸𑌾𑌪𑍇𑌕𑍍𑌷𑌃 𑌸𑌰𑍍𑌵𑌤𑍀𑌰𑍍𑌥𑌹𑌸𑍍𑌤𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌾𑌮𑌤𑌃 5½ 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌮𑌕𑍋 𑌹𑌾𑌨𑍋 𑌨𑍈𑌵 𑌸𑌂𑌮𑌤𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌸𑍂𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌸𑌂𑌗𑍍𑌰𑌹𑌾𑌲𑌯𑍇 𑌚𑌾𑌰𑍍𑌵𑍀𑌤𑌵𑌾𑌤𑍁𑌲𑌮𑌤𑌃 143–185 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌮𑌕𑌃 𑌪𑌾𑌠𑌃, 𑌪𑌾𑌦𑍈𑌸𑍍𑌤𑍁𑌟𑌿𑌪𑍁𑌕𑍍𑌷𑌕𑌾𑌤𑍍𑌮𑌕𑍇 59 𑌪𑌟𑌲𑍇 143–185 𑌶𑍍𑌲𑍋𑌕𑌾𑌤𑍍𑌮𑌕𑍋 𑌹𑌾𑌨𑍋 𑌭𑌵𑌤𑌿 । 𑌅𑌤𑍋𑌽𑌤𑍍𑌰 𑌸𑌰𑍍𑌵𑌤𑍀𑌰𑍍𑌥𑌹𑌸𑍍𑌤𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌾𑌮𑌤𑌃 𑌪𑌾𑌠 𑌨𑍈𑌵 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌤𑍋 𑌭𑌵𑌤𑍀𑌤𑍍𑌯𑌵𑌧𑍇𑌯𑌮𑍍 ।

[illegible] ॥ ௱௭௧. ॥

[illegible] ॥

வேண்டுமோ, அதுவரையில், உச்சியிலிருந்து, முறையே, தணிந்து இருக்கவேண்டும். (சிரோவர்த்தநமானது, உச்சியிலிருந்து அதற்குரிய எல்லைவரையில், சுற்றிலும், முறையே செறிந்திருக்கவேண்டும் என்று பொருள்) (170)


சத்ரசீர்ஷமானது, (குடை வடிவமான சிரோவர்த்தநமானது) லிங்கத்தின் உச்சியிலிருந்து (முறையே) செறிந்திருப்பதாகும்.

திரிசீர்ஷகத்தை, 3 சக்கிரங்களுடன் கூடியதாக கல்பிக்கவேண்டும். (171)

இவ்விதமாக (சக்கிரமில்லாமல் அமைக்கப்பட்டது.) ஸாதாரண சீர்ஷமாகும்.

லிங்கத்தின் சீர்ஷம், (சிரோவர்த்தநம்) அகலம், உயரம் இவைகளை சொல்லியிருக்கிறபடியே செய்ய வேண்டும். சொல்லாதவிதமாகச் செய்யக்கூடாது. அப்படிச் சொல்லாத விதமாகச் செய்தால், ராஜாவுக்கும்,

|| *அய வஞ்ஜாஶத்தஃ வடிலஃ ||



வீலக்ஷணடீ ||

அயாதொ நாமஶா்தீநாம் லிஂமாநாம் வீலக்ஷணமு ।

ஶூஷள த⁻ வக்ஷ்யதெ விவு ஸகலாநாம் ததொ விஷ⁻: ||

ஸெலஜெ ஶிலயா வீலம் ஸ⁻யெஷ்கயாவி வா ।

ராஜ்யத்திற்கும் பயமுண்டாகும். ஆகையால், ஸகல முயற்சியுடனும், கூறியுள்ள முறையுடனேயே செய்ய வேண்டும். இவ்விதமாக லிங்க லக்ஷணம் கூறப்பட்டது. இனி பீட லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக.

காசியபீயசில்ப சாஸ்திரத்தில் லிங்கலக்ஷணமென்னும்
நாற்பத்தோன்பதாவது படலம் முற்றும்.

ஐம்பதாவது படலம்.

பீட லக்ஷணம்.

லிங்க லக்ஷணத்தைக்கூறிய பிறகு, முதலில், நாகராதி லிங்கங்களின் பீடலக்ஷணத்தைக் கூறுகிறேன். ஸகல மூர்த்திகளின் பீடலக்ஷணத்தை பிறகு அறிந்து கொள்ளலாம். (1)

சிலையாலான லிங்கத்திற்கு, பீடமானது, சிலையாலேயே இருக்கவேண்டும். ஸுதை, செங்கல் இவைகளாலேயும் இருக்கலாம்.

---

*அதெ ஷஉவயெயம்—

லிஂமலக்ஷணாநநுரம் யாவக் ஸ⁻வாஸநஉஷி-லேக்ஷணம், ஸாஸதீஹொலயஸூஉஊாதூகாவ⁻ஸுகெ, ஶூநடிாஞஉஉ⁻ஷ ணா-லயஉ⁻ஷிதவ⁻ஸுகெ அ விஷயாணாம் குஉஹெஷொஉ ஶூதெ । அயாவி ஸாஸதீஹொலயஸூஉஊாதூகாமத: குஉ: ஸம்மதொ ஹாதி । அத: ஸ ஊவ குஉ: ஓீகூத ஊதி ।

𑌦𑌾𑌰𑍁𑌜𑍇 𑌦𑌾𑌰𑍁𑌜𑌂 𑌵𑌾𑌪𑌿 𑌇𑌷𑍍𑌟𑌕𑌾𑌯𑌾𑌮𑍇𑌵 𑌵𑌾 ॥ ௨ ॥

𑌰𑌤𑍍𑌨𑌜𑍇 𑌲𑍋𑌹𑌜𑌲𑌿𑌙𑍍𑌗𑌮𑌾𑌤𑍍𑌰𑌾𑌂 𑌸𑍍𑌯𑌾𑌦𑍍𑌰𑌤𑍍𑌨𑍇 𑌲𑍋𑌹𑌜𑌂 𑌤𑍁 𑌵𑌾 ।
𑌲𑌿𑌙𑍍𑌗𑍋𑌦𑌯𑌸𑌮𑌂 𑌪𑍀𑌠𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑍇𑌣𑍋𑌤𑍍𑌤𑌮𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ॥

𑌪𑍂𑌜𑌾𑌂𑌶𑍋𑌚𑍍𑌛𑍍𑌰𑌯𑌸𑌮𑌂 𑌪𑍀𑌠𑌤𑌾𑌰𑌂 𑌕𑌨𑍍𑌯𑌸𑌂 𑌤𑍁 𑌉𑌚𑍍𑌯𑌤𑍇
𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌷𑍍𑌟𑌧𑌾𑌭𑌾𑌗𑍇 𑌤𑍁 𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ॥ ௪ ॥

𑌪𑍀𑌠𑌵𑍍𑌯𑌾𑌸𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑌾𑌗𑍈𑌕𑌂 𑌦𑍍𑌵𑌿𑌭𑌾𑌗𑌂 𑌚𑍋𑌤𑍍𑌤𑌮𑍋𑌦𑌯𑌮𑍍 ।
𑌵𑍍𑌯𑌾𑌸𑌾𑌰𑍍𑌧𑌮𑌧𑌮𑍋𑌤𑍍𑌸𑍇𑌧𑌂 𑌤𑌯𑍋𑌰𑍍𑌮𑌧𑍍𑌯𑍇𑌽𑌷𑍍𑌟𑌧𑌾 𑌭𑌾𑌜𑌿𑌤𑍇 ॥ ௫ ॥

𑌨𑌵𑌧𑌾 𑌪𑍀𑌠𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌉𑌤𑍍𑌤𑌮𑌾𑌦𑌿𑌤𑍍𑌰𑌯𑌂 𑌤𑍍𑌰𑌯𑌮𑍍 ।
𑌕𑍍𑌰𑌮𑍇𑌣 𑌕𑌥𑌿𑌤𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰 𑌨𑌾𑌗𑌰𑌂 𑌚𑍈𑌵𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ॥ ௬ ॥

மரத்தால் செயயப்பட்ட லிங்கத்திற்கு, பீடமானது, மரத்தினுலாவது, செங்கல்லாலாவது இருக்கவேண்டும்.

ரத்நநிர்மிதமான லிங்கத்திற்கு, பீடமானது, ரத்நத்தினுலாவது, லோஹத்தினுலாவது இருக்கவேண்டும்.

லிங்கத்தின் பீடமானது, லிங்கத்தின் உயரத்திற்கு ஸமமான அகலமுடையதாக இருப்பது உத்தமமாகும்.

பீடத்தின் அகலமானது, பூஜாம்சத்தின் உயரத்திற்கு ஸமமாக இருப்பது அதமமாகும். இவ்விரண்டின் மத்திய அளவை 8 பாகங்களாகச் செய்ய, பீடவிஸ்தாரம் 9 விதமாகும். இவைகளில் 3, 3 அளவுகள், முறையே, உத்தம–மத்தியம–அதம அளவுகளாகும். (4)

பீடத்தின் அகலத்தில் 3ல் 2 பங்கு உயரமுடையது உத்தம பீடமாகும். ½ பங்கு உயரமுடையது அதமமாகும். இவைகளின் மத்திய அளவை 8 பாகங்களாகச் செய்ய பீடத்தின் உயரம் 9 விதமாகும். இவைகளில் முறையே, 3; 3 உத்தம-மத்தியம–அதம-உயரங்களாகும். இவ்விதமாக முறையே, நாகரலிங்கத்தின் பீடலக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. (6)

லிங்கஸ்யோச்சஸமம் வ்யாஸம் ஶ்ரேஷ்டம் ததுபவாஜிதே ।
நவதா விஸ்த்ருதம் வ்யாஸம் ப்ரஹ்மவிஷ்ண்வம்ஶயோரபி ॥ ௭ ॥

உதயம் நவதா(வஸுதா) க்ருத்ய த்விபாகம் வா தலாம்ஶகம் ।
ஏகாம்ஶம் வா விஶேஷேண பூம்யந்தஸ்து
நிவேஶயேத் ॥ ௮ ॥

ஶேஷம் பீடோதயம் வ்யக்தமேவம் த்ராவிடலிங்ககே ।
பூஜாம்ஶஸ்ய பரீணாஹமானம் ஶ்ரேஷ்டம் விஶாலகம் ॥ ௯ ॥

பரீணாஹே கலாம்ஶே து த்வாதஶாம்ஶேऽதமம் ததः ।
தயோர்மத்யேऽஷ்டபாகே து நவதா பீடவிஸ்த்ருதம் ॥ ௰ ॥

லிங்கத்தின் உயரத்திற்கு ஸமமான, உத்தம அகலத்தை (லிங்கோதயத்தாலே கூறப்பட்ட, ஶ்ரேஷ்டமான 3 வித அகலத்தை) 9 (8) பாகமாகச் செய்ய, அகலம் 9 விதமாகும், இவ்விதமான விபாகங்களை, பிரம்ஹாம்சம், விஷ்ணு அம்சம் இவைகளில் கொள்ளவேண்டும். (7)

உயரத்தை 9 பங்குகளாகச் செய்ய, அவைகளில் 2 பங்குகள், தலாம்சமாகும். விசேஷித்து 1 பங்கையும் தலாம்சமாகக் கொள்ளலாம். இந்த தலாம்சத்தை பூமியினுள் வைக்கவேண்டும். இந்த பாகம் நீங்கலாக பாக்கியுள்ள பாகங்கள், பீடத்தின் உயரமாகும். இவ்விதமாக, திராவிட லிங்கத்தின் பீடத்தை கல்பிக்கவேண்டும்.

பீடத்தின் விசாலமானது, பூஜாம்சத்தின் சுத்தளவுக்கு ஸமமாக இருப்பது, உத்தமமாகும். அந்த அளவில் 16-ல் 12 பங்கு இருப்பது, அதமமாகும். இவைகளின் மத்திய அளவை 8 பங்காகச் செய்ய, பீட விஸ்தாரம் 9 விதமாகும்.

விஷ்ணுபாகஸமோச்சம் து பீடம் கந்யஸமுச்ச்ரிதே ।
ஸபாதம் ச்ரேஷ்டமாக்யம் து தயோர்மத்யேஷ்டபாஜிதே ॥

நவதா பிண்டிகாதுங்கம் வேஸரம் லிங்கமாசரேத் ।
அதவா லிங்கவிஷ்கம்பம் த்ரிகுணம் பீடவிஸ்தரம் ॥ ௰௨ ॥

அதவா லிங்கவிஷ்கம்பம் சதுரச்ரீக்ருதே ஸதி ।
தத்கர்ணத்விகுணம் பாதம் (பாத) ஸார்த்தம்
த்ரிகுணமேவ வா ॥ ௰௩ ॥

த்ரிகுணம் வா விசாலம் து பீடானாம் து விசேஷத: ।
கர்ப்பகேஹே(ஹ)ஸமார்த்தைகம் அதுர்பாகைகமேவ வா ॥

பீடவ்யாஸம் ஸமாக்யாதம் விஷ்ணுபாகஸமோந்நதம் ।
ஸாமான்யம் நாகராதீனாம் லிங்கானாம் பிண்டிகாவிதௌ ॥ ௰௪ ॥

பீடமானது, விஷ்ணுபாகத்திற்கு ஸமமான உயரமுடையதாக இருந்தால், அது, அதமமாகும். கால்பங்கு கூடுதலாக (1¼ பங்காக) இருந்தால், அது, சிரேஷ்டமாகும். இவைகளின் மத்திய அளவை 8 பங்குகளாகச் செய்ய பிண்டிகையின் (பீடத்தின்) உயரம், 9 விதமாகும். இவ்விதமாக, வேஸரலிங்கத்தைக் கல்பிக்கவேண்டும். (11½)

அல்லது, லிங்கத்தின் சுற்றளவு 3 கொண்டது, பீடத்தின் அகலமாகும். அல்லது, லிங்கத்தின் சுற்றளவை, சதுரச்ரமாகச்செய்துகொண்டு, அதன் கர்ணத்தின் 2பங்கு (2¼ பங்கு) 2½ பங்கு அல்லது 3 பங்குகொண்டது, விசேஷித்து பீடத்தின் விஸ்தாரமாகும். (13½)

கர்பகிருஹத்தில் (விஸ்தாரத்தில்) ஸரிபாதி, அல்லது 4ல் 1 பாகம், பீடத்தின் விஸ்தாரமாகக் கூறப்பட்டிருக்கிறது. (பீடத்தின்) உயரமானது விஷ்ணுபாகத்திற்கு ஸமானமாகும். இவ்விதமாக நாகராதி லிங்கங்களின்

உபாநபாஹ்ய(ஹ்ய) விஸ்தாரம் ஸர்வேஷாம் து
விசேஷத: |
தத்அஷ்டநவதசாம்சஹீநம் வா ப்ரவிசாலத: || ௧௫ ||

விஷ்ணுபாகஸமோத்துங்கம் ஸபாதம் ஸார்தமேவ வா |
ஸாமாந்யம் லிங்கிகாநாம் து நாகராதிஷு ஸூசிதம் ||

லிங்காநாம் ஸகலாநாம் து ஸாமாந்யம் பீடலக்ஷணம் |
*ஸுதாயா(வா) நவாம்சே து வேதாம்சம் கநத்ய
ஹோதயம் || ௧௬ ||

யுக்மாம்சம் ச்ரேஷ்டமாநம் து தயோர்மத்யேஷு ஸாதிதே |
நவதா பீடதுங்கம் து தஸ்ய விஸ்தாரமுச்யதே || ௧௭ ||

பீடதுங்கஸமம் வ்யாஸமயம் பீடமுச்யதே |

பிண்டிகா லக்ஷணமானது, ஸாதாரணமாக (பொதுவாக)க் கூறப்பட்டிருக்கிறது. (15)

உபாநத்தின் வெளிப்பக்கத்தின் விஸ்தாரமானது, விசேஷித்து எல்லாவற்றிற்கும் (பீடங்களுக்கும்) அதன் அகலத்தில் 8, 9 அல்லது 10ல் 1 பாகம் குறைவாக இருக்க வேண்டும். அதன் உயரமானது, விஷ்ணு பாகத்திற்கு ஸமமான உயரமுடையதாகவோ, கால்ப்பங்கு அதிக உயரமுடையதாகவோ, அல்லது 1/2 பங்கு அதிக உயரமுடையதாகவோ இருப்பதாகும். இவ்விதமாக நாகராதி லிங்கங்களின் உயரமானது, பொதுவாகக் கூறப்பட்டுள்ளது.

லிங்கமானது ஸுதாமயமான பீடத்துடனிருந்தால், அதன் உயரத்தில் (அல்லது லிங்கத்தின் உயரத்தில்) 9ல் 5 பங்கு, அல்லது 4 பங்கு பீடத்தின் உயரமாகும். இவ்விரண்டு அளவுகளின் மத்திய அளவை 8 பங்குகளாகச் செய்ய அதன் உயரம் 9 விதமாகும். இனி அதன் அகலத்தைக் கூறுகிறேன்.

---

*கநோதயே இதி க்ருதாநாமுத்தர்ப்ராதவா: | லிங்கோதயே இதி வாசேந பாடபேதி பாதி |

ப்ரமாணம் ஸோத்ஸேதம் வ்யாஸம் தயோர்மத்யேஷ்டதா க்ருதே ||

நவதா விஸ்த்ருதம் ப்ரோக்தம் ஸகலாநாம் விசேஷத: |

பிண்டிகா கோமுகோபேதா லிங்காநாம் து விதீயதே ||

கோமுகரஹிதம் பீடம் ஸகலாநாம் விசேஷத: |

ஸமாச்ரம் ஸவ்ருத்தம் (வ்ருத்தம்) வா லிங்காநாம் து விதீயதே ||

ஸாயுதாச்ரவ்ருத்தாநாம் ப்ரதிமாநாம் ஸமம் து வா |

[சதுரச்ராவ்யவ்ருத்தா ச ப்ரதிமாநாம் விதீயதே |]

பத்மபீடம் பத்ரபீடம் வேதிகாபரிமண்டலம் || ௨௩ ||

பீடம் சதுர்விதம் ப்ரோக்தம் லிங்காநாம் விதோத்தம |

பீடத்தின் உயரத்திற்கு ஸமமாக அகலமிருப்பது அதமபீடமாகும். 2 பங்கு அகலமிருப்பது உத்தம பீடமாகும். இந்த 2 அளவுகளின் மத்திய பாகத்தை 8 பங்குகளாகச் செய்ய பீட விஸ்தாரமானது 9 விதமாகும். இது விசேஷித்து ஸகல லிங்கங்களுக்கும் கூறிய பீடமான மாகும். (20½)

லிங்கங்களின் பீடமானது கோமுகத்துடனிருக்க வேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. ஸகல மூர்த்தி களின் பீடமானது, விசேஷித்து கோமுகமில்லாதது, என்று கூறப்பட்டிருக்கிறது. (21½)

லிங்கங்களின் பீடமானது, ஸமாச்ர(ஸம சதுரம்)மாக வாவது, ஸமவிருத்தமாகவாவது இருக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. பிரதிமைகளின் பீடமானது, சதுரச்ரமாகவும், விருத்தமாக (வட்டவடிவமாக) இல்லா மலும் இருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது.

பத்மபீடம், பத்ரபீடம், வேதிகை, பரிமண்டலம்,

கண்டாம்ஶம் விபஜேத்தூர்த்வம் பத்மாம்ஶம் விபாகத: ॥ ௨௪ ॥

பட்டிகாம்ஶம் ப்ராஹுர்யத் பத்மம் கண்டம் (ஞ்ஜம்) வாஜனகவாஜிகம்
(ஸஞ்ஜிதம்) ।

ஊர்த்வபத்மம் து வேதாம்ஶம் த்விபாகம் பட்டிகோதயம் ॥ ௨௫ ॥

ஶிவாம்ஶம் க்ருதவாரீம் ஷோடஶதளஸம்யுதம் ।

தளமத்யே க்ஷுத்ரதளம் வ்ருத்தவாதமூலாக்ரதளம் ॥ ௨௬ ॥

ஏகாங்குலவிஸ்தாரா(விஸ்தாரா)ஸ்ஸ்யு: தளாஸ்ததைவ

ஸவ்ருத ।

லிங்கதேஹாங்குலார்தம் வா தளாக்ராணாம்

ஸமாஸ்ரு(ஷ்டி)யம் ॥ ௨௭ ॥

என்று பீடம் நான்கு (4)விதமாகும். இவைகள் பீடத்தின் அலங்கார பேதங்களாம்.

அல்லது மற்றொருவிதமாகவும் தேவீ லக்ஷணத்தைக் கூறுகிறேன். இடது கைத்தலத்தை, இடது துடைக்கு வெளிப்பக்கத்தில் பீடத்தில் வைக்கவேண்டும். முன்பு கூறியதுபோலவே, வலது கையில் நீலோத்பலத்தை தரித்திருக்கவேண்டும்

வலது கையானது, பீடத்தைக்காட்டிலும் சிறிதளவு (பீடத்தின்மீது வைக்கப்பட்டிருக்கும் வலது முழங்காலுக்கு மேலே சிறிதளவு) உயர்ந்திருக்கவேண்டும். (ஸ்வாமி இருக்கும்பீடத்திலிருந்து) அம்பாளுடைய முழங்கால் வரையில் மத்தியில் பீடத்தின் ஒதுக்கம் 3, 4, அல்லது 5 அங்குலமிருக்கவேண்டும். 6, 7, அல்லது 8 அங்குலமிருப்பதுமாகும். (9)

தேவீபாகமானது, இவ்விதம் இரண்டுவிதமாக விதிக்கப்பட்டிருக்கிறது என்று கூறுகிறார்கள். ஸ்திரீ மானத்தில்

† [illegible]

* [illegible]

‡ஶூஸநெ அாஸநம் வஹாநம் விவஸீநம் விவக்ஷஃ ।
தெவீருக்ஷணமெவம் வா(ஸ்யாக்)ஹாலக்ஷணமஃஅஹதெ ॥

தெவிதெவெஶயொமெயெ ஹாவயெக் ஹாலக்ஷஸேதிசெகாழ ।
தெவ்யா ஹிக்காவஸாநம் தூ ஹாலக்ஷநம் நஷ்ணுநமேழ ॥ ௰ ॥

ஶ்நாக்ஷாந்தம் கநிஷ்டம் ஸ்யாக் தயொமெயெ்யஷஹாஜிதெ ।
நவயா ஹாலமாநம் து உத்தமாதிதூயம் தூயழ ॥ ௧௧ ॥

கூறியிருக்கும் முறையின்படியே தேவீமானத்தைக்கொள்ள வேண்டும்.

* ஸ்வாமி உட்கார்ந்த வடிவமானல் அம்பாளும் உட்கார்ந்த வடிவமாகவே இருக்கவேண்டும். மாறுபட்டிருந்தால் ஆபத்தையுண்டுபண்ணும். இவ்விதமாக தேவியின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி ஸ்கந்தரின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். (11)

தேவீ, தேவேசன், இவர்களின் நடுவில் ஸ்கந்தரின் மூர்த்தியை ஸ்தாபிக்கவேண்டும். அந்த மூர்த்தியானது தேவியின் கழுத்துமட்டமாக இருப்பது உத்தமமூர்த்தியாகும். ஸ்தநாக்ஷமட்டமாக இருப்பது அதமமாகும். இவ்விரண்டுவித அளவுகளின் மத்தியமானத்தை 8 பாகங்களாகச் செய்ய, ஸ்கந்தரின்மானம் 9 விதமாகும். இந்த 9 வித மானங்களில், முறையே 3, 3 மானங்கள் உத்தமாதி மானங்களாகும். ஸ்கந்த மூர்த்தியின் மானத்துடன்

---

‡ஶூநகாஸநம் து தெவெஶதெவிஆஶாநகம் ஹவெக்(?) ।
உதி ஶஹி தவஹாஸகதொயிக: வா: வக்ஷிதொயம் ஹாதி ।

* ஸ்வாமி நின்றவடிவமானல் அம்பாளும் நின்றவடிவமாகவே இருக்கவேண்டும் என்ற பொருள் கொண்ட ‡ சுலோகம் அச்சிட்டிருக்கும் நூலில் அதிகமாகக் காணப்படுகிறது. இது சேர்க்கப்பட்டிருக்குமென்று தோன்றுகிறது

ஜாத்யாவ்ய:ஸ (ஜாத்யம்ஸெந)யா’த்ம் வாபி ஹீநம் வாபி
வ்ருகல்பயெத் ।
ஸ்கந்தஸ்யோச்ச்ராயம் தத்தாநம் து விபாஜிதே ॥ ௧௩ ॥

ஏகாம்ஸகம் மாத்ரம் வ்யாதம் தத்யஷ்டாம்ஸம் யவம் பவெத் ।
ஏகாம்மாத்ரம் ஸிரொநாநம் கெஸாந்தம் ததைவ தத்
ஸமம் ॥ ௧௪ ॥

*ஹிக்காமம் நெத்ரஸூத்ராந்தம் புடாந்தம் ததைவ
தத்ஸமம் ।
மாணாம்ஸம் ஹநுஸீமாந்தம் க்ரீவொச்சம் து
மாணாம்மாத்ரம் ॥ ௧௫ ॥

ஹிக்காஸூத்ராத் ஹ்ருதாந்தம் து நவமாத்ரம் ததாத்ரம் ।
தஸ்மாந்நாப்யவஸாநம் து வஸ்மாத்ரம் ததாத்ரம் ॥ ௧௬ ॥

ஜாத்தியம்சத்தைக் கூட்டிக்கொண்டும் மூர்த்தியை நிர்மாணம் செய்யலாம். ஜாத்தியம்சத்தைச் சேர்க்காமலும் கல்பிக்கலாம். (13½)

ஸ்கந்த மூர்த்தியின் உயரத்தை 64 பாகங்களாகச் செய்து கொள்ளவேண்டும். அவைகளில் 1 பாகமானது 1 அங்குலமாகக் கூறப்பட்டிருக்கிறது. இப்படிக் கணக்கிடப்பட்ட ஒரு அங்குலத்தில் 8ல் 1 பாகமானது 1 யவையாகும். (14½)

ஸ்கந்தமூர்த்தியின் சிரஸ்ஸு 1 அங்குலம், கேசாந்தம் 1 அங்குலம், நேத்திராந்தம் 1 அங்குலம், புடாந்தம் 2 அங்குலம் ஹநுஸீமாந்தம் 3 அங்குலம், கழுத்தின் உயரம் 3 அங்குலம், கழுத்திற்குக்கீழே ஹிருதயாந்தம் 9 அங்குலம், அதற்குக்கீழே நாபியந்தம் 8 அங்குலம், நாபிக்குக்

---

*"ஹிக்காமம்" இத்யாதிஸ்லோகாயம் ஸர்வாதர்ஸபாடயஸூத்ரகாயாம் த்ருஸ்யதே ।

[illegible]
[illegible]
[illegible] ||

[illegible]
[illegible] ||

[illegible]
[illegible] ||௨௦||

[illegible]
[illegible] || ௨௧ ||

[illegible]
[illegible] ||௨௨||

[illegible]
[illegible] |

கீழே மேட்ராந்தம் 7 அங்குலம், துடையின் நீளம் 12 அங்குலம், முழங்காலின் நீளம் 2 அங்குலம், கண்டைக்காலின் நீளம் 12 அங்குலம், பாதத்தின் உயரம் 2 அங்குலம். ஆக உச்சி முதல் பாததலம் வரையில் உயரம் 1, 1, 2, 2, 3, 3, 9, 8, 7, 12, 2, 12, 2 = 64 அங்குலமாகும். பாததலத்தின் நீளம் 10 அங்குலம் மேல்கையின் நீளம் 14 அங்குலம். முன்கையின் நீளம் 10 அங்குலம். உள்ளங்கையின் நீளம் 4 அங்குலம். நடுவிரலின் நீளம் 3 அங்குலம். சுட்டு விரல் அணிவிரல்களின் நீளம் 2½ அங்குலம், சிறு விரல் பெரு விரல்களின் நீளம் 3 அங்குலம்? உள்ளங்கையின் அகலம் 4 அங்குலம். (21).

முன்கை நுனியின் அகலம் 3 அங்குலம், முன்கை அடியின் அகலம் 4 அங்குலம், புஜமூலத்தின் அகலம் 5 அங்குலம்,

கக்ஷயோரந்தரவ்யாஸம் த்ரயோத³ஶாங்கு³லம் ப⁴வேத் ॥ ௨௩ ॥

*வக்ஷாம்ஶம் (ஹாராம்ஶம்) த்³வாத³ஶம் தாரம் மத்⁴யாம்ஶம்
ருத்³ரமிஷ்யதே ।

ஶ்ரோணிஸ்தா²னே து ஹாராம்ஶம் கடிஸ்தா²னே
த்ரயோத³ஶ ॥ ௨௪ ॥

ஊர்வக்³ரவிஸ்தாரம் து வஸ்வம்ஶம் ஜானுதே³ஶாதி³ஸ்ததா² ।
ஷட³ம்ஶம் ஜங்கா⁴விஸ்தாரம் கு³ல்பா²க்³ரம் யுகா³ம்ஶமேவ ச ॥

கு³ணாம்ஶம் நளகாதாரம் ஷட³ம்ஶம் தலவிஸ்த்ருதம் ।
பார்ஷ்ணிவ்யாஸம் கு³ணாம்ஶம் வா ஶேஷம்
யுக்த்யா து கல்பயேத் ॥ ௨௬ ॥

முகத்தின் அகலம் 8½ அங்குலம். கழுத்தின் அகலம் 7 அங்குலம் (?) கழுக்கட்டுகளின் மத்தியிலுள்ள விஸ்தாரம் 13 அங்குலம். *ஹிருதயத்தின் அகலம் 12 (5) அங்குலம். இடுப்பின் அகலம் 11 அங்குலம். ச்ரோணி ஸ்தாந (அடிவயிற்றின்) த்தின் விஸ்தாரம் 12 அங்குலம். இடுப்பின் அகலம் 13 அங்குலம். (24)

அடித்துடையின் அகலம் 8 அங்குலம், முழங்காலின் அகலம் 6 அங்குலம். கணைக்கால் அடியின் அகலம் 4 அங்குலம். அதன் நுனியான நளகையின் அகலம் 3 அங்குலம், பாததலத்தின் விஸ்தாரம் 6 அங்குலம். குதிகாலின் அகலம் 3 அங்குலம். மற்றவைகளை யுக்தியாகக் கல்பித்துக்கொள்ளவேண்டும். (26)

---

*வக்ஷாம்ஶமிதி முத்³ரிதபாட²꞉ ஹாராம்ஶமிதி ஸரஸ்வதீமஹாலயஸ்த²கோஶபாட²꞉ ।

*ஹிருதய வியாஸம் 5 அங்குலம் என்பது அச்சிட்ட புத்தகபாடம். 12 அங்குலம் என்பது ஸரஸ்வதி மஹால் நூலிலுள்ள பாடம்.

கேசாந்தே *நாஸிகோபேதம் கரண்டமகுடாந்விதம் |
உபயோர்ஹஸ்தயோ: புஷ்பம் வாமோ வா வரதோ(அ)த வா ||

கடகம் வாத தத்வஸ்தம் ஸிம்ஹகர்ணமதாபி வா |
தக்ஷிணம் புஷ்பஹஸ்தம் வா கபித்தாம்ரபலம் து வா || உஅ ||

கடிஸூத்ரயுதம் நக்நம் சங்கவீரஸமந்விதம் |
ம்ருதுகேசம் ஸமாயுக்தம் பாலாபரணபூஷிதம் || உகூ ||

ஸ்கந்தம் வா ஸ்திதம் வாத ந்ருத்தம் வா கல்பயேத் க்ரமாத் |
ஆஸீநம்(தே) ஆஸநே பாதௌ து விஷ்டரோபரி
ஸமாபயேத் || ௩0 ||

கேசாந்தத்தில் நாஸிகையுடன் கூடிய? (வாபிகையுடன் கூடிய) கரண்டமகுடமிருக்கவேண்டும். இரண்டு கைகளிலும் புஷ்பங்களை தரித்திருக்கவேண்டும். இடது கையானது, வரதஹஸ்தமாகவுமிருக்கலாம். அந்தக்கையானது, கடகஹஸ்தமாகவோ ஸிம்ஹகர்ணமாகவோ இருப்பதுமாகும். வலது கையானது, புஷ்பஹஸ்தமாகவோ (புஷ்பத்தைத் தரித்தோ) விளாம்பழம் அல்லது மாம்பழம் தரித்தோ இருப்பதாகும். (28)

ஸ்கந்தமூர்த்தியானது, அரைஞாண்கயிறு தரித்து, நக்னமாக (ஆடை அணியாமல்) சங்கவீரம் தரித்திருப்பதாம். மிருதுவான கசமுடையதாம். (கசம் - தலைமயிர்.) குழந்தைகளுக்குரிய ஆபரணங்களணிந்திருக்கவேண்டும். (29)

ஸ்கந்தமூர்த்தியானது, நின்றவடிவமாகவோ, உட்கார்ந்திருக்கும் வடிவமாகவோ, கூத்தாடும் வடிவமாகவோ கற்பிக்கப்படுவதாகும். உட்கார்ந்த வடிவமாக இருந்தால், இரண்டு கால்களும் ஆஸநத்தின்மீது படுக்கையாக கல்பிக்கப்படவேண்டும். நின்றவடிவமாக இருந்தால்,

---

*வாபிகோபேதம் உதி ஸர்வத்ர தீகோஹயப்ராதகாவாட:

ஸ்திதே பாததலே த்வே து ஸமபங்கே ஸ்திதே ததா |
ஆநதே குஞ்சிதாங்கே து யுக்த்யா ஜாந்வோஸ்து தீவ்ரகம் ||
பாதௌ குஞ்சிதௌ கிஞ்சித் கிஞ்சித் நடநே (நர்தநே)
பவேத்வா |
ந்ருத்தம் சேத் ஸவ்யபாதம் ஸ்திதம் பாதம் ப்ரஸாரிதம் ||௩௧||
உத்த்ருதம் வாமபாதம் து பீடோத்ஸேதம் ததோபரி
(யோகமாத்ரகம்) |
ஷடங்குலம் பஞ்சாங்குலம் வா வேதாங்குலமதாபி வா ||௩௨||
வரதம் வாமஹஸ்தம் து ஃபலம் ஸவ்யே ப்ரஸாரயேத் |
அபயம் வாமஹஸ்தம் து ஸவ்யம் ந்ருத்யஸ்ய ப்ரஸாரயேத் ||

*ஹிக்காஸம்ஸ்திதெ ப்ரஸாரி யுக்தா கண்டோபரி ஸோபாதுஸேமேகம் |

இரு பாததலங்களும் ஸமபங்கமாக இருக்கவேண்டும். (குழந்தை கூத்தாடுவதுபோன்ற வடிவமானுல்) இரண்டு கால்களும் வணங்கி இருக்கவேண்டும். இந்த மூர்த்தியின் ஜாநு மத்திய ப்ரதேசத்தை (இரு முழங்கால்களின் மத்தியின் ஒதுக்கத்தை அழகாக இருக்கும்படி) யுக்தியுடன் கல்பித்து கொள்ளவேண்டும். (31)

இரண்டு பாதங்களும் சிறிது வளைந்து நடக்கத்துவங்குவதுபோன்ற தோற்றமுடையவைகளாக இருக்கவேண்டும். நிருத்தமூர்த்தியானுல், வலது கால் ஸ்தித பாதமாகவும் சிறிது வளைந்துமிருக்கவேண்டும். இடது காலானது, பீடமட்டத்திற்குமேலே, 4, 5 அல்லது 6 அங்குலம் தூக்கியிருக்கவேண்டும். (33)

வரதஹஸ்தமான இடது கையில் பழம் இருக்க

---

*ஹிக்காஸம்ஸ்திதம் ஸமாங்குலஸ்த்யுணிபஸோபாதுஸேமேகம் | உதி ஸாஸ்த்ரீஸ்ஸமாயுதாராதுகாவாம: | ஹிக்காஸம்ஸ்திதாங்குலஸ்த்ய உதி வாமேந ஸாவயுதி ஸாதி |

𑌧𑍍𑌯𑌾𑌨𑌂 𑌲𑌂𑌬𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌨𑍃𑌤𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌵𑌦𑌾𑌚𑌰𑍇𑌤𑍍 ।
𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌸𑍍𑌯 𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌂 𑌶𑍃𑌣𑍁 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌾𑌯𑌨𑌮𑍍 ॥௫௫॥

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑌿𑌲𑍍𑌪𑍇 𑌸𑍋𑌮𑌾𑌸𑍍𑌕𑌨𑍍𑌦𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂
𑌨𑌾𑌮 𑌪𑌞𑍍𑌚𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ॥

வேண்டும். வலது கையானது ஸூசீமுத்திரையுடனிருக்க வேண்டும். அல்லது இடது கையில் பழத்தை வைத்து அலங்கரிக்கவேண்டும். (வலது கையை) கண்டமட்டமாகவோ, காதுமட்டமாகவோ வைக்கவேண்டும்.

லம்பஸூத்திரத்தின் மத்திய ஓதுக்கத்தை நடராஜ மூர்த்திக்குக் கூறியதுபோலவே கொள்ளவேண்டும். இவ்விதமாக ஸோமாஸ்கந்தமூர்த்தியின் லக்ஷணம் கூறப் பட்டிருக்கிறது. இனி சந்திரசேகரமூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கேட்பாயாக. (55)

காசியபீய சில்பசாஸ்திரத்தில் ஸோமாஸ்கந்தமூர்த்தி
லக்ஷணத்தைக்கூறும் அறுபத்தைந்தாவது
படலம் முற்றும்.

|| அத ஷட்ஷஷ்டிதம꞉ படல꞉ ||



சந்த்ரஶேகர லக்ஷணம் ||

அத வக்ஷ்யே விஶேஷேண சந்த்ரஶேகரலக்ஷணம் |
கேவலம் கௌரீஸஹிதாலிங்கநம் த்ரிவிதா க்ரியா || 1 ||

கேவலம் கௌரீரஹிதம் ஸஹிதம் கௌரீஸம்யுதம் |
ஆலிங்கநம் த்வயோரேகஹஸ்தேந தேவீம் தேவ பராம்ருஶத் || 2 ||

ஏததாலிங்கநாவஸ்தா தேவம் த்ரியம் ஸம்ஹ்ருதாம் |
கேவலம் ஸமபாதம் து ஸ்தாநகம் ஸஹிதம் பவேத் || 3 ||

*ஸமபாதம் வா ஹ்யாலிங்கநம் சந்த்ரஶேகரம் |

அறுபத்தாறுவது படலம்
சந்திரசேகரலக்ஷணம்

இனி சந்திரசேகர மூர்த்தியின் லக்ஷணத்தை விசேஷித்துக்கூறுகிறேன். சந்திரசேகர மூர்த்தியானது, கேவல மூர்த்தி என்றும், கௌரீஸஹித மூர்த்தி என்றும், ஆலிங்கந மூர்த்தி என்றும், 3 விதமாகும். (1)

கௌரீதேவி இல்லாமல் தனித்திருக்கும் மூர்த்திக்கு கேவலமூர்த்தி என்று பெயர். கௌரீதேவியுடனிருக்கும் மூர்த்திக்கு, கௌரீஸஹிதம் என்று பெயர். கௌரீதேவி, பரமேசுவரன், இருவரும் ஒருவருக்கொருவர் ஆலிங்கநம் செய்துகொண்டிருக்கும் மூர்த்திக்கு, ஆலிங்கந மூர்த்தி என்றுபெயர். இவ்விதமாக, 3 விதமான மூர்த்திகளின் லக்ஷணங்களையும் ஊஹித்து அறிந்து கொள்ளவேண்டும்.

கேவலமூர்த்தியானது, ஸமபாதமாக இருப்பதாகும். உமாஸஹித மூர்த்தியானது ஸ்தாநகமாக இருப்பதாகும்.

---

*ஸமபாதம் த்ரிபாதம் ஸ்தாநபாதம் சந்த்ரஶேகரம் | இதி கீர்த்திதவாஸ்தகவாக்ய꞉ |

†கேவலம் முக்திதம் ப்ரோக்தம் ஸஹிதம் த்வபயப்ரதம் ॥௪॥

தேஷாமாதௌ ஸமபாதம் து ஸ்தானகம் ‡ஸஹிதம் ததா ।
பிம்பமானோதயம் ஸர்வம் பூர்வமேவ ப்ரகீர்திதம் ॥௫॥

லம்பமானோபமானம் ச இதானீம் வக்ஷ்யதே க்ரமாத் ।
ப்ரலம்பபலகாயாமம் அங்குலானி அஷ்டாத்ரிகம் ॥ ௬ ॥

அஷ்டாதசாங்குலம் தாரம் ஸார்தத்வயாங்குலம் கனம் ।
அத ஊர்த்வஸமாயாமம் பாதோச்சம் ப்ரதிமோதயம்(யாத்) ॥

ஷடங்குலஸமாயாமம் ஸர்வயேத் ஸமுந்நதே ।

ஆலிங்கிதமான சந்திரசேகரமூர்த்தியானது, ஸமபங்க லக்ஷணம் அல்லது அதிபங்க லக்ஷணமுடையதாக இருக்க வேண்டும்.

கேவல மூர்த்தியானது, முக்தியைக் கொடுப்பதாகும். உமாஸஹித மூர்த்தியானது, அபயப்பிரதமாகும். அவைகளில் முதலில் கூறப்பட்ட கேவலமூர்த்தியானது ஸமபாதமாக இருப்பதாகும். உமாஸஹிதமூர்த்தியானது ஸ்தானக மூர்த்தியாகும். பிம்பத்தின் மானம் உதயம் யாவும் முன்னமே (ஸுகாஸமூர்த்தி லக்ஷணத்தில்) கூறப்பட்டிருக்கிறது. (5)

இப்பொழுது லம்பமானம் உபமானம் இவைகளை முறையே கூறுகிறேன். பிரலம்பபலகையின் உயரமானது 48 அங்குலமாகும். அதன் அகலமானது 18 அங்குலமாகும். அதன் கனமானது $2\frac{1}{2}$ அங்குலமாகும். அதற்கு 4 கால்கள் இருக்கவேண்டும். அதன் உயரமானது பிரதிமையின் உயரத்தைக்காட்டிலும் $\frac{1}{4}$ பங்கு அதிகமாக இருக்கவேண்

---

†கேவலம் முக்திதம் இதி பாடோ ஸாத்ய: ।

‡ஸ்தானம் ஸம்ப்ரத । இதி ஸர்வத்ர ஸஹாயம் ப்ரதிமா பாட: ।

ஸமஸூத்ரம் விநிஶ்சித்ய ப்ரலம்பபலகோபரி ||அ||

பூர்வே பஶ்சே ச பார்ஶ்வே ச மாநஸூத்ரம்
ப்ரலம்பயேத் |

*மத்யே வாரம் கல்ப்யம் ஸூத்ராக்ரம் லம்பயேத்தத꞉ ||

†தத்ஸூத்ரம் து குணம் பிம்பம் காரயேத் த்விஜ
ஸத்தம |

பூர்வே ச பார்ஶ்வயேத்(பார்ஶ்வயோ꞉)ப்ருஷ்டே காயமத்யே
ச லம்பயேத் || ௯ ||

பஞ்சாநி பஞ்சஸூத்ராணி ப்ருஷ்ட(பஞ்ச)ஸூத்ர
ஊர்த்வாதஸ்ததஃ |

டும். அதை 27 அங்குலம் அதிகமாக இருக்கும்படிசெய்து, ஸமபூமியில் ஸ்தாபிக்கவேண்டும்.

அதன்பிறகு, பிரலம்ப பலகையின் மேலே ஸமஸூத்திரத்தை நிச்சயிக்கவேண்டும், பிறகு, முன்பக்கம், பின்பக்கம், வலது இடது பக்கங்கள், இந்த 4 இடங்களிலும் மானஸூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும் பிரலம்ப பலகத்தின் நடுவில் (கீழே கூறப்பட்டவிடங்களில்) துவாரத்தைக்கல்பிக்கவேண்டும். அந்த துவாரத்தில் ஸூத்திரத்தின் ஒரு தலைப்பைத் தொங்கவிடவேண்டும். அந்த ஸூத்திரமானது பிம்பத்தை குணமாகச்செய்யும். (அந்த லம்பஸூத்திரங்களைக்கொண்டு பிம்பத்தை குணவத்தாக கல்பித்துக்கொள்ளவேண்டும் என்பது பொருள்.)

முன்பக்கம், பின்பக்கம், வலது பக்கம் இடது பக்கம், சரீரமத்தியம், ஆகிய 5 இடங்களிலும் 5 ஸூத்திரங்களைத்

* தந்மத்யே வாரம் இதி வாக்யாந்தரே தீர்கஹாரயஸ்தாதகா
வா꞉ |

† தத்ஸூத்ராத் குணபிம்பம் து இதி ச |

कक्षामध्ये मुखमध्ये च द्वे द्वे सूत्रे
प्रलम्बयेत् ॥ १२ ॥

नवं हि नवसूत्राढ्यं स्थानकं आसनं तथा ।
मकुटमध्ये मध्ये चैव ललाटस्य तु मध्यमे ॥ १३ ॥

नासाग्रमध्ये चैव हनोर्मध्ये तथैव च ।
हिक्कामध्ये च हृदयमध्ये नाभेश्च मध्यमे ॥ १४ ॥

लिङ्गमध्ये च मध्ये तु पादयोस्तु तलाङ्गके ।
*प्रलम्बयेत् पूर्वसूत्रं स्यादथ वक्ष्यामितोऽपरे ॥

मकुटमध्योर्ध्वं कृकाट्याश्चैव मध्यमे ।

தொங்கவிடவேண்டும். இவ்வைந்து ஸூத்திரங்களுக்கும் பஞ்சஸூத்திரம் என்று பெயர் (10½)

கக்ஷமத்தியம், முகமத்தியம், இந்த இடங்களில் 2, 2 ஸூத்திரங்களைத் தொங்கவிடவேண்டும். இவ்விதமாக (கீழே கூறப்பட்ட ஸூத்திரங்கள் 5, இங்கு கூறப்பட்ட ஸூத்திரங்கள் 4, ஆக 5+4=9.) ஒன்பது ஸூத்திரங்களுடன் கூடியது, ஸ்தாநகமும், ஆஸநமுமாகும். (ஸ்தாநக மூர்த்தியையும், ஆஸநமூர்த்தியையும் இந்த 9 ஸூத்திரங்களையும் வைத்துக்கொண்டு அளவிட்டுப்பார்க்கவேண்டும் என்பது பொருள்)

சிரோமத்தியம், லலாடமத்தியம், நாஸாக்ரமத்தியம், ஹநுமத்தியம், கண்டமத்தியம், ஹிருதயமத்தியம், நாபிமத்தியம், லிங்க மத்தியம், பாதமத்தியம், (பாத) தலமத்தியம், இந்தவிடங்களில் தொங்கும் ஸூத்திரமானது, பூர்வ ஸூத்திரமாகும். பின் பக்கத்திலிருக்கும் ஸூத்திரத்தை இனிக்கூறுகிறேன். (14)

ஹே பிராம்ஹணனே! பின்பக்கத்தில் மகுடமத்தியம்,

*लम्बयेद्वं इति [illegible] ।

ககுந்மத்யாதிமத்யாந் ஸ்பிக்பிண்டாந்தரகே ததா ॥

ஊருஜாநுஜங்கபார்ஷ்ணி மத்யகே ததா ।
ஏவம் மத்யாநுபாதம் ஸூத்ரம் ப்ருஷ்டஸூத்ரம்
(பரஸூத்ர)மேவ ஹி ॥ ௧௬ ॥

பார்ச்வயோ: கர்ணபாஹ்யே ச ஸ்கந்தபாஹ்யே ததைவ ச
(பாஹ்யாந்தரே ததா) ।
*பாஹ்வந்தர மத்யாநுபாத மணிபந்தே(பாஹ்யே) து
லம்பயேத் ॥ ௧௭ ॥

தேஹமத்யகதாந்யேவ பஞ்சஸூத்ராணி கல்பயேத் ।

நடுக்கழுத்து, (பிடரியின் மத்தியம்) கழுத்தின் (அடிக் குத்தின்) மத்தியம், அதிலிருந்து முதுகின் மத்தியம், இரண்டு ஸ்பிக்பிண்டங்களின் (பிருஷ்ட பாகங்களின்) நடு, துடை, முழங்கால், கண்டைக்கால், குதிகால் இவைகளின் மத்தியம், இந்த இடங்களில் ஸூத்திரம் தொங்கவேண்டும். இந்த ஸூத்திரத்திற்கு பிருஷ்ட ஸூத்திரம் என்றும் பர ஸூத்திரம் என்றும் பெயர். (16)

இருபக்கங்களிலும் காதுகளின் வெளிப்பக்கம், நடுக் கழுத்து (இங்கு கழுத்து என்பதற்கு தோள்ப்பட்டை என்று பொருள் கொள்ளவேண்டும்.) (அல்லது கழுத்தின் வெளிப் பக்கமாகிய தோள்ப்பட்டையின் மத்தியம்) பாஹு மத்தியம், (கைகள் விளாப்பக்கங்கள் இவைகளின் மத்தியம்) கால் மணிக்கட்டின் நடு(வெளிப்பக்கம்) இவைகளில் ஸூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். (இதற்கு பாஹு வந்தரஸூத்திரம் என்றாவது, பாஹுபார்சுவ மத்திய ஸூத்திரம் என்றாவது பெயர் கொள்ளவேண்டும்.)

இங்கு கூறப்படும் 5 ஸூத்திரங்களையும் தேஹத்தின் நடுவில் செல்லுகிறவைகளாகவே கல்பித்துக்கொள்ள வேண்டும்.

---

*பார்ச்வே பாஹ்வந்தரே சைவ இதி பாடாந்தரம் த்ருச்யதே ।

𑌶𑍍𑌰𑍋𑌤𑍍𑌰𑌾𑌭𑍍𑌯𑌨𑍍𑌤𑌰𑌗𑌤𑌂 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑍍𑌤𑌨𑌵𑍃𑌨𑍍𑌤𑌾𑌵𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ॥

*𑌪𑌾𑌦𑌮𑌧𑍍𑌯𑍇 𑌊𑌰𑍁𑌮𑌧𑍍𑌯𑍇 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ।
§𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌶𑍀𑌰𑍍𑌷𑌮𑌧𑍍𑌯𑌂 𑌸𑍍𑌮𑍃𑌤𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௧௯ ॥

𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌶𑍀𑌰𑍍𑌷𑌮𑌧𑍍𑌯𑌂 𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌚𑍍𑌯𑌤𑍇 ।

(மத்திய ஸூத்திரம் 1 கர்ண பாஹ்ப ஸூத்திரம் காதின் வெளிப்பக்கத்திய ஸூத்திரம் 2, கர்ணாப்பியந்தர ஸூத்திரம், காதின் உள்ப்பக்கத்திய ஸூத்திரம் 2. ஆக 5 ஸூத்திரங்களும், சரீரமத்தியில் செல்லும் 5 ஸூத்திரங்களென்று கூறப்பட்டிருக்கின்றன)

காதின் உள்ப்பக்கத்தில் தொங்கும் ஸூத்திரமானது, மூலைக்காம்பின் நடு *துடை, பாதம் இவைகளின் மத்தியம், இந்த இடங்களில் (சரீரத்தின் நடுவில்) தொங்கும் ஸூத்திரமாகும். (18½)

பூர்வஸூத்திரத்திலிருந்து உச்சியின் நடுவானது 12 அங்குலமாகும். பூர்வஸூத்திரத்திலிருந்து தலையின் முன்

---

*𑌪𑌾𑌦𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌮𑌧𑍍𑌯𑌂 𑌤𑌥𑍈𑌵 𑌤𑍁 𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ।
𑌕𑌕𑍍𑌷𑌮𑌧𑍍𑌯𑍇 𑌕𑌟𑌿𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌮𑌧𑍍𑌯𑍇 𑌚𑍈𑌵 𑌤𑍁 𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ॥ 𑌇𑌤𑌿 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑌹𑌾𑌲𑌯𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌪𑌾𑌠𑌃 ।

𑌕𑌕𑍍𑌷𑌮𑌧𑍍𑌯𑌕𑌟𑌿𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌪𑌾𑌦𑌮𑌧𑍍𑌯𑍇 𑌪𑍍𑌰𑌲𑌮𑍍𑌬𑌯𑍇𑌤𑍍 ।
𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑍇𑌨 𑌭𑌵𑌿𑌤𑌵𑍍𑌯𑌮𑌿𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿 ।

§𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌶𑍀𑌰𑍍𑌷𑌮𑌧𑍍𑌯𑌂 𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌃 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 ।

*ஸரஸ்வதி மஹால் நூலில் கக்ஷமத்திய பார்சுவம், கடிமத்திய பார்சுவம், பாதமத்தியம் இவைகளில் சரீரமத்தியில் தொங்கவிடவேண்டும் என்று பொருள்கொண்ட சுலோகம் இருக்கிறது,

[illegible] ||

[illegible]
[illegible] ।

[illegible]
[illegible] ||

[illegible] ।

[illegible] ||

[illegible]
[illegible] ।

[illegible]
[illegible] ||

[illegible] ।

பக்கம் மத்தியம் வரையில் ஒதுக்கம் 6 அங்குலமாகும். பூர்வஸூத்திரத்திலிருந்து நடு நெற்றிவரையில் ஒதுக்கம் 2 அங்குலமாகும். (20)

பிருஷ்டஸூத்திரத்திலிருந்து பின் மண்டை வரையில் ஒதுக்கம் 3½ அங்குலமாகும். (20½)

பூர்வஸூத்திரத்திலிருந்து ஹநுவந்தமானது, (முக வாய்க்கட்டை வரையில் ஒதுக்கம்) 2½ அங்குலமாகும். பின்பக்கம் கழுத்து நரம்பிலிருந்து (பிடரியிலிருந்து) பிருஷ்டஸூத்திரத்தின் ஒதுக்கம் 1⅞ அங்குலமாகும் (?) பூர்வஸூத்திரத்திலிருந்து கழுத்துவரையில் ஒதுக்கம் 6 அங்குலமாகும். (பின்பக்கத்தில்) தோள்ப்பட்டை நடுவிலிருந்து (கழுத்தின் கீழ்க்குத்திலிருந்து) பிருஷ்டஸூத்திரம் வரையில் ஒதுக்கம் 16 யவையாகும் (?) மார்பிலிருந்து பூர்வ ஸூத்திராந்தமான ஒதுக்கம் 2 (3) அங்குலமாகும். ககுத் மத்தியிலிருந்து (கழுத்தின் கீழ்க்குத்திலிருந்து)

உயெ்யாதரம் ஹ்யஸெ(ஷ்ஹஸெ)ஜவாவ-ஸோூத்ரஂஸெவ
தஜ்ஸமஂ வரெ ॥ ௨௪ ॥

வஂஶஹிஜாத் வரஂ ஸோூத்ரஂ வாதொநாஷாய-ச(ஂஶ)கஂ
வரஂ(உதஂ) ।
வுூர்வஸோூத்ராஞாஹிஸோூத்ராஞ(உயெ்யதாஷ்ய)
ஞரஂ ஸாய-ொதுகழ ॥ ௨௫ ॥

நாஹிஸோூத்ரஸமெ வுூஷெ ஸாய-வக்ஷாஂமாஞூ
ஸெவெஜ் ।
வுூர்வஸோூத்ராநூஜவுூஉஷூராஞஂ மாணாஂமாஷூமாஷா
ஸுூதழ ॥ ௨௬ ॥

தஜ்ஸமெ க்ஷவரெஸோூத்ராநஂதரஂ தா ஷிரொதுகழ ।
ஊரூமயெ்ய தா வாஸதொ ஜாநுமயெ்ய தயெவ அ ॥

ஜஂவா உயெ்ய அ நஊகா உயெ்ய ஸெவ வாரொமதழ ।

பிருஷ்டஸூத்திரம் வரையில் ஒதுக்கம் 8 அங்குலமாகும். பூர்வஸூத்திரமானது உதர மத்தியத்தைத் தொட்டிருக்க வேண்டும். உதரமத்தியத்திற்கு ஸமமான பின்பக்கத்தில், முதுகுத்தண்டிலிருந்து பிருஷ்டஸூத்திரத்தின் ஒதுக்கம் 8½ அங்குலமாகும். பூர்வஸூத்திரத்திலிருந்து நாபிமத்தியம் வரையில் ஒதுக்கம் 1½ அங்குலமாகும். பின்பக்கத்தில் நாபிக்கு ஸமமானவிடத்தில் (பிருஷ்ட ஸூத்திராந்தமாக ஒதுக்கம்) 2½ அங்குலமாகும். பூர்வஸூத்திரத்திலிருந்து மேட்ரமூலம் வரையில் ஒதுக்கம் 3 அங்குலம் கூறப்பட்டிருக்கிறது. பின் பக்கத்தில் அதற்கு ஸமமான விடத்தில் பிருஷ்டஸூத்திரம் வரையில் ஒதுக்கம் 2 அங்குலமாகும். (26½)

புரஸ்ஸூத்திரமானது, முன்பக்கத்தில், ஊருமத்தியம், ஜாநுமத்தியம், ஜங்காமத்தியம், நளகாமத்தியம், இந்த

𑌤𑌿𑌰𑍍𑌯𑌕𑍍 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌸𑌂𑌕𑌲𑍍𑌪𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯(𑌆)𑌜𑍍𑌞𑌾𑌨𑌂 𑌤𑍁
𑌪𑍍𑌰𑌦𑍀𑌯𑌤𑍇 || ௨௮ ||

𑌤𑌤𑍍𑌤𑌤𑍍𑌸𑍍𑌥𑌾𑌨𑍇 𑌪𑌶𑍍𑌚𑍇 𑌚𑍈𑌵 𑌤𑌿𑌰𑍍𑌯𑌕𑍍 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂
𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 |
𑌊𑌰𑍁𑌮𑌧𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑍁(𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁) *𑌪𑍂𑌰𑍍𑌵
𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑍇 || ௨௯ ||

𑌤𑌤𑍍𑌰𑍈𑌵𑌾𑌪𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 ‡𑌷𑌡𑍍𑌵𑌿𑌂𑌶𑌤𑌿 𑌯𑌵𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 |
𑌜𑌾𑌨𑍁𑌮𑌧𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵
𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌷𑌡𑌙𑍍𑌗𑍁𑌲𑍇 || ௩௦ ||

விடங்களில் செல்லுவதாகும். இந்தவிடங்களில் குறுக்காக ஸூத்திரங்களைக் கல்பித்துக்கொண்டு, மத்தியத்தைக் கணக்கிடவேண்டும். (28)

அந்த அந்தவிடங்களில், பின்பக்கத்திலும், குறுக்காகவும், ஸூத்திரங்களைக் கல்பித்துக்கொள்ளவேண்டும்; ஊரு மத்தியாங்க ஸூத்திரமானது (ஊருமத்தியில் குறுக்காக இருக்கும் ஸூத்திரமானது) பூர்வ ஸூத்திரத்திலிருந்து 2 அங்குலத்திலிருப்பதாகும். (29)

அதே இடத்தில் அபரஸூத்திராந்தமானது (அதே போல பின்பக்கத்தில் ஊருமத்தியத்திலுள்ள குறுக்கு ஸூத்திரத்திலிருந்து பரஸூத்திரம் வரையில் ஒதுக்கம்) 26 யவையாகும். ஜானுமத்தியத்திலுள்ள குறுக்கு ஸூத்திரமானது, பூர்வஸூத்திரத்திலிருந்து 6 அங்குலமாகும். அதே

---

*𑌦𑍍𑌵𑍍𑌯𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌤𑌃 | 𑌇𑌤𑌿 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑌹𑌾𑌲𑌯𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌪𑌾𑌠𑌃 |

‡𑌯𑌵𑍋𑌨𑌾𑌂 𑌦𑌶𑌾𑌧𑍍𑌯𑍁𑌤𑍇 | 𑌇𑌤𑌿 𑌸𑌰𑌸𑍍𑌵𑌤𑍀𑌮𑌹𑌾𑌲𑌯𑌪𑍁𑌸𑍍𑌤𑌕𑌪𑌾𑌠𑌃 |

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵𑌾𑌪𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌪𑌾𑌦𑍋𑌨𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌜𑌙𑍍𑌘𑌾𑌮𑌧𑍍𑌯𑌂 𑌤𑍁 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 𑌵𑌸𑍍𑌵𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍁𑌦𑌾
𑌹𑍃𑌤𑌮𑍍 ॥ ௩௧ ॥

𑌤𑌸𑍍𑌮𑌿𑌨𑍍𑌨𑍇𑌵 𑌪𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌷𑌡𑍍𑌵𑌿𑌂𑌶𑌦𑍍𑌯𑌵𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌨𑌳𑌕𑌾𑌮𑌧𑍍𑌯𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌵𑌸𑍍𑌵𑌙𑍍𑌗𑍁𑌲𑌂
𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௩௨ ॥

𑌨𑌳𑌕𑌾𑌪𑌰𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌪𑌾𑌦𑍋𑌨𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌸𑌾𑌰𑍍𑌧𑍈𑌕𑌮𑌙𑍍𑌗𑍁𑌷𑍍𑌠𑌯𑍋𑌰𑌗𑍍𑌰𑌂 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌦𑍍𑌵𑌿𑌶𑍇𑌷𑌤𑌃 ॥

𑌤𑌤𑍍𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑌿𑌪𑌰𑍍𑌯𑌨𑍍𑌤𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧𑍈𑌕𑌾𑌂𑌶𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑍇 ।
𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 𑌕𑌾𑌯𑌮𑌧𑍍𑌯𑌸𑍍𑌯 𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑌾𑌰𑍍𑌧
𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௩௪ ॥

𑌤𑌤𑍍𑌕𑌾𑌯𑌮𑌧𑍍𑌯𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍𑌤𑍁 𑌶𑌿𑌰𑌃𑌪𑍃𑌷𑍍𑌠𑌂 𑌯𑍁𑌗𑌾𑌂𑌶
(𑌸𑌾𑌰𑍍𑌧)𑌕𑌮𑍍 ।

இடத்தில் பின்பக்கம் திர்யக் ஸூத்திரத்திலிருந்து, பர ஸூத்திரமானது 4¾ அங்குலமாகும். ஜங்காமத்திய (திர்யக்ஸூத்திர)மானது பூர்வ ஸூத்திரத்திலிருந்து 8 அங்குலமாகும். அதே இடத்தில் பரஸூத்திராந்தமானது 26 யவையாகும். பூர்வஸூத்திரத்திலிருந்து நளகாமத்திய (திர்யக் ஸூத்திர)மானது 8½ அங்குலமாகும். (32)

நளகையிலிருந்து (நளகையின் திர்யக் ஸூத்திரத்தி லிருந்து) பரஸூத்திரமானது 4¾ அங்குலமாகும். பூர்வ ஸூத்திரத்திலிருந்து, பெருவிரல் நுனியானது விசேஷித்து 21½ அங்குலமாகும். அந்த ஸூத்திரத்திலிருந்து (அந்த விடத்திலிருந்து) குதிகால் வரையில் 14⅓ அங்குலமாகும். பூர்வஸூத்திரத்திலிருந்து, காயமத்திய ஸூத்திரமானது 9½ அங்குலமாகும்.

அந்த காயமத்திய ஸூத்திரத்திலிருந்து சிரஸ்ஸின் பின்பாகமானது 4 (4½) அங்குலமாகும். அந்த காயு

ग्रीवायां मध्यसूत्रात्तु सार्धपञ्चाङ्गुलार्धकम् ॥

उरसोर्मध्यपृष्ठे तु सार्धषडङ्गुलं भवेत् ।

सूत्र(त्रात्)मुदरस्य पृष्ठे सार्धवेदाङ्गुलं भवेत् ॥

नाभिप्रदे(दे)शे पृष्ठे तु सार्धरसाङ्गुलं भवेत् ।

कटिपिण्डं षडंशं स्यात् सार्धाष्टांशं स्फिगग्रकम् ॥ ३७ ॥

ऊर्वोः(र्व्योः) पृष्ठं वेदा जानुपृष्ठं तथैव च ।

ऊरुमध्ये गुणांशं तु नलका द्व्यंशं भवेत् ॥ ३८ ॥

गुल्फोपरि [illegible] बहि [illegible] ।

* [illegible] ॥ ३९ ॥

மத்திய ஸூத்திரத்திலிருந்து (பின்பக்கத்தில்) கழுத்தானது (கழுத்தின் கீழ்க்குத்து) 5½ அங்குலமாகும். நடுமார்பிலிருந்து பின்பக்கமானது 6½ அங்குலமாகும். (மத்திய) ஸூத்திரத்திலிருந்து, வயிற்றின் பின்பாகமானது 4½ அங்குலமாகும். நாபிபிரதேசத்தில் பின்பாகமானது 6½ அங்குலமாகும். இடுப்பின் ஓதுக்கம் 6 அங்குலமாகும். ஸ்பிக் பிண்டத்தின் அக்ரபாகமானது 8½ அங்குலமாகும். (37)

துடையில் பின்பாகமானது 4 அங்குலமாகும். முழங்காலின் பின்பக்கமும் அதேபோலே 4 அங்குலமாகும். துடையின் நடுவிலிருந்து 3 அங்குலமாகும். நளகை 2 அங்குலமாகும். குல்பபிரதேசத்தில் (கணுக்கால் ஸந்திகளின்

*[illegible] ।
[illegible] ।

பார்ச்வஸூத்ராதக்ரதோ பாஹுபர்யந்தம் சதுர
ங்குலம் |

தத்ஸூத்ராத் பச்சாத் பாஹுபர்யந்தம் வஸ்வங்குலம் ||

பூர்வாபரகரௌ மத்யே கூர்பராந்தம் து (ச)
யுக்தகௌ |

தத்கரௌ பாஹ்யவிஸ்ருதௌ சதுரங்குலமிஷ்யதே ||௪௧||

கர்த்தரீஹஸ்தயுக்தாக்ரௌ ஹிக்காஸூத்ரஸமம் பவேத் |

*மத்யாங்குல்யக்ரயோ: ஹஸ்தமத்யாங்குலம் கண்டஸமம் பவேத் ||

அபயம் தக்ஷிணம் ஹஸ்தம் வாமம் வரதஹஸ்தகம் |

முண்டுகளிலிருந்து) பின்பக்கத்தின் கனபாகமானது 4 அங்குலமாகும். (38½)

பார்சுவஸூத்திரங்கள் இரண்டும் மத்திய ஸம ஸூத்திரத்திலிருப்பவைகளாகும். பார்சுவ ஸூத்திரத்திற்கு முன்பக்கத்தில் பாஹுபர்யந்தமானது (புஜாந்தமானது) 4 அங்குலமாகும். அந்த ஸூத்திரத்திலிருந்து, பாஹுபர்யந்தமானது, பின்பக்கத்தில் 8 அங்குலமாகும் (?) பூர்வ கரம், பரகரம் இவைகள் (சரீர) மத்தியில் முழங்கை முண்டு வரையில் சேர்ந்திருப்பவைகளாகும். அவ்விரு கைகளும் 4 அங்குலம் வெளிப்பக்கத்தில் விரிந்திருப்பவைகளாகும். (41)

கர்த்தரீ முத்திரையுடன் கூடிய பரஹஸ்தங்களின் நுனியானது, ஹிக்காஸூத்திர ஸமமாக இருக்கவேண்டும். அந்த ஹஸ்தங்களின் நடுவிரலானது கழுத்துமட்டமாக இருக்கவேண்டும். (42)

வலதுகை அபயஹஸ்தமாகவும், இடதுகை வரதஹஸ்த

---

* மத்யாங்குல்யக்ரயோ: ஹிக்காஸூத்ரஸமம் பவேத் |
இதி பாடாந்தரம் |

ப்ராக்ஸூத்ராதபயே ஹஸ்தே மத்யம் பஞ்சதசாங்குலம் ||

வரதம் வாமஹஸ்தம் து அதோமுகம் ப்ரகல்பயேத் |
தலமூலம் கடிம் ப்ராப்தா மேட்ராக்ரம் தத்கராக்ரகம் ||

மத்யாங்குல்யக்ராரம்ப்ய ஊரு நிம்நம் யுகாங்குலம் |
‡ மத்யதலம் து வரதம் ப்ருஷ்டம் நாபிஸமோந்நதம் ||௪௫||

வரதம் ஹஸ்ததலமத்யே(மத்யம்) பூர்வஸூத்ரம்
த(த்ராங்க)ஷாங்குலம் |
கர்த்தரீமணிபந்தம்(பந்தாத்) து பாஹ்யாபாஹ்ய(ம்)
அர்கம் பவேத் || ௪௬ ||

அதவா ருத்ரமானம் து தசாங்குலமதாபி வா |

மாகவும் இருக்கவேண்டும். பூர்வஸூத்திரத்திலிருந்து அபயஹஸ்தத்தின் மத்தியமானது 15 அங்குலமாகும். (43)

வரதஹஸ்தமான இடதுகையானது, அதோமுகமாகக் கல்பிக்கப்பட வேண்டும். கைத்தலத்தின் அடிப்பக்கமானது, இடுப்பு மட்டமாக இருக்கவேண்டும். கராக்ரமானது (நுனிக்கையானது) மேட்ராக்கிர ஸமமாக இருக்கவேண்டும். (அந்தக்கையின்) நடுவிரல் நுனியிலிருந்து துடைவரையில் ஒதுக்கம் 4 அங்குலமாகும். வரதஹஸ்தத்தலத்தின் (இடது உள்ளங்கையின்) மேல்பாதியின் பின்பக்கமானது, நாபிமட்டமாக தூக்கி இருக்கவேண்டும். (45)

வரதஹஸ்தத்தின் உள்ளங்கை நடுவானது. பூர்வஸூத்திரத்திலிருந்து 16 அங்குலமாகும். கர்த்தரீஹஸ்தத்தின் மணிக்கட்டிலிருந்து, பாஹ்யாபாஹ்யமானது (கையின் வெளிப்பக்கமானது) 12 அங்குலமாகும். அல்லது 11 அங்

---

‡ மத்யம் தலாக்ரம் வரதே ப்ருஷ்டம் நாபி வாமேந ஹாவ்யயிதி பாட: |

கூர்பராந் மத்யஸூத்ராந்தம் நீவ்ரம் ஸப்த
தசாங்குலம் || ௪௭ ||

*அஷ்டாதசாங்குலம் வாபி நவகோநவிம்ச நவ வா |
ஜங்கயோரேகோநவிம்சத்யங்குலம் ஆயோஜிதம்
(யாம்சகம்) || ௪௮ ||

அங்க்ரயோர(ஸ்யாபஸ்ய)ஞ்சம் சைவ த்வ்யங்குலாதா
ஸ்ம்ருதம் |
ஊரோர்மத்யாஜாநுயுக்மம் விம்சாத்யம் வா உதாஹ்ருதம் ||

ஜாந்வந்தரம் சதுர்மாத்ரம் ஜங்கயோ: பஞ்சமாத்ரகம் |
நளகாந்தம் ஷடம்சம் து வேதாம்சம் குல்பயோ
ஸ்ததைவ || ௫௦ ||

பாதாங்குஷ்டத்வயோரந்தம் வ்ய ச ந்தரம் வஸுமாத்ரகம் |

குலமாவது, 10 அங்குலமாவது இருப்பதாகும். கூர்பரத்தி லிருந்து (முழங்கையிலிருந்து) மத்தியஸூத்திரம் வரையில் ஓதுக்கம் 17, 18, அல்லது 19 அங்குலமாகும். ஜங்கையின் (கண்டைக்காலின்) ஓதுக்கம் 19 அங்குலமாகும். அடித் துடை (யின் ஓதுக்கம்) 2 அங்குலமாகும். குல்பத்தின் (கணுக்கால் ஸந்தியின்) ஓதுக்கம் 1 அங்குலமாகும். ஊரு மத்தியத்தின் (மத்தியஸூத்திரம், ஜாநுவந்தயான தடை, இவைகளின்) ஓதுக்கம் 20. முதலான அங்குலமுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது. (49)

ஜாங்வந்தரம் (ஜாநு—முழங்கால், அந்தரம்—மத்திய பாகம்) 4 அங்குலமாகும். ஜங்காந்தரம் 5 அங்குலமாகும். நளகாந்தரம் 6 அங்குலமாகும். குல்பாந்தரம் 4 அங்குலமாகும். பாதாங்குஷ்டத்வயாந்தரம் (பாதாங்குஷ்டத்வயாந்தரத்தின்) ஓதுக்கம் 8 அங்குலமாகும். (50½)

---

*அஷ்டாதசாங்குலம் உத்யாதிகம் ஶ்லோகார்த்தம், ஸர்வத்ர கோசபுஸ்தகாதர்சப்ரதேஷு காபி வா: |

ராஜஸம் பாவஸம்யுக்தம் கல்பயேத்து த்விஜோத்தம ॥ ௫௧ ॥

கர்தரீஹஸ்தஸம்யுக்தௌ பரஶும் தக்ஷிணே கரே ।

ஹரிணீ வாமஹஸ்தே து பரஶும் குர்யாத் பஹிர்முகம் ॥

*ஹரிணீபார்ஶ்வம்ருகம் வா ஸ்யாதந்தர்முகமேவ ச ।

ஜடாமகுடஸம்யுக்தம் தக்ஷிணே சந்த்ரமேவ து ॥ ௫௩ ॥

வாமே து சந்த்ரமேவம் வா பாலசந்த்ரஸ்ய வா ஹி ।

த்ரிநேத்ரம் ஸௌம்யவக்த்ரம் ச ஸர்வாபரணபூஷிதம் ॥

பீதாம்பரதரம் தேவம் வஸ்த்ராக்ரம் நளகாந்தகம் ।

உபயோ: பார்ஶ்வயோரேவமம்பரம் தாரயேத்ருடம் ॥ ௫௫ ॥

ஓ அந்தணனே! இந்த மூர்த்தியை நேராக நிமிர்ந்து ராஜஸஸ்வபாவமுடையதாகக் கல்பிக்கவேண்டும். கர்த்தரீ முத்திரையுடன்கூடிய பரஹஸ்தங்களில், வலதுகையில் மழுவும், இடது கையில் பெண் மானும் கல்பிக்கப்பட வேண்டும். மழு, மான் இரண்டும் வெளிநோக்காகவாவது உள்நோக்காகவாவது இருப்பதாகும்.

சடைமுடியணிந்து இருக்கவேண்டும். அதன் வலத் பக்கத்தில் சந்திரகலையை அணிந்திருக்கவேண்ம். அல்லது இடது பக்கத்தில் இளம்பிறைச்சந்திரனையணிந்திருப்பது மாகும்.

இந்தமூர்த்தியானது பீதாம்பரம் தரித்து, ஸகலவித மான ஆபரணங்களையுமணிந்து, அழகான முகமும், மூன்று கண்களுமுடையதாகும். ஆடையின் தலப்பானது நளகாந்தமாக இருக்கவேண்டும். இரண்டு பக்கங்களிலும் வஸ்திரமானது (மேலே அணிந்துகொள்ளுவது) துடை

---

*ஹரிணீம் பஹிர்முகம் க்ருஷ்ணாதிமுகம் வாமகந்து ।
இதி பாடே ஸாமப்ரதி ஸாதி ।

கேவலம் ஶக்திரஹிதம் வாமே கௌரீஸமாயுதம் ।

†ஸிம்ஹாஸநைகபீடம் வா ஸமாஸநஸமாயுதம் ॥ ௫௫ ॥

தத்கௌரீஸம்யுதம் ப்ரோக்தம் ஸிம்ஹாஸநைகதேவ வா ।

ததைவ ஸம்ஸக்தம் தேவதேவ்யௌ பரஸ்பரம் ॥ ௫௭ ॥

தேவோ வரதஹஸ்தேந தேவீம் சைவ குசாஶ்ரிதாம் ।

நடுவிலிருக்கவேண்டும். இவ்விதமாக சக்தியில்லாமல் இருக்கும் கேவல மூர்த்தியானது கூறப்பட்டிருக்கிறது. இனி வாமபாகத்தில் கௌரீதேவியுடன்கூடிய மூர்த்தியைக் கூறுகிறேன். (55½)

ஸமாஸநம் அல்லது பிம்ஹாஸநத்தில் இருக்கும் அம்பாளுடன்கூடிய மூர்த்தியானது, தேவியுடன்கூடிய மூர்த்தியாகும். இதற்கு கௌரீஸம்யுத மூர்த்தி என்று பெயர்.

இடது துடையின் மீது வீற்றிருக்கும் கௌரீதேவியுடன் கூடிய மூர்த்தியானது கௌரீஸம்யுக்தம் என்று கூறப்படும். இந்த மூர்த்தியில் தேவியார் ஸ்வாமியையும், ஸ்வாமி தேவியாரையும் ஆலிங்கனம் செய்துகொண்டிருக்க வேண்டும்.

ஸ்வாமியானவர், தனது இடது மடியில் உட்கார்ந்திருக்கும் தேவியை, வரதஹஸ்தமான தனது கையினாலே

---

†ஸிம்ஹ இத்யாதி 6 ஶ்லோகார்த்தகோ பாட: க்ரந்தாந்தராத் பூரித: ।

ஸிம்ஹாஸநம் இத்யாதி கஸ்யசித் இத்யேதேஷாம் ஶ்லோகைரேவம் பவிதவ்யமிதி பாதி ।

"ஸிம்ஹே பீடே ஏகபீடே தேவ்யா வாமே து ஸம்யுதம் ।
தத்கௌரீஸம்யுதம் ப்ரோக்தம் தேவோரஸ்யாம்ஶ்ரயா யுதம் ॥
ததைவ வ்யாப்தௌ ஸம்யுக்தம் தேவதேவ்யௌ பரஸ்பரம் ।
குக்ஷிம் ஸ்ப்ருஶ்ய து வரதேந தாம் தேவீம் வாமாங்கஸம்ஸ்திதாம் ॥

[illegible] || ரு௮ ||

[illegible] |

[illegible] || ருகூ ||

[illegible] |

[illegible] ||

[illegible] |

[illegible] ||

நடு இடுப்பில் கட்டித்தழுவி இருக்கவேண்டும். அல்லது (ஸ்வாமியின்) பார்சுவஸூத்திரத்திற்கு வெளிப்பக்கத்தில் (ஸ்வாமியின் சரீரத்தோடு சரீரம்ஸம்பந்தித்து இல்லாமல், சிறிதளவு விலகி) தேவியார் இருந்து, அந்த தேவியாரை ஆலிங்கனம் செய்துகொண்டு இருப்பதுமாகும். அவ்விதமே அம்பாள் தனது வலதுகையினாலே ஸ்வாமியை இடுப்பில் ஆலிங்கனம் செய்துகொண்டிருக்கவேண்டும். இவ்விதமாக ஆலிங்கனம் செய்துகொண்டிருக்கும் அம்பாளின் இடது கையில் புஷ்பம் (தாமரைப்பூ) இருக்கவேண்டும்.

அல்லது, தேவியானவள் ஸ்வாமியின் பக்கத்திலுள்ள தனது வலது கையில் தாமரை மலரை வைத்துக்கொண்

[illegible] |

[illegible] || .

[illegible] |

[illegible] ||

[illegible] |

[illegible] ||

[illegible] |

𑌸𑌰𑍍𑌵𑌾𑌭𑌰𑌣𑌸𑌂𑌯𑍁𑌕𑍍𑌤𑌂 𑌪𑍍𑌰𑌭𑌾𑌮𑌣𑍍𑌡𑌲𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 |

𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌾𑌖𑍍𑌯𑌾𑌤𑌂 𑌵𑍃𑌷𑌾𑌰𑍂𑌢𑌮𑌤𑌃 𑌶𑍃𑌣𑍁 || ௬௨ ||

𑌇𑌤𑌿 𑌕𑌾𑌶𑍍𑌯𑌪𑌶𑌿𑌲𑍍𑌪𑍇 𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌶𑍇𑌖𑌰𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌕𑌥𑌨𑌂

𑌨𑌾𑌮 𑌷𑌟𑍍𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 𑌸𑌮𑌾𑌪𑍍𑌤𑌃 ||

டிருப்பதுமாகும். அந்த மலர் நீலோத்பலமாகவும் இருப்பதாகும். இடதுகை தொங்கவிட்டிருக்கவேண்டும். இவ்விதமாக இருக்கும் மூர்த்தியானது ஆலிங்கித மூர்த்தியாகும்.

இவ்விதமாக சந்திரசேகரமூர்த்தியை மூன்றுவிதமாகக் கல்பிக்கவேண்டும். (61)

இந்த மூர்த்தியானது, ஸகலவிதமான ஆபரணங்களையும் அணிந்து பிரபாமண்டலத்துடன் (பிரபாவளியுடன்) இருக்கும் மூர்த்தியாகும். இவ்விதமாகச் சந்திரசேகர மூர்த்தியின் லக்ஷணம் கூறப்பட்டிருக்கிறது. இனி விருஷபாரூட மூர்த்தியின் லக்ஷணத்தைக்கூறுகிறேன். கேட்பாயாக. (62)

காச்யபீய சில்ப சாஸ்திரத்தில்
சந்திரசேகரமூர்த்தி லக்ஷணத்தைக்கூறும்
அறுபத்தாருவது படலம்முற்றும்.



॥ 𑌅𑌥 𑌸𑌪𑍍𑌤𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

𑌵𑍃𑌷𑌵𑌾𑌹𑌨𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌵𑍃𑌷𑌵𑌾𑌹𑌨𑌮𑍂𑌰𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑍁 𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇𑌽𑌧𑍁𑌨𑌾 ।
𑌸𑌮𑌭𑌙𑍍𑌗𑌂 𑌤𑍍𑌰𑌿𑌭𑌙𑍍𑌗𑌂 𑌵𑌾 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌃 ॥ ௧ ॥

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌂 𑌸𑍍𑌵𑌸𑍍𑌤𑌿𑌕𑌂 𑌪𑌾𑌦𑌂 𑌵𑌾𑌮𑌪𑌾𑌦𑌂 𑌤𑍁 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌮𑍍 ।
𑌉𑌷𑍍𑌣𑍀𑌷𑌮𑌧𑍍𑌯𑌵𑌾𑌮𑍇 𑌲𑌲𑌾𑌟𑌂(𑌟)𑌮𑌧𑍍𑌯𑌵𑌾𑌮𑌕𑍇 ॥ ௨ ॥

𑌵𑌾𑌮𑌨𑍇𑌤𑍍𑌰𑌾𑌵𑌸𑌾𑌨𑍇 𑌤𑍁 𑌵𑌾𑌮𑌨𑌾𑌸𑌾𑌪𑍁𑌟𑌾𑌨𑍍𑌤𑌕𑍇 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌸𑍍𑌤𑌨𑌪𑍀𑌠𑌂(𑌠𑍇) 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌵𑌾𑌮𑌨𑌾𑌭𑌿(𑌵𑌾𑌮
𑌨𑌾𑌭𑍇)𑌷𑍁 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇(𑌲𑌕𑌃) ॥ ௩ ॥

𑌵𑌾𑌮𑍋𑌰𑍁𑌮𑌧𑍍𑌯𑌵𑌾𑌮𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑍍𑌯𑍋𑌶𑍍𑌚 𑌮𑌧𑍍𑌯𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।
𑌏𑌵𑌂 𑌤𑍁 𑌸𑌮𑌭𑌙𑍍𑌗𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌨𑌤𑌾𑌂𑌶𑌂 𑌯𑍁𑌕𑍍𑌤𑌮𑌾𑌰𑍍𑌗𑌤𑌃 ॥

அறுபத்தேழாவது படலம்

விருஷவாஹநமூர்த்தி லக்ஷணம்.

இப்பொழுது விருஷவாஹந மூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறுகிறேன். கல்பம்(முறை) அறிந்தவன், இக்கமூர்த்தியை ஸமபங்க லக்ஷணமுடையதாகவாவது, திரிபங்கலக்ஷண முடையதாகவாவது கல்பிக்கவேண்டும். இந்தமூர்த்தியின் வலதுகால் ஸ்வஸ்திதமாகவும் இடதுகால் குஞ்சிதமாகவும் இருக்கவேண்டும்.

உஷ்ணிஷமத்திபத்திற்கு இடதுபக்கம், லலாடமத்தியத்திற்கு இடதுபக்கம், வாம(இடது நேத்திரத்தின் கோடி, வாமநாஸாபுடாந்தம், ஸ்தநபீடத்தின் வலதுபக்கம், நாபி மத்தியத்திற்கு இடதுபக்கம், வாமோருமத்தியம் (வாமோரு-இடதுதுடை) வாமபார்ஷ்ணிமத்யம் (இடது குதிகால்நடு) இந்த இடங்களில் மத்தியஸூத்திரம் தொங்கவேண்டும். இந்தவிடங்களில் மத்தியஸூத்திரம் தொங்கினுல், அது

[illegible]
[illegible] || ௫ ||

[illegible]
[illegible] || ௬ ||

[illegible]
[illegible] || ௭ ||

[illegible]
[illegible] ||

ஸமபங்கமாகும். இதன் நதமானம் (இதில் வணக்கத்தால் ஏற்ப்படும் மானத்தின் குறைவு) 4. அங்குலமாகும். (4)

பூர்வஸூத்திரமானது, முகத்தில் முன்பு கூறியது போலவும், வலது ஸ்தநத்திலும், நாபியின் இடதுபக்கத்தில் 3. அங்குலத்திலும், இடது தொடை நடுவிலும், ஊன்றிய காலின் மணிக்கட்டு நடுவிலும். மத்திய ஸூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். இது அதிபங்க ஸூத்திரலக்ஷண மாகும். இதன் நதமானம் 5. அங்குலமாகும். (நதமானம்—அங்கங்களின் வணக்கத்தாலே குறையும் அளவு.) (6)

ஸ்வாமியின் இடதுகையானது, விருஷபத்தின் தலையின் மீது வைக்கப்பட்டிருக்கவேண்டும். ஹே அந்தணனே! (விருஷபத்தின் தலைமீது வைக்கப்பட்டிருக்கும்) இடது முழங்கையின் தொய்வானது, ஹிக்காஸூத்திரத்திற்குக் கீழே 10, அல்லது 9. அங்குலமாகும். அங்கிருந்து, (ஸ்வாமியின்) ஆஸநஸீமாவானது (பிருஷ்டபாகம் வரையில்) 10, அல்லது 9. அங்குலமாகும்.

---

* [illegible]

𑌵𑍃𑌷𑍋𑌚𑍍𑌚𑌾𑌯𑌾𑌮𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌵𑍃𑌷𑌂 𑌲𑌕𑍍𑌷𑌣𑌵𑌤𑍍 𑌕𑍃𑌤𑌮𑍍
(𑌭𑌵𑍇𑌤𑍍) ।

𑌵𑍃𑌷𑌮𑍂𑌰𑍍𑌧𑍍𑌨𑌿 𑌤𑍁 𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌗𑍍𑌰𑌕𑌮𑍍 ॥

𑌨𑌾𑌭𑌿𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑌮𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌵𑌾 𑌨𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂
(𑌨𑌤𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍) ।

(𑌅𑌧)𑌸𑍍𑌤𑌾𑌤𑍍 𑌤𑌲𑌮𑌧𑍍𑌯𑍇 𑌤𑍁 𑌪𑍂𑌰𑍍𑌵𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌯𑌵𑌦𑍍𑌵𑌯𑌮𑍍 ॥

𑌅𑌧𑍋𑌮𑍁𑌖𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑍍𑌯𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌦𑌰𑍍𑌧𑌂 𑌤𑍁 𑌪𑍍𑌰𑌸𑌾𑌰𑌯𑍇𑌤𑍍 ।
𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑍇 𑌤𑍁 𑌪𑌾𑌰𑍍𑌷𑍍𑌣𑌿𑌰𑍍𑌨𑌾𑌭𑍇𑌰𑌧𑍋
𑌭𑍂𑌯𑌃 ॥ ௧௦ ॥

𑌵𑌕𑍍𑌷𑍇 𑌷𑍋𑌡𑌶𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌵𑌾 𑌨𑌤𑌂 𑌤𑌤𑍍𑌸𑌿𑌂𑌹𑌕𑌰𑍍𑌣𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।

அதற்குக் கீழ் விஷ்டராந்தமானது (பீடம்வரையில்) விருஷபத்தின் உயரமாகும். இவ்விதமாக விருஷபத்தின் உயரம் கூறப்பட்டிருக்கிறது. விருஷபத்தை, லக்ஷணம் பொருந்தியதாக அமைக்கவேண்டும்

விருஷபத்தின் தலையின்மீது வைத்திருக்கும் கையின் நடுவிரலின் நுனியானது, நாபிஸூத்திரஸமமாக இருக்க வேண்டும். அல்லது நாபிக்குக்கீழே 1. அங்குலம் இறங்கியுமிருப்பதாகும். கீழே உள்ளங்கையின் நடுவில் பூர்வஸூத்திரம் 2 யவையாகும். (?) (10)

(அந்தஇடதுகையானது) அதோமுகமாக (கீழ்நோக்காக) கல்பிக்கப்படவேண்டும். அதில் பாதிக்கை விரிந்திருக்க வேண்டும்.

வலது பக்கம் பூர்வஹஸ்தத்தின் பார்ஷ்ணியானது (முழங்கையின் பின்பக்கமானது) நாபிக்குக்கீழே இருக்க வேண்டும். அல்லது (அந்தக்கையானது) 16. அங்குலம் வணங்கி (தொங்கி) ஸிம்ஹகர்ணமாக இருக்கவேண்டும்.

*வக்ஷஸ்தோத்திதம் தஸ்மிந் கண்டயேத் அநாஅவுழ || ௨ ||

ஸ்திதாங்ப்ரஜாத்யா முழ்வ ஹிக்கா
ஸூத்ரம் (த்ர) ஸமந்ததழ |
கநிஷ்டாங்குலிவஸீணா ஸமமந்த்ரம் வக்த்ரயாவிதழ || ௩ ||

லோஹஜம் தாருஜம் வாய வக்ரதண்டவஹ்ம ஸ
ஜாதவேக் |
ஜயஹாநுணிபஸந்தா (ஸாந்தா) ஸமாஜம் தஸந்த
(முஷ்டே)ரழ || ௪ ||

வஞ்சஷ்ட ஸத்ரம் வா வஸாநாங்குலம் தா வா |
†வக(வத)ஹஸ்தயம் சைவ ஹிக்காஸீஸமந்ததழ ||
டங்கம் தக்ஷிணஹஸ்தே து வாமஹஸ்தே ம்ருகம் ஹவெக் |
வரஹஸ்தயாம்ரம் அ ஹிக்காஸூத்ரஸமம் ஹவெக் ||௫||

வாகவிதி அதுவஞ ஜாத ஸமந்தசைவ வா |

... ...
... ... (12)

ஸ்திதபாதத்தின் முழங்காலுச்சியானது ஹிக்காஸூத்திரத்திற்கு ஸமமாக உயர்ந்திருப்பதாகும். சிறுவிரலின் கனமுள்ள அக்கிரமா (நுனியா)னது. 3 வளைவு உடையதாக இருக்கவேண்டும். வக்கிரதண்டத்தை லோஹத்தினுலாவது, மரத்தினுலாவது செய்யவேண்டும். கீழே மணிக்கட்டிலிருந்து ஊருமூலம் வரையில் மத்தியின் ஒதுக்கம் 5, 6, 7, 8, அல்லது 9. அங்குலமாகும், (14½)

பரஹஸ்தம் இரண்டும் கழுத்து மட்டமாக உயர்ந்திருப்பதாகும். வலது கையில் மழுவும் இடது கையில் மானும் இருக்கவேண்டும். பரஹஸ்தம் இரண்டுகளின்

*வக்ஷஸ்யம்? இதி ஸர்வத்ர ஸமாநயபாடஸ்தாகாவா: |

†வரஹஸ்தயம் இதஸ்மிந் ஸ்லோகத்வயம் ஸர்வத்ர ஸமாநபாடஸ்தாநோ ஸ்ரிதம் |

ஜடாமகுடஸம்யுக்தம் ஜடாபாரஸ்து லம்பித: ॥ ௧௭ ॥

ஜய(டா)பாஸமிநோ வாபி கர்துரிச்சாவசாந்நயேத் ।
ஸர்வாபரணஸம்யுக்தம் ரக்தாபம் ரக்தவாஸஸம் ॥ ௧௮ ॥

வாமபார்ச்வே உமாதேவீ தக்ஷிணே வா விசேஷத: ।
ஸ்வஸ்திகம் (ஸௌஸ்திதம்) தக்ஷிணம் பாதம் வாமபாதம் து
குஞ்சிதம் ॥ ௧௯ ॥

உத்பலம் தக்ஷிணே ஹஸ்தே வாமஹஸ்தம் ப்ரஸாரிதம் ।
ஸ்த்ரீமானோக்தவிதாநேந உமாதேவீம் ச காரயேத் ॥ ௨௦ ॥
வ்ருஷவாஹநபாவ்யாதம் ந்ருத்தமூர்த்திமதோவதி(அத்ரெ) ॥

இதி காச்யபசில்பே வ்ருஷவாஹநமூர்த்திலக்ஷணம் நாம
ஸப்தஷஷ்டிதம: படல: ஸமாப்த: ॥

நுனியும் கழுத்துமட்டமாக இருக்கவேண்டும். அல்லது 1, 2, 3, 4; அல்லது 5 அங்குலம் உயரமாக இருப்பதாகும்.

விருஷவாஹந மூர்த்தியானது, ஜடாமகுடம், ஜடாபந்தம், அல்லது தொங்கும் ஜடையையுடையதாகும்: கர்த்தாவின் விருப்பம்போல செய்துகொள்வதாம். இந்த மூர்த்தியானது சிவப்பு வஸ்திரத்தை தரித்து, ஸகல ஆபரணங்களையுமணிந்திருப்பதாகும் (18)

மூர்த்தியின் இடதுபக்கத்தில் உமாதேவியார் இருக்க வேண்டும். விசேஷித்து வலது பக்கத்திலிருப்பதுமாகும். தேவியின் வலது கால் ஸௌஸ்திதமாகவும், இடது கால் குஞ்சிதமாகவும் இருக்கவேண்டும். வலதுகை நீலோத்பலம் தரித்தும் இடதுகை தொங்கவிட்டுமிருக்கவேண்டும். உமா தேவியை ஸ்திரீமானத்தில் கூறியுள்ள விதியின்படி கல்பிக்க வேண்டும். விருஷவாஹந மூர்த்தியின் லக்ஷணம் கூறப் பட்டது. இனி நடராஜமூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறு கிறேன். (21)

காச்யபிய சில்ப சாஸ்திரத்தில் விருஷவாஹனமூர்த்தியின் லக்ஷணத்தைக் கூறும் அறுபத்தேழாவது படலம் முற்றும்

॥ 𑌅𑌥𑌾𑌷𑍍𑌟𑌷𑌷𑍍𑌟𑌿𑌤𑌮𑌃 𑌪𑌟𑌲𑌃 ॥

𑌨𑍃𑌤𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ॥

𑌅𑌥 𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑍇 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌨𑍃𑌤𑍍𑌤𑌮𑍂𑌰𑍍𑌤𑍇𑌸𑍍𑌤𑍁 𑌲𑌕𑍍𑌷𑌣𑌮𑍍 ।
𑌉𑌤𑍍𑌸𑌾𑌹𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌉𑌦𑍍𑌭𑍂𑌤𑌾 𑌚𑌰𑍍𑌮𑌮𑍁𑌣𑍍𑌡𑌿𑌕𑌾 ॥ ௧ ॥

𑌰𑍁𑌰𑍁𑌣𑍍𑌡 𑌵𑌦𑌨𑌂 𑌕𑍃𑌤𑍍𑌵𑌾 𑌹𑍍𑌰𑍀𑌕𑍍𑌯𑌾𑌵𑌣𑌿𑌤𑌂 𑌤𑌥𑌾 ।
𑌹𑌿𑌂𑌸𑍋𑌤𑍍𑌸𑌾𑌹𑌮𑍁𑌖𑌾𑌸(𑌨)𑌨𑌾 𑌦𑍇𑌵𑍀 𑌤𑌤𑍍𑌸𑌾𑌹𑌵𑌾𑌹𑌨 𑌹𑍃𑌦𑌯𑍇 ॥ ௨ ॥

𑌤𑌯𑌾(𑌽)𑌨𑍃𑌤𑍍𑌤𑌂 𑌕𑌰𑌿𑌷𑍍𑌯𑌤𑌿(𑌷𑍍𑌯𑌾𑌮𑌿) 𑌸𑌰𑍍𑌵𑌲𑍋𑌕 𑌹𑌿𑌤𑌾𑌯 𑌵𑍈 ।
𑌦𑍇𑌵𑌾𑌨𑌾𑌂 𑌵𑍃𑌦𑍍𑌧𑌿𑌨𑌾𑌰𑍍𑌥𑌾𑌯 𑌰𑌾𑌜𑌰𑌾𑌷𑍍𑌟𑍍𑌰𑌵𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌾𑌤𑍍 ॥ ௩ ॥

𑌨𑍃𑌤𑍍𑌤𑌷𑍋𑌡𑌶𑌂 𑌹𑍍𑌯𑍇𑌵 𑌤𑍇𑌷𑌾𑌮𑍇𑌕𑌂 𑌪𑍍𑌰𑌵𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑍇 ।

அறுபத்தெட்டாவது படலம்.

ந்ருத்தமூர்த்தி லக்ஷணம்

இனி நடராஜமூர்த்தியின் லக்ஷணத்தை விசேஷித்துக் கூறுகிறேன். சர்மமுண்டிகையானவள் உத்ஸாஹத்தை விருத்தி செய்வதற்காக உண்டானாள். ருருண்டவதனத்தைச்செய்து ... ... (?)

அவள் ஹிம்சையில் உத்ஸாஹமுடைய முகத்தையுடையவளாக இருந்தாள். (அவள் லோக ஹிம்சையைச் செய்யாமல்) ஸுகமாக உட்கார்ந்திருப்பதற்காக, உலகத்திற்கு நன்மையை உத்தேசித்தும், அரசன் தேசம் இவைகள் அபிவிருத்தியடைவதற்காகவும் (பரமேசுவரன்) நர்த்தனம் செய்கின்றார். (3)

பூர்வோக்தல(பஞ்சவேசோக்த)விதிநா க்ராஹ்யம் பிம்பமானம்
விசக்ஷணை: || ௪ ||

உத்தமதசதாலேந ஸர்வாங்கம் பரிகல்பயேத் |
*மாநாங்குலவிம்சம் சைவ துங்கம் ந்ருத்தமூர்த்தேர்
பவேத் || ரு ||

உஷ்ணீஷமத்யாத்ஸவ்யே லலாடமத்யதக்ஷிணே |
த்யக்த்வா சிவாங்குலம் ஸவ்யே நேத்ராந்தே ச புடாந்தகே ||

ஹந்வோ: ஸவ்யே(ஸவ்யே) து ஹிக்காயா மத்யே நாபேஸ்து
மத்யமே |
வாமோருஜங்கயோர் மத்யே(சைவ) ஸ்திதாங்க்ரேர்மத்ய
மத்யமே || ௭ ||

ப்ராக்மார்கமத்ய(யாத்) து பூர்வஸூத்ரம் து
லம்பயேத் |

நர்த்தநமானது 18 விதமாகும். அவைகளில் முதலில் 9 விதமான நடநத்தைக் கூறுகிறேன்.

கீழே பரமேசுவரனுக்குக் கூறப்பட்ட விதியின்படிக்கு, பிம்பமானத்தைக்கொள்ளவேண்டும். ஸகல அங்கங்களையும் உத்தமதசதாலத்தில் கூறியுள்ளபடிக்கு கல்பிக்க வேண்டும். நிருத்தமூர்த்தியின் உயரமானது 120 அங்குலமாகும். (5)

(நடராஜ மூர்த்திக்கு) பூர்வ ஸூத்திரமானது, பிரபா மண்டலமத்தியிலிருந்து, உஷ்ணீஷமத்தியத்திற்கு வலது பக்கம், லலாடமத்தியத்தின் வலதுபக்கத்தில் 1 அங்குலத்திலுள்ள இடம், வலது கண்ணின்கோடி, நாஸாபுடத்தின் வலதுபக்கம், முகவாய்க்கட்டையின் வலது பக்கம், கண்ட மத்தியம், நாபிமத்தியம், இடது துடையின் மத்தியம்,

---

*மாநாங்குலவிம்சத்யம்சம் சைவ ந்ருத்தமூர்த்த்யுந்நதம் பவேத் | இதி பாடோ பாவ்ய: |

ஜாநுஸூத்ராந்தரம் து யவமாத்ராம்ஶமுச்யதே ||௮||

மத்யஸூத்ராந்தரே சைவ ஸார்த்தாம்ஶம் விதீயதே |
ஹிக்காயாம் து ஸூத்ராத்து ஸார்த்தஸப்தாம்ஶமுச்யதே ||

கோடிராவ்ய(ராதி)கவக்ஷாத்ரம்(ஸம்) ஸூத்ராந்தம்
ததைவ ச |
ஊர்த்வகுக்ஷிம் ஸ்ப்ருசேத்வைவம் ஸூத்ரமேவம்
ப்ரலம்பயேத் || ௯ ||

தத்ஸூத்ராத் டோலஹஸ்தாக்ரம் ஸார்த்தஷோடசமாத்ரகம் |
தத்ஸூத்ராதபரஹஸ்தாக்ரம் வேதமாத்ரம் ப்ரகீர்த்திதம் || ௧௦ ||

தத்ஸூத்ராத் அக்நிகராக்ரம் ஸாஷ்டத்ரிம்ஶமாத்ரம் து வா |
அஷ்டாத்ரிம்ஶதிமாத்ரம் வா தத்ஸூத்ராயிமாத்ரமுச்யதே ||௧௧||

ஸ்திதபாதத்தின் கணுக்கால் ஸந்தியின் (முண்டின்) நடு, இந்த இடங்களில் விழவேண்டும். (7½)

நெற்றி, மத்தியஸூத்திரம், இவைகளின் மத்திய அளவு (ஒதுக்கம்) 4½ அங்குலமாகும். கணுக்கால் முண்டு, மத்தியஸூத்திரம் இவைகளின் ஒதுக்கம் 12 அங்குலம் விதிக்கப்பட்டிருக்கிறது. மத்திய ஸூத்திரத்திலிருந்து கண்டமத்தியம் வரையில் ஒதுக்கம் 7½ அல்லது 9½ அங்குலமாகும் பூர்வஸூத்திரமானது, ஊர்துவகுக்ஷியை மேல் வயிற்றைத் தொட்டுக்கொண்டிருக்கவேண்டும். இவ்விதமாக பூர்வஸூத்திரத்தைத் தொங்கவிடவேண்டும். (10)

அந்த ஸூத்திரத்திலிருந்து டோலஹஸ்தாக்கிரம் (ஆடுவதுபோலத் தோன்றும் வலதுகைநுனி) வரையில் ஒதுக்கம் 16½ அங்குலமாகும். அந்த ஸூத்திரத்திலிருந்து மற்றொரு கையாகிய இடதுகையின் நுனியானது 4 அங்குலமாகும். அந்த ஸூத்திரத்திலிருந்து அக்கியை தரித்திருக்கும் (இடது) கராக்கிரம் வரையில் (ஒதுக்கம்) 38 அல்லது 40 அங்குலமாகும். கீழே கூறிய அளவுக்கு மேலே (38

*𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌸𑌮𑍋𑌤𑍍𑌸𑍃𑌤𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌮𑍇 𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌗𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌤𑌲𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑍇 𑌵𑌾 𑌮𑌧𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑍍𑌯𑌗𑍍𑌰𑌪𑌰𑍍𑌵𑌕𑍇 ॥ ௧௩ ॥

𑌮𑌧𑍍𑌯𑌪(𑌰𑍍𑌵)𑌪𑌰𑍍𑌵𑌕𑍇 𑌯𑌥𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌂(𑌯𑌥𑌾𑌯𑍋𑌗𑍍𑌯𑌾)𑌸𑍍𑌥𑌾𑌨𑌕𑌂
𑌪𑌾𑌤𑍍𑌰𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌪𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌯𑌥𑌾𑌧𑌿𑌕𑍍𑌯𑌂(𑌵𑌹𑍍𑌨𑍇𑌃) 𑌪𑌞𑍍𑌚𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂
𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌕𑌮𑍍 ॥ ௧௪ ॥

𑌤𑍁𑌙𑍍𑌗𑌂 𑌸𑌪𑍍𑌤𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌂 𑌵𑌾𑌷𑍍𑌟𑌨𑌵𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌮𑍍 𑌅𑌥𑌾𑌪𑌿 𑌵𑌾 ।
𑌤𑍍𑌰𑌿𑌪𑌞𑍍𑌚𑌸𑌪𑍍𑌤𑌜𑌿𑌹𑍍𑌵𑌾 𑌵𑌾 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 𑌤𑍁 𑌯𑌥𑍋𑌚𑌿𑌤𑌮𑍍 ॥ ௧௫ ॥
†𑌏𑌤𑌾𑌸𑍁 𑌮𑌧𑍍𑌯𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌯𑌾𑌂 𑌕𑍁𑌰𑍍𑌯𑌾𑌦𑍍 𑌵𑌹𑍍𑌨𑌿𑌂 𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌮𑍍 ।

அல்லது 40 அங்குலத்திற்கு மேலே) 3 அங்குலம் கூடுதலாக (43 அங்குலம்) இருப்பதுமாகும். (12)

அந்த ஹஸ்தத்தின் (இடது கையின்) நடுவிரல் நுனியானது ஹிக்காஸூத்திர ஸமமாக (கழுத்து மட்டமாக)த் தூக்கி இருக்கவேண்டும். அக்கினி பாத்திரமானது, அந்த தலத்தின் (இடது உள்ளங்கை) நடுவிலாவது, நடுவிரல் முதலிய விரல்களின் நுனிகளிலாவது, அவைகளின் மத்திய பர்வாக்களிலாவது தரிக்கப்பட்டிருக்கவேண்டும். பாத்திரமின்றி, பாத்திரத்திலிருக்கும் அக்கினியின் அகலம் 5 அங்குலமாகும். அந்த அக்கினியின் உயரமானது 7 8 அல்லது 9 அங்குலமாகும். அந்த அக்கினியின் ஜிஹ்வைகள் (தீச்சுடர்கள்) 3, 5, அல்லது 7 இருப்பதாகும். இவைகளில் மனதிற்குகந்தபடி கல்பித்துக்கொள்ளுவதாகும். (15)

இச்சுடர்களில் நடுச்சுடர் `வலமாக இருக்கவேண்டும்.

---

*𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑌮𑌂 𑌤𑍁 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌤𑌲𑌮𑌧𑍍𑌯𑌾𑌙𑍍𑌗𑍁𑌲𑌾𑌗𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌃 𑌸𑌾𑌧𑍍𑌵𑌿𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿 ।

†𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑍁 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑌾𑌵𑌰𑍍𑌤𑌾𑌃 𑌕𑌰𑍍𑌤𑌵𑍍𑌯𑌾 𑌹𑍍𑌯𑌗𑍍𑌰𑌤𑌸𑍍𑌤𑍁 𑌤𑌾𑌃 ।
𑌇𑌤𑌿 𑌪𑌾𑌠𑌃 𑌸𑌾𑌧𑍍𑌵𑌿𑌤𑌿 𑌭𑌾𑌤𑌿 ।

தக்ஷிணே பூர்வஸூத்ராத்து பாஹ்வக்ரம் விம்ஶகம்
கலா (விம்ஶகம் மாத்ரகம்) || ௧௮ ||

தஸ்மாதக்ராத்ஸ்ரிகே ஹஸ்தே மணிபந்தஸ்ய பாஹ்யகம் |
‡அஷ்டாவிம்ஶதிமாத்ரம் வா த்ரிம்ஶகம் மாத்ரமேவ வா || ௧௯ ||

சத்வாரிம்ஶதிமாத்ரம் வா வாம(ச)கம் வ்யாக்ரமேண து |
தத்கண்டமணிபந்தோர்த்வம் ஹிக்காஸூத்ரஸமம் பவேத் ||

டக்காமத்யம் வீத்ய ஸூசீகர்ணாந்தஸமுந்நதம் |
தர்ஜந்யக்ரம் து ஸூசீ ஸ்யாத் தர்ஜநீ ரஜநீ
(து ஸுஜா:) பவேத் || ௨௰ ||

அதவா அஷ்ட ஸூத்ரம் து விம்ஶீ(வீம்)ஶ்யாம் மாத்ரோ
வரி |

வலது பக்கத்தில், பூர்வ ஸூத்திரத்திலிருந்து பாஹு வக்கிரம் (கைநுனி) வரையில் ஒதுக்கம் 20 அங்குலமாகும். அங்கிருந்து (அந்த மத்தியஸூத்திரத்திலிருந்து) உடுக்கையுடன்கூடிய வலது கையின் *மணிக்கட்டின் வெளிப்பக்கமானது 28 அல்லது 30 அங்குலமாகும். 40 அங்குலம் வரையில், முறையே கூடுதலாகக் கல்பித்துக் கொள்ளுவதுமாகும். அந்தக் கையின் மணிக்கட்டின் உச்சியானது, கழுத்து மட்டமாக இருக்கவேண்டும். (18)

ஸூசீஹஸ்தமானது (வலது கையானது) உடுக்கை நடுவைப்பிடித்து, காது வரையில் உயர்ந்திருக்கவேண்டும். சுட்டுவிரல் நுனியானது ஸூசீமுகமாக இருக்கவேண்டும்.

---

‡அஷ்டத்ரிம்ஶதிமாத்ரம் வா சத்வாரிம்ஶதிமேவ வா |
சத்வாரிம்ஶதிமாத்ரம் வா வாமஹஸ்தஸ்ய பார்ஶ்வயோ: || இதி முத்ரிதபுஸ்தகபாட: |

*மணிக்கட்டின் வெளிப்பக்கமானது 38 அல்லது 40 அங்குலமாகும் இடது கையின் வலப்பக்கங்களில் 40 அங்குலமாகும். என்பது அச்சிட்ட புத்தகத்திலுள்ள பாடம்.

ஸூத்ரமத்யகோவரிஷ்டாத்து பந்தனம் வஸிகல்பயேத் || ௨௦ ||

பந்தனோத்ஸேதவிஸ்தாரம் வஸுவஹ்னாங்குலம் க்ரமாத் |

மத்யம் த்ர்யங்குலவ்யாஸம் பத்மாகாரம் ப்ரகல்பயேத் ||

வலயத்வயஸம்யுக்தம் சர்மஸூத்ரேண பந்திதம் |

கவ்யசர்மகதம்பம் தம் தச்சர்மேண து காரயேத் ||

ஸூச்யக்ராத் கர்ணஸீமாந்தம் சத்வாரிம்சதங்குலம் |

பஞ்சசத்வாரிம்சத்வா பஞ்சாசதங்குலம் து வா ||௨௩||

பார்ச்வஸூத்ரஸமம் ஸூசீ வித்யாத்யாஸ்யே ஏத்யங்குலம் |

சுட்டுவிரலானது ரஜ்ஜியாக (?) (நேராக) இருக்க வேண்டும்.

அல்லது (உடுக்கையின் நடுவில் இழுத்துக்கட்டியிருக்கும்) சர்மஸூத்திரமானது (கயிறு போன்ற வாரானது) பீடம் போன்ற நடுவிரலுக்குமேலே இருக்கவேண்டும். உடுக்கையை அணிவிரலின்மீது கல்பிக்கவேண்டும். (20)

உடுக்கையின் நீளமும் அகலமும் முறையே 8 அங்குலமும், 5 அங்குலமுமாகும். அதன் மத்தியத்தின் அகலமானது, 3 அங்குலமாகும். இதை பத்மாகாரமாகக் கல்பிக்கவேண்டும். அது இரண்டு வளையங்களுடன்கூடியதாக தோல்க்கயிற்றினாலே கட்டப்பட்டிருக்கவேண்டும். (இந்த உடுக்கையானது) பசுமாட்டின் தோலாலே உருவகப்படுத்தப்பட்டிருக்கவேண்டும். இதை பசுமாட்டின் தோலாலேதான் கல்பிக்கவேண்டும். (22)

ஸூச்சியக்கிரத்திலிருந்து (சுட்டுவிரல் நுனியிலிருந்து) காதுவரையில் ஒதுக்கமானது 40 அங்குலமாகும். 45 அங்குலம் அல்லது 50 அங்குலமிருப்பதுமாகும். ஸூசியானது பார்சுவஸூத்திரத்திற்கு ஸமமாக இருக்கவேண்டும்.

... ... (23½)

𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌪𑍂𑌰𑍍𑌵𑌹𑌸𑍍𑌤𑌂 𑌤𑍁 𑌅𑌭𑌯𑌂 𑌪𑌰𑌿𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥௨௪॥

𑌪𑍍𑌰𑌾𑌕𑍍𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌦𑌭𑌯𑌹𑌸𑍍𑌤𑌸𑍍𑌯 𑌮𑌧𑍍𑌯𑌾𑌂𑌤𑌂 𑌜𑌿𑌨𑌮𑍍 ।
𑌤𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑌾𑌂𑌗𑍁𑌲𑍍𑌯𑌗𑍍𑌰𑌂 (𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌗𑍍𑌰𑌂) 𑌤𑍁 𑌹𑌿𑌕𑍍𑌕𑌾𑌸𑍂𑌤𑍍𑌰𑌸𑌮𑌂
𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௨௫ ॥

𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 𑌤𑌤𑍍𑌕𑍂𑌰𑍍𑌪𑌰𑌾𑌨𑍍𑌤𑌂 𑌦𑍍𑌵𑌿𑌚𑌤𑍍𑌵𑌾𑌰𑌿𑌂𑌶𑌤𑍍
𑌦𑍍𑌵𑌿(𑌤𑍍𑌰𑌿)𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ।
𑌅𑌭𑌯𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌮𑌧𑍍𑌯𑍇 𑌸𑌰𑍍𑌪𑌵𑌲𑌯𑌂 𑌪𑍍𑌰𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ॥ ௨௬ ॥

𑌪𑍍𑌰𑌕𑍋𑌷𑍍𑌠𑌮𑌧𑍍𑌯𑌤𑌾𑌲𑌂 𑌸𑍍𑌯𑌾𑌤𑍍 𑌸𑌾𑌰𑍍𑌧𑌂 𑌤𑌸𑍍𑌯
𑌚𑍈𑌵 𑌦𑍈𑌰𑍍𑌘𑍍𑌯𑌕𑌮𑍍 ।
𑌤𑌸𑍍𑌯𑍋𑌪𑌰𑌿(𑌸𑍍𑌯𑍋𑌰𑍍𑌧𑍍𑌵𑌂)𑌪𑌰𑌿𑌵𑍍𑌯𑌾𑌪𑍍𑌤𑌂 𑌪𑌟𑌂 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌂
𑌭𑌵𑍇𑌤𑍍 ॥ ௨௭ ॥

𑌸𑌪𑍍𑌤𑌾𑌂𑌶𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌵𑌿𑌸𑍍𑌤𑌾𑌰𑌂 𑌤𑍁 𑌪𑌟𑌕𑍋𑌣𑌂 𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌭𑌵𑍇𑌤𑍍 ।
𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌯𑍋𑌸𑍍𑌤𑌾𑌲𑌸𑌮𑌂 𑌤𑍁 𑌜𑌿𑌹𑍍𑌵𑌾𑌦𑍍𑌵𑌯𑌂(𑌦𑍍𑌵𑌯𑌂)
𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ॥ ௨௮ ॥

வலது பக்கத்தில் பூர்வ ஹஸ்தத்தை அபய ஹஸ்தமாக கல்பிக்கவேண்டும். பூர்வஸூத்திரத்திலிருந்து அபயஹஸ்தத்தின் மத்தியமானது (மத்தியம் வரையில் ஒதுக்கம்) 24 அங்குலமாகும். அந்தக்கையின் நடுவிரல் நுனியானது, ஹிக்காஸூத்திரத்திற்கு ஸமமாக இருக்கவேண்டும். மத்தியஸூத்திரத்திலிருந்து அந்தக்கையின் முழங்கைவரையிலுள்ள ஒதுக்கம் 42 (40) அங்குலமாகும். அபய ஹஸ்தத்தின் ப்ரகோஷ்டம் (முன்கை) நடுவிரல், ஸர்ப்ப வலயத்தைக் கல்பிக்கவேண்டும். அந்த ஸர்ப்பத்தின் நீளமானது நடுமுன்கையின் சுத்தளவைப்போல் 1½ பங்கு இருக்கவேண்டும். அந்த 1½ பங்கு நீளத்திற்குமேலே, படமானது 12 அங்குலம் உயர்ந்திருக்கவேண்டும். அந்தப் படத்தின் அகலமானது 7 அங்குலமிருக்கவேண்டும். அதன்

𑌭𑍁𑌜𑌂𑌗𑌵𑌲𑌯𑌂 𑌹𑍍𑌯𑍇𑌵𑌂 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 𑌕𑌲𑍍𑌪𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑌃 ।
𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 𑌕𑌕𑍍𑌷𑌾𑌨𑍍𑌤𑌰𑌂 𑌸𑌵𑍍𑌯𑍇 𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑍇 𑌦𑍍𑌵𑌾𑌦𑌶
𑌮𑌾𑌤𑍍𑌰𑌕𑌮𑍍 ॥ ௨௯ ॥

𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌨𑍍𑌮𑌧𑍍𑌯𑍋𑌦𑌰𑌂 𑌵𑌾𑌮𑍇 𑌨𑌵𑌾𑌂𑌗𑍁𑌲𑌮𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌮𑍍 ।
*𑌨𑌵𑍋𑌤𑍍 𑌪𑌿𑌣𑍍𑌡𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌦𑌷𑍍𑌟𑌾
𑌦𑌶𑌾𑌂𑌗𑍁𑌲𑌮𑍍 ॥ ௩௰ ॥

𑌸𑍂𑌤𑍍𑌰𑌾𑌤𑍍 𑌕𑍁𑌞𑍍𑌚𑌿𑌤𑌜𑌾𑌨𑍍𑌵𑌨𑍍𑌤𑌂(𑌮𑌧𑍍𑌯𑌂) 𑌘𑌨𑌂 𑌤𑍁
𑌦𑌶𑌾𑌂𑌗𑍁𑌲𑌮𑍍 ।
𑌨𑌵𑌾𑌂𑌗𑍁𑌲𑌂 𑌅𑌷𑍍𑌟𑌮𑌾𑌤𑍍𑌰𑌂 𑌜𑌾𑌨𑍁𑌨𑍀𑌵𑍍𑌰𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥

𑌜𑌾𑌨𑍁𑌨𑍍𑌨𑌦𑌶𑌾𑌂𑌗𑍁𑌲𑍍𑌯𑌂 𑌨𑌤𑌨𑌾𑌹𑌂 𑌤𑍁 𑌕𑌲𑍍𑌪𑌯𑍇𑌤𑍍 ।

கனம் 1 அங்குலமாகும். அந்த ஸர்ப்பமானது, நீண்ட நாக்கையுடையதாக முன்பக்கத்திலிருப்பவர்களைப் பார்த்துக்கொண்டிருக்கவேண்டும். முறையறிந்தவன், இவ்விதமாக புஜங்க வலயத்தைக் கல்பிக்கவேண்டும். (28½)

மத்திய ஸூத்திரத்திலிருந்து, வலது பக்கத்தில் கக்ஷாந்தரமானது 12 அங்குலமாகும். மத்தியஸூத்திரத்திலிருந்து இடது பக்கத்தில் மத்தியோதரமானது, 9 அங்குலமாகும். *பிண்ட ஸூத்திரமானது 9 முதல் 18 அங்குலமாகும். (?) (30)

மத்திய ஸூத்திரத்திலிருந்து குஞ்சிதபாதத்தின் முழங்கால் வரையில் மத்தியிலுள்ள ஒதுக்கம், 10, 9 அல்லது 8 அங்குலமாகும். அந்த குஞ்சிதபாதத்தின் நத

---

*𑌵𑌾𑌮𑍇𑌷𑍍𑌟𑌿𑌕𑍍 𑌪𑌿𑌣𑍍𑌡𑌸𑍂𑌤𑍍𑌰𑌂 𑌤𑍁 𑌇𑌤𑌿 𑌵𑌾𑌚𑍇 𑌸𑌾𑌧𑍍𑌵𑌿𑌤𑌿
𑌭𑌾𑌤𑌿 ।

*மத்திய ஸூத்திரத்திலிருந்து, இடது பக்கத்தில் பிருஷ்டபாகம் வரையில் ஒதுக்கம் 18 அங்குலமாகும் என்று இருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

स्थिताङ्घ्रिजानोर्वामाङ्घ्रिजान्वन्तं यथाक्रमम् ॥

त्रिपञ्चमनुमात्रं वा जानोरन्यान्तरं त्रिधा ।
स्थिताङ्घ्रिनलकामध्यात् वामपार्ष्ण्यन्तरं बुध ॥

सवेदाब्ध्यङ्गुलं स्याद्वा सान्तमानं प्रकीर्त्यते ।
सप्तषष्ठ्यङ्गुलं सांशं नतं भवेत् ॥

*स्थितजानोरुद्धृताङ्घ्रिपार्ष्णिमध्यात् ।
त्र्यधिकत्रिंशदङ्गुलं वा जानुपार्ष्ण्यन्तरं विदुः ॥ ௩௫ ॥

மானமானது. (நதமானம்—செரிவின் அளவு) 12, 11, அல்லது 10 அங்குலம் இருக்கும்படி கல்பிக்கவேண்டும்.

ஸ்திதபாதத்தின் முழங்காலிலிருந்து இடதுகால் முழங்கால் வரையில் ஒதுக்கம் முறையே 3 அங்குலம், 5 அங்குலம் 14 அங்குலம் என்று 3 விதமாகும்.

புத்தியில் சிறந்தவனே! ஸ்திதபாதத்தின் நளகையின் நடுவிலிருந்து (நளகை—கணுக்காலுக்கு மேலே கண்டைக் காலில் சிறுத்திருக்குமிடம்) இடது குதிகால் வரையிலுள்ள ஒதுக்கம் 44 அல்லது 45 அங்குலமாகும், என்று விதிக்கப் பட்டிருக்கிறது (உத்திருதபாதத்தின்) நதமானமானது 45, 46, 47, அல்லது 48 அங்குலமாகும். (நதம்—சாய்வு அல்லது செறிவு) (34)

ஸ்திதபாதத்தின் முழங்காலிலிருந்து உத்திருதபாதத்தின் (தூக்கியகாலின்) குதிகால்வரையில் ஒதுக்கம் 34 அல்லது 33 அங்குலமாகும். இது ஜாநுபார்ஷ்ணியந்தரமாகும். (இது ஊன்றியபாதத்தின் முழங்காலுக்கும், தூக்கியபாதத்தின் குதிகாலுக்கும் மத்தியிலுள்ள அளவாகும்.) (35)

---

*अयं श्लोकार्धः सर्वत्र मातृकाकोशेषु न दृश्यते । स्थितजानोरुद्धृतपार्ष्ण्यन्तमिति पाठे साधु प्रतिभाति ।

குஞ்சிதாங்க்ரேஸ்து ஜாநூர்த்வம் நாபிஸூத்ரஸமம்
ப⁴வேத் |

கூர்பரம் டோலஹஸ்தஸ்ய ஸ்யாத்(ஹஸ்ய) நாளஸூத்ராத்
(மத்யஸூத்ராத்)தசாங்குலம் || ௩௬ ||

ஏகாதசாங்குலம் வாபி கல்ப்யம் வா கூர்பராந்தகம் |
தத்³த⁴ஸ்தமணிப³ந்தா⁴த்து வாமஜாநுகசேஷு || ௩௭ ||

தசாங்குலம் வா கர்தவ்யம் நவாங்குலமதாப்யதம்
(மதாபி வா) |

*டோலஹஸ்தஸ்ய விஸ்ருஷ்டஸ்ய(விஸ்ருஷ்டஸ்ய)ங்குல்யக்³ரம்
விசேஷத: || ௩௮ ||

†வாமபாதே து ஜங்காத்³யந்தம் ஷடங்குலம் ப⁴வேத் |(?)

தூக்கியகாலின் முழங்காலின் உச்சியானது நாபிமட்டமாக இருக்கவேண்டும். டோலஹஸ்தத்தின் முழங்கையானது நாளஸூத்திரத்திலிருந்து (மத்திய ஸூத்திரத்திலிருந்து) 10 அல்லது 11 அங்குலம் (ஒதுக்கம்) இருக்கும்படி கல்பிக்கவேண்டும். அந்த (டோல) ஹஸ்தத்தின் மணிக்கட்டிலிருந்து, இடது முழங்கால் வரையில் (ஒதுக்கம்) 10 அல்லது 9 அங்குலமாகும். டோலஹஸ்தத்தில் தொங்கவிடப்பட்டிருக்கும் விரல் நுனியானது விசேஷித்து (அந்த அளவில்) இருப்பதாகும். * (38)

---

*டோலஹஸ்தே து மாநம் வா ஏகாதசாங்குலமதாபி வா |
இதி ஸரஸ்வதீமஹாலயபுஸ்தகபாட²: |

†வாமபாதே து ஜங்காமத்⁴யஸூத்ரஸ்யைவ ப⁴வேத் |
இதி பாடா²ந்தர ஸாங்கேதிக பாதி

* டோலஹஸ்தத்தின் அளவானது 11 அங்குல்மாகவும் இருப்பதாகும். என்பது ஸரஸ்வதி மஹால் நூலிலுள்ள பாடம்.

नवांशमात्रकं वापि रुद्रांशमात्रयोऽपि वा ॥

दोलहस्तादभयान्तं (तु वरदहस्तान्तं) तु
दशांशमात्रकम् ।

अनुक्तान्यन्तराणीव यथा शोभावशात्तथा ॥ ४० ॥

केशान्ताद्बकपक्षं स्यात् तुङ्गमष्टादशांशमात्रकम् ।
सप्तदशांशमात्रं वाथ षोडशांशमात्रमेव वा ॥ ४१ ॥

तदर्धं वा त्रिपादं वा तस्य विस्तारमेव हि ।
संविकीर्णजटाभारं पञ्चषट्सप्तनव(कं) ॥

रुद्रसंख्या तु वा विस्तृ उभयोः पार्श्वयोर्लम्बया ।
द्वात्रिंशन्मात्रमारभ्य एकषष्ट्यंशमात्रकम् ॥

अंशमात्रं मात्रवृद्ध्या तु जटादीर्घमुदाहृतम् ।
लम्बजटादीर्घमेवं तस्मादुक्तं तु लम्बके ॥

இடது முழங்கால், மத்தியஸூத்திரம் இவைகளின் ஒதுக்கம் 9 அல்லது 11 அங்குலமாகும். டோலஹஸ்தத்திலிருந்து அபயஹஸ்தம் (?) (வரதஹஸ்தம்) வரையில் ஒதுக்கம் 10 அங்குலமாகும். இங்கு கூறப்படாத மற்ற ஒதுக்கங்களை அழகாக இருக்கும்படி அமைத்துக்கொள்ள வேண்டும். (40)

கேசாந்தத்திலிருந்து பகபக்ஷத்தின் உயரமானது 18, 17, அல்லது 16 அங்குலமாகும். அதன் அகலமானது அதன் உயரத்தில் ஸரிபாதி அல்லது ¾ பங்கு இருப்பதாகும். ஜடைகள் விரிந்து தொங்குவதானால் அவைகள் 5, 6, 7, 9 அல்லது 11 சடைகளாக இருக்கவேண்டும். ஜடையின் நீளமானது, 32 அங்குலம் முதல் 61 அங்குலம் வரையில் ஒவ்வொரு அங்குலம் வீதமாக நீண்டிருப்பதாகும். தொங்கும் சடையின் நீளமானது இவ்விதமாகக் கூறப்

கநிஷ்டாங்குலிவிஸ்தீர்ணா ஜடா நாஸோர்த்வாஸ்ரிதம் ।
ஜடாக்ரம் புஷ்பமாலாஹிரர்க்கோந்மத்த(கம்)விபூஷித: ॥ ௪௫ ॥

நாகம் சைவார்க்கபுஷ்பம் ச உந்மத்தகுஸுமம் ததா ।
ஹஸ்திசிரீஷகம் சைவ கரோடரத்நபந்தநம் ॥ ௪௬ ॥

*ஜஷயிக்வா து பார்ச்வே தக்ஷிணே ஸம்ப்ரஸேவநம் ।
†ஸிம்ஹசர்மாம்சுகதரோ ரத்நஹாரஸூத்ர விலம்பிதம் ॥

பஸ்மோத்தூளிதஸர்வாங்கம் கிஞ்சித்ப்ரஹஸிதாநநம் ।
யஜ்ஞோபவீதஸம்யுக்தம் ஹாரகேயூரபூஷிதம் ॥ ௪௭ ॥

§தேவ்யாம்ப்ரதோர்த்வே பார்ச்வே பாஹுமாலேப்ருதிமத்தி: ।

பட்டிருக்கிறது. கேசாந்தத்திற்குமேலே தலையின்மேலே யிருக்கும் சடைகள், சிறுவிரலின் கனமுள்ளவைகளாக இருக்கவேண்டும். (44½)

நடராஜமூர்த்தியானது விசேஷித்து ஜடையில் புஷ்பமாலை, ஸர்ப்பம், எருக்கம்பூ, ஊமத்தம்பூ, ஹஸ்திசிரீஷம், (பெருவாகைப்பூ) கரோடரத்நபந்தனம். (மண்டையோடுகளுடன் கூடிய ரத்நாபரணம்) இவைகளாலே அலங்காரம் செய்யப்பட்ட ஜடாமகுடத்தையுடையதாகும். ஸிந்தூரத்தினாலே அலங்கரிக்கப்பட்டிருப்பதாகும். (கழுத்தில்) மாலைகளும் ஹாரங்களும் தொங்கிக்கொண்டிருப்பதாகும்.

இந்த மூர்த்தியானது திருநீறணிந்து சிரித்தமுகமும்,

---

*ஜஷம் யுக்வா இதி புஸ்தகபாட: ।

†ஸிம்ஹசர்மாம்சுகதரோ ரக்தாம்பர விலம்பிதம் ॥ இதி புஸ்தகாந்தரபாட: ।

§தேவ்யாம்ஸோத்தரே பார்ச்வே பாஹு... ... ... । இதி ஸரஸ்வதீமஹாலயபுஸ்தகபாட: ।

தேவ்யாம்ஸோத்தரே பார்ச்வே து பாஹுமாலாப்ருதிமத்தி: । இதி வா பாடஸ்ஸாத்விதி பாதி ।

ப்ரஹாரேணோர ஸ்ரீபிர்த்யாதிரூபாம்ப்ரகோ விஸ || ௪௯ ||

வ்யாக்ரசர்மாம்பரோபேத ஊர்வர்த்தம் மதி(உத்தராயதா)

வஸநகம் |

†ஸோத்தபாஹ்வோர்த்ரபாஸம் வ்யாக்ரசர்மோத்தரீயகம் ||

த்ரம்பகம் பாஹுமூலே து ஸார்த்த த்ரயோதசாங்குலம் |

தத்வயம் வா த்ரிபாகம் வா விஸ்தாரம் அஸ்ய (தஸ்ய)

வர்த்துலம் || ௫௧ ||

பாதௌ ச பாதஸரை: யுக்தௌ ஸர்வாபரணபூஷிதௌ |

யஜ்ஞோபவீதமும், ஹாரமும் தரித்திருப்பதாகும். (48)

ஸ்வாமியின் உதரமத்தியம் (நடுவயிறு) வரையில் பாஹுதாமாக்கிரமானது (கையிலணிந்த மாலையின் நுனியானது) தொங்கிக்கொண்டிருக்கவேண்டும்.

உதரபந்தத்தின் அக்கிரமானது (வயிற்றில் இறுக்கிக் கட்டியுள்ள கயிற்றின் நுனிகள்) பிரபாமண்டலத்தை (பிரபாவளியைத்) தொட்டிருக்கவேண்டும்.

துடையின் மத்தியபாகம் வரையில் புலித்தோலை ஆடையாக அணிந்திருக்கவேண்டும்.

டோலஹஸ்தத்திற்குமேலே அணிந்து கட்டப்பட்ட புலித்தோலாலான மேலாடையை அணிந்திருக்கவேண்டும். அந்த ஆடையானது பாஹுமூலத்தில் (கையினடியில்) 12 அல்லது 13 அங்குலமாகும். அந்த அளவில் ஸரிபாதி; அல்லது ⅓ பங்கு அதன் அகலமிருக்கவேண்டும். அது வட்டமாக இருக்கவேண்டும். (51)

இருபாதங்களும் பாதஸரமணியப்பெற்றிருக்க வேண்டும். ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்

---

†ஸோத்தபாஹ்வோர்த்ரபாஸம் வ்யாக்ரசர்மோத்தரீயகம் | இதி பாடம் ஸாத்வுசித ஸாதி |

ஹஸ்தபாதாங்குல்யஸ்ஸர்வா: ரத்நஹேமாங்குலீயகா: || ௫௨ ||

மத்யமாங்குலிவிநிர்ஹிதாச்சேஷா: ஸாங்குலீயகாந்விதா: ।
தக்ஷிணம் குஞ்சிதம் வாமமபஸ்மாரோபரிஸ்திதம் || ௫௩ ||

திர்யக் பாததலம் ந்ருத்யம் ந்ருத்தம் குர்வந்மஹேச்வர: ।
வாமபாதம் ஸமுத்த்ருத்ய ஸதிர்யக் தக்ஷிணாவிதம் || ௫௪ ||

டோலஹஸ்தமபஸ்மாரமிஹேத்யுபதர்சிதே ।
‡த்ரி சது:பஞ்சமாத்ரம் வா ஹ்யபஸ்மாரஸ்ய தைர்க்யகம் ||

உஷ்ணீஷம் சைகமாத்ரம் கேசாந்தம் ச ததா பவேத் ।

டிருக்கவேண்டும். கை விரல்கள் கால் விரல்கள் எல்லா வற்றிலும் ரத்நங்கள் பதித்த ஸுவர்ணமோதிரங்கள் இருக்கவேண்டும். நடுவிரல் நீங்கிய விரல்கள் யாவும், மோதிரங்களுடனிருக்கவேண்டும்.

வலது கால் குஞ்சிதமாகவும், இடதுகால் அபஸ்மாரன் மீது வைக்கப்பட்டுமிருக்கவேண்டும். பரமேசுவரன், பாத தலத்தை குறுக்காக வைத்துக்கொண்டு நிருத்தம் செய்து கொண்டிருப்பவராவார். இடது காலைத்தூக்கி வலது பக்கத்தில் குறுக்கே (நீட்டிக்கொண்டு) இருப்பவராவார். டோலஹஸ்தமானது முற்றிலும் அபஸ்மாரன் இதோ (எனது காலின் கீழே) இருக்கிறான் என்று சுட்டிக்காட்டுவதாகும். * அபஸ்மாரனுடைய உயரமானது 3, 4, அல்லது 5 அங்குலமாகும் ?

(அபஸ்மாரனுடைய சரீரத்தில்) உஷ்ணீஷம் 1 அங்

---

‡த்ரி ஷட்பஞ்சமாத்ரம் வா இதி ஸரஸ்வதீமஹாலயபாட: ।
த்ரி சது:பஞ்சமாத்ரம் வா இதி பவேதிதி பாதி ।

* அபஸ்மாரனுடைய உடலானது 3, 4, அல்லது 5 வளைவு அல்லது நெளிவு உடையதாகும். என்பது ஸரஸ்வதி மஹால் நூலிலிருக்கும் பாடம்.

கேஶாந்தம் து ஸர்வாயாமம் மத்யமாங்குலம் பவேத் ||

ஸப்தாங்குலவிஸ்தாரம்(ஆயாமம்) கண்டஸ்ய து விஶேஷத꞉ |
